மன்றம்

ஆசிரியர்:
இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.

– 7 – 56

★

அலை 4



நண்பருக்காகத் தன்னலம் துறக்கும் தன்மை

★

அறிஞர் அண்ணா அவர்கள் சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் ஆனர்சு வகுப்பில் படித்துக்கொண்டிருந்த போது, சம்பந்தம் என்பவர் அண்ணாவோடு ஒரே வகுப்பில் படிக்கும் மாணவராகவும், அண்ணாவுக்கு உற்ற நண்பராகவும் விளங்கிவந்தார். இருவரும் இணைபிரியா நண்பர்களாக இருந்து ஒரே அறையில் உறைவது, ஒன்றாக இருந்து படிப்பது, ஒன்றாகச் சேர்ந்து கல்லூரிக்குச் செல்வது, ஒன்றாகச் சேர்ந்தே எல்லாக் கடமைகளையும் செய்வது ஆகிய பழக்கங்களைக் கொண்டிருந்தனர்.

சம்பந்தம் என்ற அந்த நண்பர் இயல்பாகவே அச்சம், நாணம், வெட்கம், கூச்சம் ஆகிய பண்புகளுக்கு இரையானவர். அவர் எங்கே போவதானாலும், எந்தச் செயலைச் செய்வதானாலும் அண்ணா அவர்கள்தாம் அவருக்கு உற்றதுணை. அவருடைய இயல்பு இரங்கத்தக்கதாக இருந்த காரணத்தால்தான், அண்ணா அவர்கள் அவருக்கு உற்ற நண்பராகவும், உறுதுணையாகவும் விரும்பியிருந்துவந்தார்கள்.

அண்ணா அவர்கள் பொதுவாக ஊண் உறக்கமின்றி விழுந்து விழுந்து ஓயாமல் படித்துக்கொண்டேயிருக்கும் பழக்கத்தைக் கொண்டிருந்தவரல்லர். தேர்வுக்குச் சில நாட்களுக்கு முன் இரண்டொருமுறை பாடப்புத்தகங்களைப் புரட்டிப்பார்ப்பது, அந்த அளவிலே பாடங்களை உள்ளத்திலே பதியவைத்துக்கொள்வது, யாதொரு அச்சமோ மனக்கலக்கமோ இல்லாமல் தேர்வு எழுதி வெற்றிபெறுவது என்ற பழக்கத்தைக் கொண்டிருந்தார். அவரது நண்பரோ நேர்மாறான பழக்கத்தைக் கொண்டிருந்தவர்; ஓயாமல் படித்துக்கொண்டே இருப்பார், அச்சத்தோடு தேர்வு எழுதுவார், அண்ணாவைவிடக் குறைவான எண்கள் பெறுவார்.

இருவரும் தம்மை நல்ல முறையில் ஆயத்தப்படுத்திக்கொண்டு முடிவுத் தேர்வாகிய ஐந்தாவது ஆனர்சுத் தேர்வில் கலந்துகொண்டு எழுதினார்கள். மூன்று நாட்கள் அண்ணா அவர்கள் நல்ல முறையில் வெற்றிபெறும் மனஉறுதியோடு தேர்வுத் தாள்கள் எழுதினார்கள். ஆனால் அவரது நண்பரோ மிகமிக அச்சமுற்று, மனங் கலங்கி, தேர்வுத்தாள்களைச் சரிவர எழுதவில்லை. மேற்கொண்டு மூன்று நான்கு நாட்கள் எழுதவேண்டியிருந்தது. ஆனர்சு வகுப்பில் படிப்பவர் எல்லாத் தாள்களையும் எழுதாமல், மறு ஆண்டில் எழுதுகிறேன் என்று கேட்டுக்கொண்டால்தான், மறு ஆண்டுத் தேர்தலில் கலந்துகொள்ளப் பல்கலைக்கழகத்தார் அனுமதிப்பார்கள். அதன்படி அண்ணாவின் நண்பர் மேற்கொண்டு தேர்வுத் தாள்களை எழுதாமல் மறு ஆண்டுத் தேர்வில் கலந்துகொள்வது என்று முடிவு செய்தார். அத்தோடு நிற்காமல் அவர் அண்ணா அவர்களைப் பார்த்து, “நீயும் மேற்கொண்டு தேர்வு எழுதவேண்டாம், நின்றுவிடு. இருவரும் சேர்ந்து அடுத்த ஆண்டு எழுதுவோம். நீ இப்பொழுது எழுதி வெற்றி பெற்றுவிட்டால், அடுத்த ஆண்டு என்னோடு சேர்ந்து படிக்கவோ, தேர்வு எழுதவோ வேறு யாரும் துணையிருக்கமாட்டார்கள். எனவே நின்றுவிடு” என்று பலவாறாக வற்புறுத்தத் தொடங்கிவிட்டார். அண்ணா அவர்கள் தேர்வு எழுதி வெற்றி பெறுவதற்கான முழுமனவுறுதி தமக்கு இருந்தபோதிலும் நண்பரின் வேண்டுகோளுக்கும், வற்புறுத்தலுக்கும் இணங்கி தேர்வு எழுதாமல் நின்றுகொண்டார். அண்ணா அவர்கள் எழுதின தாள்கள் மட்டில் எண்கள் போடப்பட்டு வந்தபோது, அவற்றில் ஒன்றில்மட்டும் மாநிலத்தில் முதல்வராகக் காணப்பட்டார். மீண்டும் மறு ஆண்டில் எல்லாத் தாள்களையும் எழுதி இருவரும் வெற்றிபெற்றார்கள்.

நண்பரின் நலத்திற்காகவும் விருப்பத்திற்காகவும், தன்னலத்தையும் துறந்து நடக்கும் தன்மை, அறிஞர் அண்ணா அவர்களிடத்தில் எவ்வளவு சிறப்புற விளங்கிற்று—விளங்குகிறது என்பதற்கு இந்த நிகழ்ச்சி சீரியதொரு எடுத்துக்காட்டாகும்.

மன்றம்

இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.

மலர் 5 ★ (1—7—56) ★ இதழ் 5

யார் துவேஷி ?

ஆரிய-திராவிட வேற்றுமைகளைக் கிளப்புவது துவேஷப் பிரச்சாரம்.

ஆரிய-திராவிட வேற்றுமைகளுக்கு வரலாற்றுச் சான்றுகள் இல்லை.

ஆரியர்கள் தற்போதுள்ள பிராமணர்களின் முன்னோர்கள் என்று கூறுவதற்கு வரலாற்று ஆதாரம் இல்லை.

ஆரிய-திராவிட வேற்றுமைப் பிரச்சாரம் நாட்டில் மக்களிடைய ஒற்றுமையைக் குலைக்கும். அது நாட்டின் முன்னேற்றத்திற்குத் தடை விளைவிக்கும்.

இந்த துவேஷப் பிரச்சாரம் நடந்து வருவதைக் கண்டும் அதிகார பீடத்திலிருப்பவர்கள் இதைக் கண்டிக்காமலிருக்கின்றனர்.

அரசாங்கம் இதை ஒடுக்கவேண்டும்.

என்னும் கருத்துக்களைத் தோழர் சி. இராசகோபாலாச்சாரியார் அவர்கள், 15-6-56 இல் சென்னையில் பொதுவிவகாரக் கழகத்தின் ஆதரவில் நடைபெற்ற கூட்டத்தில் நயவஞ்சகத்திற்கே உறைவிடமான தம் பொல்லாத வாயினின்றும் உதிர்த்துள்ளார்.

வஞ்சகம், சூது, சூழ்ச்சி ஆகியவைகளை ...ற்ற கருவிகளாகக் கொண்டு, இந்நாட்டின் சமுதாயத்துறையிலும், அதையொட்டி அரசியல் துறையிலும், அதையொட்டிப் பொருளாதாரத்துறையிலும் இனிய இன்பகரமான உயர்பெரும் வாழ்வில் வாழ்வதற்கான வாய்ப்புக்களையும் வசதிகளையும் முழுக்கமுழுக்கப் பற்று, யாதொரு குறையும், கவலையும் இல்லாமல் பன்னெடுங்காலமாக அவைகளை ஆண்டு அனுபவித்துவந்த பரம்பரை, திராவிட இயக்கத்தின் சீரிய - நேரிய - உயர்ந்த - தகைமையான - உண்மைவிளக்கப் பிரச்சாரத்தின் விளைவால், இதுகாறும் அனுபவித்து வந்த வாய்ப்புக்கள்-வசதிகள்-வாழ்வு ஆகியவற்றைச் சிறிது சிறிதாக இப்பொழுது இழக்கும்படி நேரிடுகிறதே என்பதை எண்ணி மனங்கலங்கிய அந்தப் பரம்பரையைச் சேர்ந்த ஆச்சாரியார், மேற்கண்டவாறு புலம்பியுள்ளதிலே நாம் வியப்படைவதற்கில்லை. அவருடைய பண்பை நன்கு அறிந்த பலரும் அவரை நயவஞ்சக நரிக்கு ஒப்பிடுவார்கள். நயவஞ்சகத்தன்மை அவரிடம் மறைமுகமாகவும் நேரிடையாவும் அவ்வப்போது வெளிப்படும், இப்பொழுது நேரிடையாக வெளிப்பட்டிருக்கிறது. அவ்வளவுதான்!

இந்த நாட்டுமக்களின் அரசியல் - பொருளாதார சமூகத் துறைகளிலுள்ள ஏற்றத்தாழ்வுகளையும், பிரிவுகளையும் பிளவுகளையும் அகற்றிச் சனநாயகத்தையும், சமத்துவத்தையும், சகோதரத்துவத்தையும் ஏற்படுத்தி, எல்லோரும் எங்கும் எப்பொழுதும் சமதகுதியையும், சமவாய்ப்பையும், சமவசதியையும், நீதியையும், நேர்மையையும் பெறும்படி செய்து, நாட்டுமக்களனைவரையும் வளமும நலமும் பொருந்திய இன்பவாழ்வில் வாழச்செய்யவேண்டும் என்னும் சீரிய நோக்கத்தோடுதான் திராவிட முன்னேற்றக்கழகம் அரும்பாடுபட்டு வருகிறது.

சமூகத்தில் ஏகபோகச் சலுகைகளையும், உரிமைகளையும் என்றென்றும் அனுபவித்துக் கொண்டுவரும் ஆரியப்பார்ப்பனரும், அத்தகைய சலுகைகளும், உரிமைகளும் மறுக்கப்பட்டு; என்றென்றும் தாழ்த்தப்பட்டுக் கிடக்கும் ஆதிதிராவிடரும் இந்நாட்டைச் சேர்ந்த ஒரேவிதமான மனிதத் தன்மையினராகக் கருதப்படவேண்டும் என்றும்; வாழ்க்கைச் சலுகைகளும், உரிமைகளும், வாய்ப்புக்களும், வசதிகளும் நாட்டின் எல்லாமக்களுக்கும் பொதுவாகப் பகிர்ந்தளிக்கப் படவேண்டும் என்றும் தி. மு. கழகம் கூறுகிறது. மனிதத் தன்மையினின்றும் மீறியவர்களாகக் கருதப்படும் ஆரியப்பார்ப்பனர்கள் மனிதர்களாக மாறவேண்டும். மனிதத் தன்மையற்றவர்களாக வைக்கப்பட்டிக்கும் பிறமக்கள் மனிதர்களாக மாற்றப்படவேண்டும் என்றுதான் கழகம் ஓயாமல் பறைசாற்றி வருகிறது. கழகத்தின் இத்தகைய நடவடிக்கைகள் எப்படித் துவேஷப் பிரசாரத்தின்பாற்பட்டதாகும்? அநீதியைச் சுட்டிக்காட்டி, அது நீக்கப்படவேண்டும் என்றுகூறி, நீதி எல்லோர்க்கும் பொதுவானமுறையில் வழங்கப்படவேண்டும் என்று கூறினால் அது எப்படித் துவேஷப் பிரச்சாரமாகும்? உண்மைக்கும் நீதிக்கும்

பரிந்து பேசுவது எவ்வாறு துவேஷத்தைக் கிளப்புவதாகக் கருதப்படமுடியும்?

சமூகத்துறையில் வஞ்சகத்தாலும், சூழ்ச்சியாலும், சூதாலும் இழைக்கப்பட்டிருக்கும் அநீதி அப்படியே யிருக்கவேண்டும்; அந்த அநீதியைச் சுட்டிக்காட்டி அதனைக் களையும் வழியை யாரும் மேற்கொள்ளக்கூடாது; தம் ஆரியப்பார்ப்பன இனத்தவர் இதுவரையில் ஆண்டு அனுபவித்து வந்த சலுகைகளையும், உரிமைகளையும் இனிமேலும் தொடர்ந்து அவர்கள் அநீதியான முறையில் அனுபவித்துக்கொண்டுதான் வரவேண்டும் என்று எண்ணிப் பேசியும் எழுதியும் வருகிற அன்பர் இராசகோபாலாச்சாரியாரின் தன்மை துவேஷத்தை நிலைநாட்டும் தன்மையா? அல்லது அத்தகைய அநீதிகள் களையப்படவேண்டும் என்று கூறுவது துவேஷத்தை வளர்க்கும் தன்மையா? என்பதை நல்லறிவுபடைத்தோர் சிந்தித்துப்பார்த்தால், ஆச்சாரியார் எவ்வளவு நயவஞ்சகத் தன்மையோடு துவேஷத்தையும், வேற்றுமைகளையும் நிலைநாட்டிக் காப்பாற்றிவருகிறார் என்பது புலனாகும்.

தி. மு. கழகம் சமூக அநீதிகளுக்குக் காரணமான ஆரியத்தன்மை பொதுவாக எல்லோருடைய, குறிப்பாகப் பார்ப்பனர்களுடைய மனம்-மொழி-மெய் ஆகியவற்றிலிருந்து அறவே அகற்றப்படவேண்டும் என்றுதான் தி. மு. கழகம் கூறுகிறதேயல்லாமல், பார்ப்பனர்களாகப் பிறந்துவிட்ட காரணத்தால் அவர்கள் அத்துணைப்பேரும் அகற்றப்படவேண்டும் அல்லது அழிக்கப்படவேண்டும் என்று கூறுவதில்லை. பார்ப்பனர்களாகப் பிறந்து, அநீதிகளுக்குக் காரணமான ஆரியத் தன்மைக்கு இடங்கொடுக்காமல், மனிதத்தன்மையோடு வாழ விரும்புபவர்கள் அனைவரையும் தி. மு. கழகம் வரவேற்கவே செய்கிறது. தி. மு. கழகத்தில் அப்படிப்பட்ட இளைஞர்கள் பலர் உறுப்பினராகியிருக்கிறார்கள். தி.மு. கழகத்தின் நோக்கம் துவேஷப்பிரச்சாரம் அல்ல என்பதை இதிலிருந்து தெள்ளத் தெளிவாக எவரும் உணர்ந்துகொள்ளலாம். அன்பர் ஆச்சாரியார் வேற்றுமைகளை நிலைநாட்ட விரும்புகிறார், எனவே உண்மையை உணர்ந்து கொள்ள மறுத்து, இல்லாது பொல்லாதுகளைப் புனைந்து தம் விருப்பம்போல் பேசித் திரியக் கிளம்பியிருக்கிறார்.

ஆரிய-திராவிட வேற்றுமைகள் பற்றிய உண்மைகளுக்கான காரண காரிய விளக்கங்களை மேனாட்டுவரலாற்று ஆசிரியர்களும், இந்தியத்துணைக்கண்டத்து வரலாற்று ஆசிரியர்களும், தென்னாட்டுப் பார்ப்பனவரலாற்று ஆசிரியர்களும் தெள்ளத் தெளிவாக எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். அந்த விளக்கங்களைத்தக்க ஆதாரம் காட்டி மறுக்க முன்வராமல், "ஆரிய-திராவிட வேற்றுமைகளுக்கு வரலாற்றுச் சான்றுகள் இல்லை; ஆரியர்கள் தற்போதுள்ள பிராமணர்களின் முன்னோர்கள் என்று கூறுவதற்கு வரலாற்று ஆதாரம் இல்லை" என்று கூறிவிடுவது ஒன்றே தக்க ஆதாரம் என்று அன்பர் ஆச்சாரியார் கருதுகிறார். வரலாற்று ஆசிரியர்களின் ஆதாரங்களை மறுக்க ஆச்சாரியார் வைத்திருக்கும் காரணங்கள் என்ன? ஏதொன்றுமில்லையே!

ஆரிய-திராவிட வேற்றுமைகளைப் புலப்படுத்துவது, இதுகாறும் ஏகபோக உரிமைகளை அனுபவித்துக் கொண்டுவந்த அன்பர் ஆச்சாரியார் போன்ற ஆரியப்பார்ப்பனர்க்கு வேண்டுமானால் வெறுப்பைத்தரலாமே ஒழிய, சமூக நீதிக்கும்-நேர்மைக்கும்-சமத்துவத்துக்கும் பாடுபட எண்ணுகிறவர்களுக்கு உண்மையை விளக்கிக்காட்டுவதாகவும், காரணம் தெரியாமல் தாழ்நிலையில் கிடந்து உழல்பவர்களுக்கு உயர்வழிதேடுவதற்கான உணர்ச்சி ஊட்டுவதாகவும் அமைந்திருக்கிறது என்றே சொல்லவேண்டும்.

ஆரிய-திராவிட வேற்றுமைகளின் உண்மைகளை மக்கள் ஓரளவுக்கு உணர்ந்து கொண்டுவிட்டதால், தி. மு. கழகத்தவர் இந்நாட்களில் அந்தப் பொருள்பற்றி மிகவாகப் பேசுவதில்லை. ஆனால் அன்பர் ஆச்சாரியார் தாம் கழகத்தாரை மீண்டும் வம்புக்கு இழுக்கிறார்; இடர்ப்படுகிறார்.

அரசாங்கம் கழகத்தின் நடவடிக்கையை ஒடுக்க முன்வரவேண்டும் என்னும் கருத்துப்படப் பேசியுள்ளார். இந்தச் செயலை அவர் ஆட்சிமனையில் வீற்றிருந்தபோது செய்திருக்கலாமே? ஏனோ செய்யவில்லை? செய்திருந்தால் கழகமும், சூழ்நிலையும் எவ்வளவோ முற்போக்கில் வளர்ந்திருக்குமே! இயன்றால் இனியேனும் அவர் செய்து பார்க்கட்டும்! நாமும் வரவேற்று நிற்போம்!

பன்னெடுங்காலமாகத் துவேஷமனப்பான்மையோடு சமூகத்தில் அநீதியை நிலைநாட்டி வந்த ஆரியப் பார்ப்பன வகுப்பைச் சேர்ந்தவரும், அந்த அநீதியைத் தொடர்ந்து நிலைநாட்ட விரும்புபவரும் ஆன ஆச்சாரியார் துவேஷியா? அந்த அநீதி துடைக்கப் படவேண்டும் என்று எண்ணுகிற தி. மு. கழகத்தவன் துவேஷியா? யார் துவேஷி?

கருத்துக் கதிர்

பாடப்புத்தக முறை ஒழியவேண்டும்

"குறிப்பிட்ட வகுப்புகளுக்கு இவையிவை தாம் பாடப்புத்தகங்கள் என்று நிலைநாட்டும் வழக்கம் ஒழிந்தாலொழிய மாணவரிடை படிக்கும் பழக்கம் வளரவே வழியில்லை. அப்போது தான் மாணவர்கள் குறிப்புப்புத்தகங்களையே ('நோட்ஸ்') கட்டியழும் பழக்கமும் ஒழியும். மொழிகள் போதனைக்குத் தவிர மற்றவற்றுக் செல்லால் பாடப்புத்தகங்கள் ஏற்படுத்துவது தேவையில்லை என்று பல்கலைக்கழகக்குழு சிபாரிசு செய்திருக்கிறது."

—என்று சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் ஏ. இலங்குமணசாமி அவர்கள் 10-6-56இல் நடைபெற்ற புத்தகம் வெளியிடுவோர் மாநாட்டில் பேசும் போது குறிப்பிட்டுள்ளார்.

* * *

யார் ஆத்திகன்?

"உதட்டால் கடவுளின்பெயரை உச்சரித்துக்கொண்டே அண்டையில் உள்ளவனை ஏமாற்ற நினைப்பவர்கள் ஆத்திகர்கள் அல்லர். ஆனால் வெளிவேடமாகக் கடவுளின் பெயரை செபிக்காமல் பிறரிடத்தில் அன்பும், தயையும் கொண்டு நடப்பவன்தான் உண்மையில் ஆத்திகன். கடவுளைக் காப்பாற்ற நாம் பாடுபடவேண்டாம். அவருக்குத் தன்னைத்தானே காத்துக் கொள்ளத்தெரியும். கடவுள் என்பது வெறும் சொல்தொடர்மட்டுமல்ல; மனித உள்ளங்களில் உள்ள சிறந்த பண்புகளின் உருவமே கடவுள் ஆகும்."

—என்று தோழர் வினோபாவே, நாட்டில் நாத்திகத்தை ஒழிக்க உதவுமாறு தோழர் சங்கராச்சாரியார் எழுதியிருந்த முடங்கலுக்கு மாற்றம் கூறியுள்ளார்.

* * *

எண்ணம் சரி! செயல்முறை எப்படி?

"தேர்தலில் வெற்றி, தோல்வி ஏற்படுவது பற்றிஎனக்குக் கவலையில்லை. நாம் தேர்தலில் போராடுவோம். வெற்றிபெற நம்மால் இயன்ற முயற்சி அனைத்தும் செய்வோம். காங்கிரசு உறுப்பினர்களது தன்மை இழிநிலை அடைவதைவிடத் தேர்தலில் தோல்வி ஏற்படுவதை நான் மேலானதாகக் கருதுவேன். எனது கொள்கைகளையும், அடிப்படைத்தத்துவங்களையும் கைவிட்டு எம்முறையைக் கையாண்டாவது வெற்றிபெறவேண்டுமென்ற ஆசை எனக்கு இல்லை"

—என்று பண்டித நேரு 14-6-56இல் ரோடாக்கில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் குறிப்பிட்டுள்ளார்.

* * *

முன்கோபத்திற்குக் காரணம்

"பொதுவாகப் பஞ்சாபிகளுக்கு இறுமாப்பு உண்டு. பஞ்சாபில் வெய்யிலும் கடுமையானது-இரண்டும் சேர்ந்தால் உறுதியாக விபரீதமுண்டாகும். என்னிடம் கூடச் சிறிது பஞ்சாபியின் பண்பு அதாவது சிறிது முன்கோபம் இருக்கிறது. இதற்கு எனதுதாய் பஞ்சாப் மாநிலத்தைச் சேர்ந்தவராக இருந்தது காரணம்"

—என்று தோழர் நேரு 14-6-56இல் பேசும்போது கூறியுள்ளார்.

* * *

சிங்களமொழித் திணிப்பிற்கு எதிர்நடவடிக்கை

"சிங்களமொழித் திணிப்பு நடவடிக்கைகளை எதிர்க்க ஆறு அம்சத்திட்டத்தை உரியவர்களனைவரும் மேற்கொள்ளவேண்டும். (1) தமிழ் வழங்கும் பகுதிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றத்தை வெறுத்தொதுக்குதல், (2) சிங்களப் பள்ளிகளுக்குத் தமிழர் குழந்தைகளை அனுப்ப மறுத்தல் ,(3) சிங்களம் போதிப்பதை எதிர்த்தல், (4) சிங்களம் கற்கச் சர்க்கார் ஊழியர்கள் மறுத்தல், (5) தமிழ்ப் பகுதிகளில் தமிழிலேயே அலுவலகங்களை நடத்திச் செல்லுதல்,(6) ஸ்தலஸ்தாபனங்கள் தமிழிலேயே நடவடிக்கைகளை நீடிக்க உறுதிமொழி எடுத்துக்கொள்ளுதல் ஆகியவையேயாகும்"

—என்று இலங்கைப் பாராளுமன்ற உறுப்பினர் தோழர் ஜி. ஜி. பொன்னம்பலம் அவர்கள் வடஇலங்கையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசியுள்ளார்.

செய்திச்சுருள்

எட்டுரூபாயில் பிணஎரிப்பு

திறந்தவெளி மயானம் பணச் செலவு பிடிப்பதுடன், பொதுநலத்திற்கும் தீங்கானது என்று கருதப்படுவதால், எட்டேரூபாய் செலவில் பிணத்தை எரிக்கக்கூடிய உலை ஒன்றைப் பிரிட்டனிலிருந்து வரவழைக்கலாமா என்று கல்கத்தா நகரசபை எண்ணிக்கொண்டிருக்கிறது. உலையின் விலை ரூ 65 ஆயிரம் என்று சொல்லப்படுகிறது. இப்பொழுது மயானத்தில் பிணத்தை எரிக்க ரூ 10-ஆகிறது என்று சொல்லப்படுகிறது.

* * *

பழைய துறைமுகம்

வங்காளத்தில் 24 பர்க்கானுக்கள் மாவட்டத்தில் அரிநாராயண்பூர் என்ற இடத்தில் பழையகாலத் துறைமுகம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இந்த இடத்தில் கண்டெடுக்கப்பட்ட மண்பாண்டங் களிலிருந்து இது சுங்க, குஷான் காலத்தில் சிறப்புற்றிருந்திருக்கவேண்டும் என்று ஊகிக்கப்படுகிறது. தாமரைப்பூ பொறிக்கப்பட்ட உரோமானிய காலத்திய மட்பாண்டங்கள் சிலவும் கண்டெடுக்கப்பட்டிருக்கின்றன. குஷான் காலத்திய 10 செப்புநாணயங்களும் கண்டெடுக்கப்பட்டிருக்கின்றன. புதைபொருள் ஆராய்ச்சி இலாகாவினர் மேலும் ஆராய்ச்சி நடத்திவருகின்றனர்.

* * *

அணு மூலம் கப்பல்

1959 க்குள் அணு ஆற்றல் மூலம் கப்பலை இயங்கச் செய்ய இயலும் என்று நார்வே நாடு அறிவிக்கிறது. இது அமெரிக்க முறைகளால் இயலுவதைக் காட்டிலும் குறைந்த செலவில் நடக்கும் என்று நார்வே நாட்டால் உறுதிசெய்யப்படுகிறது.

* * *

பார்வைக்குக் கோழியின் விழி

அநேகமாகப் பார்வையிழந்து விட்ட ஒரு பெண்ணுக்குக் கோழிக்குஞ்சின் விழியைப் பொருத்திவைத்துப் பார்வையை உண்டாக்கியிருக்கிறார் ஒரு ஜப்பானிய டாக்டர். பெண்ணின் வயது 14 ஆகும் அந்தப் பெண்ணினுடைய இரத்தத்தில் அந்த விழியைச் சுமார் ஏழு நாட்கள் ஊறவைத்து அதைப் பயன்படுத்தினர். கோழிக்குஞ்சின் விழி மனிதருக்கு அனேகமாக ஒத்திருக்கிறது என்று அந்த டாக்டர் கூறுகிறார்.

* * *

டூனிசியா மொராக்கோவுக்கு ஆதரவு

டூனிசியாவையும், மொராக் கோவையும் முழு அரசுரிமைகொண்ட நாடுகளாக்க இந்திய அரசியலார் இசைவு தந்துவிட்டனர். ஆனால் அவைகளைவிடப் பன்மடங்கு பல வகையிலும் சிறந்த திராவிடத்திற்குத் தனி உரிமை வழங்கவோ, அதனைத் தனிநாடாக மதிக்கவோ முன்வர இந்தியப் பேரரசு தயங்குகிறது;

* * *

அணுத்துகளைப் பிணைக்கும் ஆற்றல்

அணுத்துகள்களைப் பிணைக்கும் அரிய ஆற்றலை அமெரிக்க அறிவியலறிஞர்கள் கண்டுபிடித்துவிட்டதாக அணு ஆற்றல் குழு அறிவித்துள்ளது. இதற்கு 'நியூட்ரினோ' என்று பெயர் கொடுத்திருக்கிறார்கள். 20 ஆண்டு ஆராய்ச்சிக்குப் பின்பு இது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

* * *

தெ. ஆ. மாவட்டத்தில் மணிலா

தென் ஆற்காடு மாவட்டத்தில் மட்டும் மணிலாக்கடலை 3,94,000 ஏக்கரா நிலப்பரப்பில் இவ்வாண்டு சாகுபடி செய்யப்பட்டிருக்கிறது. மொத்தம் மகசூல் 30,773 டன் பயிர் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது.

* * *

டயருக்குள் டயர்

டயரிலிருந்து காற்று திடீரென்றுவெளியே சென்றாலும், டயரில் துளை ஏற்பட்டுவிட்டாலும் கார் ஓட்டுபவர் தொடர்ந்து காரை ஓட்டிச்செல்ல வசதியளிக்கும் ஒரு மோட்டார் டயரை 'குட் இயர் டயர் ரப்பர் கம்பெனி' உற்பத்திசெய்துள்ளது. இப்புதுக்கண்டுபிடிப்பு ஒருடயருக்குள் மற்றொரு டயராகும். வெளிப்புறத்தில் சாதாரண அமைப்பிலும், உட்புறத்தில் குறைந்த எடையிலும் நைலானால் செய்யப்பட்ட உறைகள் இருக்கின்றன.

மருத்துவ மயக்க மருந்து

(1)

இன்று மருத்துவ மனைகளிலே அமைதியான ஒரு இடம் இருக்கிறதென்றால் அது ரணமருத்துவம் செய்யும் அறையாகத்தான் இருக்கும். ஆனால் சென்ற ஒருநூற்றாண்டுக்கு முன்வரை அந்த அறைகள் சித்திரவதைக் கூடங்கள் போன்று காட்சியளித்துக்கொண்டிருந்தன. கத்தி, ரம்பம் முதலிய ஆயுதங்களுடன் காட்சியளிக்கும் மருத்துவர், அவர் செய்யும் மருத்துவத்தைத் தாங்கிக்கொள்ள இயலாமல் வேதனையின் மிகுதியால் அலறித் துடிக்கும் நோயாளி, அவனை அழுத்திப் பிடித்து நிற்கும் ஆட்கள்—அவ்விதக்காட்சிகளை இன்று காணமுடியாதவாறு ரணமருத்துவத்தில் மயக்க மருந்துகள் மாபெரும் மாறுதலை உண்டாக்கியிருக்கிறது.

வேதனையை நீக்கத் தோன்றிய மருத்துவ மயக்கமருந்து, பெரும் வேதனைக்குப்பின்தான் பிறந்தது. மயக்க மருந்தின் கண்டுபிடிப்பிற்குப் பலர் பலவகையிலும் காரணமாகின்றனர். சிலர் ஆராய்ச்சிகள் செய்து கடைசி நேரத்தில் கைவிட்டிருக்கின்றனர். சிலர் கண்டுபிடிப்பிற்கு வெகு அருகில் வந்தும் கண்டுபிடிக்க முடியாமல் சென்றிருக்கின்றனர். சிலர் கண்டனத்திற்கும் ஏளனத்திற்கும் ஆளாகி துன்பப்பட்டிருக்கிறார்கள்.

அம்பிரி டேவி; ஹென்றி ஹில் ஹிக்மன், ராபர்ட் கோலியர், கிராபோர்ட் லாங், சுமைலி ஒரேஸ் வெல்ஸ், ஜாக்சன், மார்ட்டன், சிம்சன் போன்ற பலர் மயக்க மருந்தின் கண்டுபிடிப்பிற்கான வழிகளில் தங்களை ஈடுபடுத்தியிருக்கின்றனர்.

முதன் முதலில் மருத்துவ மயக்க மருந்திற்கான சில குறிப்புகளை அம்பிரி டேவி என்பவர் 1800 ல் வெளியிட்டார். நைட்ரஸ் ஆக்சைட் எனும் வாயுவை முகர்வதால் ஏற்படும் ஒரு வித மயக்க நிலையின் உதவியால் சில ரண மருத்துவங்களை எளிதாகச் செய்யலாம் என்று தனது எண்ணத்தை டேவி வெளியிட்டார். ஆனால் அதோடு தனது முயற்சியை நிறுத்திக்கொண்டார், மேற்கொண்டு ஆராயவில்லை.

இதையடுத்து மயக்க மருந்தின் முயற்சியில் ஈடுபட்டவர் ஹென்றி ஹில் ஹிக்மன் (Henry Hill Hickman) என்ற ஆங்கிலேய மருத்துவராகும். நைட்ரஸ் ஆக்சைடை ரண மருத்துவத்தில் பயன்படுத்தலாம் என்று அம்பிரி டேவி புதியதொரு கருத்தை வெளியிட்ட அதே 1800-ம் ஆண்டில் ஹிக்மன்பிறந்தார். தனது இருபதாவது வயதிலேயே மருத்துவத்தொழிலில் புகுந்தார். அப்பொழுதிருந்த ரணமருத்துவ முறையைக்கண்டு திடுக்கிட்டு அதை எளிதாக்க ஏதாவது செய்தாக வேண்டும் என்று முடிவு செய்துகொண்டார்.

1823-ம் ஆண்டில் ஹிக்மன் தனது ஆராய்ச்சிகளை ஆரம்பித்தார். நாய், பூனை, முயல், எலி முதலியன அவருடைய ஆராய்ச்சியில்

18–ம் நூற்றாண்டில் மருத்துவ மனைகளில் காணப்பட்ட ரணமருத்துவக் காட்சிகளில் ஒன்று

ஹென்றி ஹில் ஹிக்மன்

பயன்படுத்தப்பட்டன. அந்த ஆராய்ச்சிகளின் முடிவாக **நிறுத்தப்படுகிற உயிரெழுச்சி** (Suspended Animation) என்ற முறையைக் கண்டார். இந்த முறையால் மிருகங்களிடத்தில் வேதனையில்லாமல் ரணமருத்துவம் செய்ய முடிகிறதென்றும் அதே முறையில் மனிதனிடத்திலும் ரணமருத்துவம் செய்யலாம் என்று கூறினர்.

ஹிக்மன் தான் நடத்திய ஆராய்ச்சிகளில் ஏழு ஆராய்ச்சிகளுக்குக் குறிப்பு எடுத்து வைத்தார். ஒரு பெரிய தண்ணீர்த் தொட்டியில் தீவைப்போன்றதொரு மேடையை அமைத்து அதில் ஆராய்ச்சிக்குட்பட்ட மிருகத்தை வைத்தார். அத்தொட்டியின் மேல் ஒரு பெரிய மணிபோன்ற கண்ணுடிப் பாத்திரத்தை வைத்துத் தொட்டியினுள் வெளிக்காற்று புகாதவாறு மூடினர். உள்ளேயுள்ள நல்ல காற்று குறைந்து குறைந்து மிருகங்கள் கடைசியில் உணர்வையிழந்தன. ஆனல் அந்த உணர்வற்ற நிலையை அடைய அவை மிகவும் வதைப்பட்டன. இதைக் கண்ட ஹிக்மன் தண்ணீர் தொட்டியின் அடிவழியாக நீரின் மேற்பரப்பிற்கு ஒரு குழாயை இணைத்து அதன் மூலமாக கரியமில வாயுவை உட்செலுத்தினர். இதனல் அந்த மிருகங்களிடத்தில் உணர்வற்ற நிலையை மிக எளிதாக உண்டாக்க முடிந்தது.

அந்த மிருகங்கள் உணர்வற்ற நிலையை அடைந்ததும் கால், காது, வால், போன்ற உறுப்புக்களை அறுத்துப்பார்த்தார். அவைகளிடத்தில் வேதனையின் அறிகுறிகள் எதுவும் தோன்றவில்லை. ஒவ்வொரு ஆராய்ச்சியிலும் மிருகம் இழக்கும் இரத்தத்தின் அளவு, புண் ஆறும் காலம் இவைகளை முறையே கவனித்துக்குறித்து வந்தார். இரத்த வெளியேற்றம் குறைவாக இருப்பதோடு விரைவிலே புண் ஆறிவிடுவதையுங் கண்டார்.

1824-ம் ஆண்டில் ஹிக்மன் லண்டன் மாநகர் அரசினர் குழுவில் (Royal Socitey of London) உறுப்பினராயிருந்த **நைட்** (Knight) என்பவருக்கு ஒரு கடிதம் எழுதி தனது ஏழு ஆராய்ச்சிகளின் முடிவைப்பற்றியும் விரிவாக விளக்கித் தெரிவித்து, அதை அரசினர் குழுவின் கவனத்திற்குக் கொண்டுவருமாறு கேட்டுக்கொண்டார். அது குழுவின் பார்வைக்குக் கொண்டுவரப்பட்டதோ என்னவோ, ஒருவித முயற்சியும் தெரியவில்லை. இதில் வியப்பிற்குரியதென்னவென்றல் அப்பொழுது அரசினர் குழுவின் தலைமைப் பதவியில் அமர்ந்திருந்தவர், முன்பு ரண மருத்துவத்திற்கான சில புதிய கருத்துக்களை வெளியிட்ட அம்பிரி டேவி என்பவர்தாம்!

ஹிக்மன் காத்திருந்தார். அவரது ஆராய்ச்சிகளுக்கு எவ்வித பதிலும் இல்லை. பிறகு தனது புதிய கருத்தை யாவருக்கும் தெரிவிக்கும் வகையில் ஒரு துண்டு அறிக்கையை வெளியிட்டார். அதற்கு, "மனிதர்களுக்குப் பயன்படும்படியான ரண மருத்துவ முறையை உறுதிகொள்ளும் நோக்குடன், மிருக ரணமருத்துவத்தில் பயன்படக்கூடிய பாதுகாப்பான முறையின் ஆராய்ச்சிகளை விளக்கிடும் **நிறுத்தப்படுகிற உயிரெழுச்சி** என்பது பற்றியதொரு முடங்கல்'' என்ற பெரியதொரு தலைப்பைக் கொடுத்தார்.

"பொதுவாக மக்களுக்கும், குறிப்பாக எனது மருத்துவத் தோழர்களுக்கும் எனது எண்ணத்தைப் படைக்கின்றேன், எவரேனும் எனது கொள்கைகளை உறுதிப்படுத்த முன் வருவார்கள் என்ற நோக்கத்துடன்'' என்று ஹிக்மன் அதில் பிறரது ஒத்துழைப்பை நாடினர்.

துண்டு அறிக்கை வெளியிட்டது குறித்து, "வெறும் புகழ்ச்சிக்காகவே துண்டு வெளியீடுகள் அனேகமாக அமைந்து விடுகின்றன என்பது உண்மை. அதனல் அவை கண்டனத்திற்குள்ளாகின்றன. ஆனல் இங்கு மக்கள் ஊழியன் என்ற முறையில் மருத்துவன் என்ற தகுதியில், இதுவரை பயன்படுத்தாத ஒன்றை, மனித வேதனையை நீக்கலாம் என்று கொள்ளக்கூடிய ஒன்றைப்பற்றி வெளியிடுவது எனது தலையாய கடமையாகும்'' என்று ஹிக்மன் தனது கடமையைத் தெரிவித்துக் கொண்டிருக்கிருர்.

மேற்கொண்டு தனது ஆராய்ச்சிகளை விரித்துக் கூறுமுன், உயிருள்ள பிராணிகளை ஆராய்ச்சிகளில் ஈடுபடுத்தியதற்காக மன்னிப்புக் கேட்டுக்கொண்டு, தனது ஆராய்ச்சிகளின் மூலம் அவை அதிகம் துன்புறவில்லை என்பதையும் தெரிவித்துக் கொள்கிறார். இது அப்பொழுது நிலவிய சூழ்நிலையை விளக்கிக் காட்டுகிறது. மக்கள் கொண்டிருந்த மூடக் கொள்கைகள் அறிவியல் ஆராய்ச்சிகளுக்குத் தடைகளாக விளங்கின. "ஆண்டவன் படைத்த உயிர்களை வதைத்து வேடிக்கை காண்பது மாபாவம், பெருங்குற்றம்!" என்று மதக்குருமார்கள் **எங்கே** கிளம்பிவிடுகிறார்களோ என்று ஹிக்மன் பயந்தார் போலும்! அப்படித்தான் ஒரு ஐம்பதாண்டுகளுக்குப் பின் தோன்றிய **சிம்சன்** என்பவர் குளோரபாரம் என்ற ரணமருத்துவ மயக்க மருந்தைக் கண்டுபிடித்தகாலை மதக்குருமார்கள் வெகுண்டெழுந்தனர். ஆதரவைத் தேடியலையும்போது ஆணவக்காரர்களின் கொடுமொழிகள் தனது அரிய முயற்சிக்கு ஊறுவிளைவிக்குமோ என்று ஹிக்மன் எண்ணியிருக்கலாம்.

"சரியான துணைகொண்டு நன்கு முயற்சித்தால் மனிதனிடத்தில் ஏற்படும் எழுச்சியை நிறுத்தலாம் என்பதை அசையாத நம்பிக்கையுடன் உணர்கிறேன். ஒரு நோயாளியை இந்த ஆராய்ச்சியில் உயிர்ப் பரிட்சைக்குட்படுத்திக் கொள்ள நான் மனதார ஆதரவளித்துப் பேசவில்லையென்றாலும், கடுமையான ரணமருத்துவத்திற்குட்பட நேர்ந்தகாலை அதற்கு ஆட்பட நான் ஒரு கணங்கூட தயங்கமாட்டேன்" என்று கூறி ஹிக்மன் தனது அறிக்கையை முடிக்கிறார்.

அவருடைய துண்டு அறிக்கை இங்கிலாந்தில் எவருடைய கவனத்தையும் ஈர்க்கவில்லை. என்றாலும் அவர் தனது எண்ணத்தைக் கொள்கைகளை கைவிட்டுவிடவில்லை. 1828-ல் பாரிசு நகருக்குச் சென்றார். அங்கே பத்தாவது சார்லஸ் மன்னனிடம் மனுச்செய்துகொண்டு, பிரான்சு நாட்டின் மருத்துவக் கலைக்கூடங்களின் கவனத்தையும் ஒத்துழைப்பையுங் கவர உதவியளிக்குமாறு வேண்டிக்கொண்டார். உயரிய நடையிலே அந்த மனுவை எழுதி அத்துடன் தனது துண்டு அறிக்கையின் பிரதி ஒன்றையும் சேர்த்து அனுப்பியிருந்தார்.

ஹிக்மனின் முறை நல்ல பலனளித்தது. சார்லஸ் மன்னன் அதை மருத்துவக் கழகத்தின் (Academy of Medicine) கவனத்திற்குக் கொண்டு வந்தான். இங்கே அதற்கு பலமான தாக்குதல் ஏற்பட்டது. ஒருவர் தவிர மற்ற உறுப்பினர்கள் யாவரும் ஹிக்மன் கொள்கைகளை எதிர்த்தனர். **பாரன் லாரே (Barron Larrey)** என்ற நெப்போலியன் படையில் பணியாற்றிய தலைமை மருத்துவர் ஒருவர் ஹிக்மன் கொள்கைகளை ஆதரித்து தன்னையே ஆராய்ச்சிக்குரிய ஒரு நோயாளியாக எடுத்துக்கொள்ளலாம் என்றும் தெரிவித்துக்கொண்டார். ஆனால் எதிர்ப்பும் சச்சரவும் அதிகமாக ஏற்படவே ஹிக்மன் கருத்துக்கள் கைவிடப்பட்டன. அரியதொரு முயற்சி பெருந்தோல்வியில் முடிந்தது.

மனமொடிந்த நிலையில் இங்கிலாந்துக்குத் திரும்பிய ஹிக்மன் இரண்டாண்டுகளுக்குப் பின் 1830-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 5-ம் நாள் தனது 30வது வயதிலேயே இறந்தார்.

ரண மருத்துவத்திற்கான மயக்க மருந்தை ஹிக்மனால் கண்டுபிடிக்க முடியாமற்போயிற்று. ஆயினும் மயக்க நிலை (Anesthesia) ரணமருத்துவத்திற்கும் மனித இனத்திற்கும் எவ்வளவு இன்றியமையாமை என்பதை உணர்ந்திருந்தார். அவர் சரியான அறிவியல் ஆராய்ச்சியின் வழியாகத்தான் சென்றார். ஒரு வாயுவை முகரவேண்டும் என்ற அவரது எண்ணம் சரியாக அமைந்திருந்தது. ஆனால் அதற்கு அவர் பயன்படுத்திய செயற்கருவி (கரியமில வாயு), மூச்சுத்திணறல் முறை—இவை தவறாகியது. ஹிக்மன் கரியமிலவாயுவை விடுத்து வேறு வாயுக்களையும் தேர்ந்து பார்க்க முயன்றிருந்தால் ஒருகால் மயக்க மருந்தின் கண்டுபிடிப்பிற்கு ஆளாகி யிருக்கலாம்.

ஹென்றி ஹில் ஹிக்மன்! அவர் வாழ்ந்தார், கனவுகள் கண்டார், அயராது உழைத்தார், மறைந்தார், மறக்கப்பட்டார்—மற்றவரால் மயக்க மருந்து கண்டுபிடிக்கப்படும் காலம்வரை. வெற்றியை நோக்கி ஹிக்மன் விரைந்தார்: வெற்றி அவரைக் கண்டு புன்னகை புரிந்தது; தயங்கி நின்றது; பின் தாண்டிச் சென்றுவிட்டது!

அட்டைப்படம்

ரணமருத்துவ மயக்க மருந்தைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டு வெற்றியடைந்தும், போற்றப்படாமல் புறக்கணிக்கப்பட்டவராக மனமொடிந்த நிலைக்குத் தள்ளப்பட்டு, வேதனையை நீக்கப்பிறந்த மயக்க மருந்தையே அதிகமாக உட்கொண்டு தனது வாழ்வையே முடித்துக்கொண்ட ஹொரேஸ் வெல்ஸ்.

* அடுத்த இதழில் ஹொரேஸ் வெல்சின் வாழ்க்கை வரலாறும் மயக்க மருந்து கண்டுபிடிப்பின் விளக்கமும் 2-வது கட்டுரையாக இடம் பெறும்.

வள்ளுவர் நகரில்

[சோழன்]

மூன்ருவது நாள் காலையில் வள்ளுவர் நக ருக்குள் நுழையும்பொழுது முதல் நாளிருந்த மழைத்தண்ணீர் முற்றிலும் மறைந்துவிட்டது. தண்ணீர் நின்ற ஓரிரு இடங்களில் தண்ணீர் இறைத்தும், மணல் கொட்டியும் சரிசெய்யப்பட்டிருந்தன. முதல் நாள் பெய்த மழையால், காற்று குளிர்ந்தடித்தது. மக்கள் கூட்டமும் அதிகரித்தது. அன்று சனிக்கிழமை. அலுவலகங்களில் வேலை பார்ப்பவர்கள் தொகை, அன்று அதிகமிருந்தது.

சென்னையிலிருந்து இரண்டு தோழர்கள் வந்திருந்தார்கள். ஒருவர் அரசாங்க அலுவலகத்திலும், மற்ருெருவர் ஒரு பாங்கியிலும் வேலைபார்ப்பவர். என்னுடன் பச்சையப்பன் கல்லூரியில் படித்தவர்கள்.

"நேற்று கடுமையான மழையாமே!" அவர்கள் மிக்க மகிழ்ச்சியுடன் கேட்டார்கள்.

"ஆமாம்!" நாங்கள் மிகுந்த வருத்தத்துடன் சொன்னேம். முதல்நாள கூடியிருந்தவர்கள் பட்ட சிரமங்கள் அவர்களுக்கு எவ்வாறு தெரியும்? ஆனல் மழைவந்ததில் அவர்களுக்கு ஒரு திருப்தி. மழைபெய்யாதிருந்தால், நிகழ்ச்சி நிரல்படி, இரண்டாவது நாளன்று அண்ணு முதலியவர்களின் பேச்சும், மாநாட்டுத் தலைவரின் தலைமையுரையும் முடிந்திருக்கும். மழை வந்து தடுத்தது. சனிக்கிழமை வந்தவர்கள் மகிழ்ந்தனர்.

சனியென்று ஒதுக்குகிருேம். சனி எவ்வளவு நல்லது பார்த்தாயா? நாங்கள் வராமல் மாநாடு எப்படி ஆரம்பிக்கும். அதனல்தான் மழை வந்து, நாங்கள் வரும்வரை நிறுத்திவைத்தது."

நாங்கள் பந்தலுக்குள் வரும்பொழுது, தோழர்கள் சாம்புவும், வானமாமலையும் எதிர்ப்பட்டார்கள்.

"பந்தல் எப்படியிருக்கிறது?"

"மழையால் சேதம் ஒன்றும் அதிகமாக இல்லை. ஒரே ஒரு இடத்தில்தான், மேடைக்குப் பக்கத்தில் இருந்த அடைப்பில் யாரோ பிரித்துப் போட்டுவிட்டார்கள்." என்று சாம்பு சொன்னர்.

தோழர் சாம்பு குறிப்பிட்ட இடத்தில், முதல் நாள் மாலை நாங்கள்தாம் பிரித்துப் போட்டது. அதை அப்பொழுது நான் தெரிவிக்கவில்லை. "ஆமாம்! யாராவது பிரித்துப் போட்டிருப்பார்கள்!" என்று நான், சமாதானம் சொன்னேன்.

மாநாடு ஆரம்பிப்பதற்குச் சிறிதுநேரம் இருந்ததால், கண்காட்சி சாலையைப் பார்க்கப் போனேம். ஆனல் அங்கு நீண்ட வரிசை உள்புகக் காத்திருந்தது. நாங்கள் "கியூ" வரிசையில் நின்றுகொண்டோம். நீண்ட வரிசை வளைந்து வளைந்து நின்றது!

கண்காட்சிக்குப் போகும்வழியில், முதலில் காட்சி யளித்தது கல்சுமந்த கசடர்கள்!

"கல்சுமந்த கசடர்கள் யாவர் தெரியுமா?" என்பக்கத்தில் இருந்த "தமிழ் ஐயா" கேட்டார்.

"கனக விசயர்கள்."

சிலப்பதிகாரத்தை முழுவதும் படிக்கவில்லையென்ருலும், சிலப்பதிகாரக் கதைகூடத் தெரியாது என்று என் நண்பர் எண்ணிக் கொண்டார்போலும். மேற்கொண்டு அவர் கேள்வி கேட்பதற்குமுன் நானகத் தொடர்ந்து "தமிழக மன்னரைப் பழித்த வடநாட்டரசர்களை, சேரன் செங்குட்டுவன் வென்று, இமயத்தில் கல்லெடுத்து அவர்கள் தலையில் வைத்து எடுத்து வந்தான்." என்று எனக்குத் தெரிந்தவரைச் சொன்னேன்.

அவர் தமிழ் இலக்கியம் நன்கு படித்தவர், அதிலும் சிலப்பதிகாரம் முழுப்பாடம்! தமிழ் ஐயா சொன்னர். "தமிழக மன்னரை மட்டுமல்ல, தமிழையே, தமிழ் ஆற்றலையே அந்த ஆரிய அரசர்கள் பழித்தார்களாம். இப்பொழுதுள்ள தமிழ்ப்புலவர்கள் தாம் 'ஆரியம்' 'ஆரியர்' என்று சொல்லப் பயப் படுகிருர்கள், அக்கம்பக்கம் பார்க்கிருர்கள்,

ஆனால் இளங்கோவடிகள் அழுத்தந் திருத்தமாகச் சொல்கிருர்.''

சிலப்பதிகாரத்திலிருந்து அவர் மேற்கோள் களைச் சொன்ஞர்! நீர்ப்படைக் காதை என்ற பகுதியில், இமயத்திலிருந்து எடுத்த கல்லை, கனக விசயர்கள் தலைமீது ஏற்றினர்கள் என்று கூறும்பொழுது இளங்கோவடிகள் கூறுகிருர்.

"கனக விசயர்தங் கதிர்முடி யேற்றிச்
செறிகழல் வேந்தன் தென்றமி ழாற்றல்
அறியாது மலைந்த ஆரிய மன்னரை."

கல்லைத் தூக்கி கனகவிசயர்கள் தலைமீது வைக்கிருன், சேரன் செங்குட்டுவன்! செங்குட்டுவனை எதிர்த்த அரசர்களைப்பற்றிச் சிலப்பதிகார ஆசிரியர் கூறும்பொழுது, ஒன்றை யொன்று மழுப்பவில்லை. திட்டவட்டமாக, பெருமிதத்துடன் கூறுகிருர். "தென்றமிழ் ஆற்றல் அறியாது மலைந்த ஆரிய மன்னர்" என்று. தெற்கிலுள்ள தமிழன் ஆற்றலை அறியாது போரிட்ட ஆரிய மன்னர்கள்! அவர்களின் கதி, "கதிர்முடியின்மீது" கல்லைத்தூக்கி வர வேண்டி நேரிட்டது.

தமிழ் ஐயா சிறிது யோசித்துவிட்டு, தம் மனத்தில் சில பாடங்களைத் திருப்பிப்பார்த்து விட்டு, "இந்த ஓவியத்தை இங்கு வைத்தது ஏற்புடைத்தா?" என்றுகேட்டார்.

நான் ஓவியத்தை ஒருமுறை பார்த்துவிட்டு நன்ருகத்தானே இருக்கிறது." என்றேன்.

"அதற்குச் சொல்லவில்லை, கனகவிசயர் கல் சுமக்கும் ஓவியம் கண்காட்சியில் இருக்கலாமா? அந்தக்காலத்தில் எப்படியிருந்தது."

நான் பதில் சொல்லவில்லை, தெரியாத காரணத்தால்.

"கனக விசயர்கள் கல் சுமக்கும் நிலை அந்தக் காலத்திலேயே-சேரன் செங்குட்டுவன் காலத்திலேயே, கண்காட்சியாக இருந்தது. கனக விசயர்கள் தலைமீது கல்லைச் சுமக்கவைத்து தன்னுடு கொண்டுவந்த சேரன் செங்குட்டுவன் தமிழர்களைப் பழித்தோருக்கு எத்தகைய நிலை கிடைக்குமென்பதற்கு எடுத்துக்காட்டாக, அவர்களைத் தமிழகமெங்கும் சுற்றிவரச் செய்தான். தமிழ் ஆற்றலைப் பழித்த தருக்கர்களைப் போர் முனையில் அடக்கி, வெற்றிக் கோலத்துடன் வஞ்சிமாநகருக்கு வந்த செங்குட்டுவன், தன்னுடன் இருந்த பணியாளர்களில் சிலரை ஒதுக்கி கல்தூக்கும் கனகவிசயர்களை ஊர்வலமாக அழைத்துக்கொண்டு சோழ பாண்டிய நாடுகளுக்கும் சென்று மீண்டுவருமாறு அனுப்பினும். சிலப்பதிகாரத்தில் அது கூறப்பட்டிருக்கும் வரிகள்:

"கஞ்சுக முதல்வர் ஈரைஞ் ஞாற்றுவர்
அரியிற் போந்தை அருந்தமிழாற்றல்
தெரியாது மலைந்த கனக விசயரை
இருபெரு வேந்தர்க்குக் காட்டிட ஏவி"

(கஞ்சுகம்-சட்டை, ஈரைஞ் ஞாற்றுவர்-ஆயிரவர், போந்தை-பனம்பூ.)

அதாவது "சட்டையணிந்த ஆயிரம் படை வீரர்களை அழைத்து, உயர்ந்த பனம் பூமாலை அணிந்த அருந்தமிழ் வேந்தனின் ஆற்றலை அறியாமற் போர்புரிந்து தோற்ற கனகவிசயரை, சோழ பாண்டியர்களுக்குக் காட்டிவருமாறு ஏவி..."

ஆயிரம் சேரவீரர்கள் சூழ்ந்துவர, கல்சுமந்த கனகவிசயர் இருவரும் தமிழ் நாடுமுழுவதும அழைத்துச் செல்லப்பட்டு வேடிக்கை காட்டப்பட்டனர்! "தமிழ் ஆற்றலை எவரும் பழித்ததில்லை, இதோ! கல்தூக்கி வரும் இரு ஆரிய அரசர்கள் பழித்தார்களாம்! அவர்கள் வேடிக்கையானவர்களே!" என்று மக்கள் ஆங்காங்கு பார்த்திருப்பார்கள். "கல்தூக்கும் கசடர்கள் நாளை நம்மூர் வருகிருர்கள், வேடிக்கை பார்க்க வேண்டும்." என்று ஒவ்வொரு ஊர்க்காரர்களும் அந்தக் காட்சியைக்காணக் காத்திருப்பார்கள். மறுநாள் வெற்றிக் குழல்கள் ஊத, யானையும் குதிரையும் வெற்றிக்கொடிகளுடன் உள்வர, ஆயிரம்சேரர்கள் அணிவகுத்துவர, மத்தியில் கல்லைத் தூக்கிக்கொண்டு இரு வீணர்கள் வருகிருர்கள். அவர்கள் ஆரிய மன்னர்கள், ஆனல் தமிழைப் பழித்தார்கள் தமிழக வீதிகளில் காட்சிப் பொருளானுர்கள்.

எனது நண்பர் அழகாகச் சொன்ஞர். "தமிழரைப் பழித்த தருக்கர்கள் இருவரையும் சேரன் செங்குட்டுவன் கண்காட்சிப் பொருள்களாக அனுப்பினன். அதேபோல் நாமும் அவர்களைக் கண்காட்சி முதலில் நிறுத்தியிருக்கிறேம். நாம் காத்துக்கொண்டிருக்கும் இதே திருச்சியில்-அக்காலத்திய உறந்தைப் பகுதியில், அந்தக் காலத்திலும் தமிழ் மக்கள் காத்துக்கொண்டிருந்திப்பார்கள் கனகவிசயர்கள் கல்தூக்கி நிற்கும் காட்சியைக்காண!"

நாங்கள் நின்ற "கியூ" கனகவிசயரைக் கடந்து உள் நுழைந்தது. திரும்பிப் பார்த்தேன். இரண்டு பர்லாங்கு தூரத்துக்குமேல் கூட்டம் நின்றுகொண்டிருந்தது.

கண்காட்சிக் கூடத்துக்குள் நுழைந்ததும், முதலில் இருந்தது தோழர் கோபால் அவர்களின் ஓவியத் தொகுதியாகும். தோழர் கோபால், சேலத்தைச் சார்ந்தவர், நம் கழகத்தைச் சேர்ந்தவர், வட்டச் செயலாளர்களில் ஒருவராகப் பணியாற்றுகிறார். அவர் சென்னை ஓவியக் கல்லூரியில் பயின்று, ஓவியத் திறமையில் முன்னணியில் நின்று தங்கப்பதக்கங்கள் பரிசு பெற்றிருக்கிறார். அந்தக் கல்லூரித் தலைவர் அவரது திறங்கண்டு வியந்து பாராட்டியிருக்கிறார். கோபால் அவர்களின் ஓவியங்கள், காணும் காட்சிகளைவிட மனதிலெழும் கருத்துக்களை, உணர்ச்சிகளைக் காட்சிகளாக்க முயலுகின்றன. அவரது ஓவியங்கள் உலகப் புகழ் வாய்ந்தவை. சென்னையிலும், ஓவியக் கண்காட்சி வைக்கப்படும் பல இடங்களிலும், கோபால் வைத்த ஓவியங்கள் பரிசுகள் பெற்றதுடன், ஆங்கிலேயர், அமெரிக்கர்கள் போன்ற வெளிநாட்டாரும் அந்தப் புதுமை ஓவியங்களை கண்டு பாராட்டியிருக்கின்றனர்.

ஓவியங்களை விளக்கிட, கீழே அழகு தமிழில் அவர் எழுதியிருந்தார். 40க்கு மேற்பட்ட ஓவியங்கள் அங்குவைக்கப்பட்டிருந்தன.

அவைகளுக்கப்பால், உலகைத் திருத்திய உத்தமர்களின் படங்கள் வைக்கப்பட்டிருந்தன. அரசியல் தலைவர்கள், எழுத்தாளர்கள், தத்துவஞானிகள்-கிரேக்ககாலம் தொடங்கி இன்றுவரை வைக்கப்பட்டிருந்தன. இந்த ஓவியங்கள் பெரும்பாலும் ஓவியர்கள் பழனி, இராசு, எழிலன் முதலியவர்களால் தீட்டப்பட்டவைகளாகும். குறளோவியங்கள் பல தொடர்ந்திருந்தன. தோழர் இளமுருகு அவர்கள் கருத்துதவ, ஓவியர் முத்துஅவர்களால் அவை சித்திரிக்கப்பட்டன. பின் விஞ்ஞான வளர்ச்சிகளைக் காட்டிடும் ஓவியங்களும், விஞ்ஞானிகளின் ஓவியங்களும் நெருங்கியிருந்தன. அவற்றையடுத்து, மாணவர் கழகத்தினர் முயற்சியால் வைக்கப்பட்டிருந்த விஞ்ஞானப் பகுதி ஆரம்பமாயிற்று. விஞ்ஞானப் புதுமைகள் எப்படி நிகழ்கின்றன என்பதை—ரூ. 25க்குள் ரேடியோ செய்வதெப்படி என்பதிலிருந்து, காசுபோட்டால் மிட்டாய் எப்படிக் கிடைக்கிறது என்பதுவரை மாணவத்தோழர்களால் விளக்கப்பட்டன. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலிருந்தும், சென்னைக் கல்லூரிகளிலிருந்தும் மாணவர்கள் பலர் ஈடுபட்டு, பணியாற்றினார்கள்.

கண்காட்சியை விட்டு மாநாட்டுப் பந்தலுக்குள் வரும்பொழுது, தோழர் சம்பத் அவர்கள் தலைமையை வழிமொழிவதைமுடித்துக்கொண்டிருந்தார். அடுத்தபடி அண்ணா அவர்கள் வந்து மிகச் சுருக்கமாக "தம்பி வா! தலைமை ஏற்று நடத்தவா!" என்று சொல்லி முடித்தார். அந்தச் சிறிய வாழ்த்துரையை நீண்டதொரு கைதட்டல் வரவேற்றது. நாம் அமைத்திருந்த நகருக்குப்பெயர் வள்ளுவர் நகரல்லவா? மிகப்பெரும் கருத்துக்களையும் இரண்டடியான குறள் பாட்டில் வள்ளுவர் எழுதி வைத்திருக்கிறார். அந்த வள்ளுவர் பெயரைத் தாங்கிய நகரில் இருப்பதை எண்ணிபோலும் இரண்டு வாக்கியங்களில் மிகுந்த பாசத்தையும், அன்பையும், மகிழ்ச்சியையும் பெருமிதத்தையும் உண்டாக்கினார். மாநாட்டுத் தலைவரின் சொற்பொழிவு ஆரம்பித்தது. இயக்கவரலாற்றையும், கழகங்கண்ட வெற்றிகளையும், புயல் நிதி கைத்தறி உதவி போன்று நடத்திய ஆக்கவேலைகளையும், இயக்கத்தின் வளர்ச்சி பல்வேறு துறைகளிலும் பரவியிருப்பது குறித்தும், கழகத்தை ஒழித்து விடக் கர்ச்சனை புரிந்தவர்கள் பெரிய எழுத்து இதிகாசப் புத்தகங்கள் முன் உட்கார்ந்து புலம்பும் நிலைபற்றியும், எதிர்ப்புக்கள் மத்தியில் கழகம் வளரும் மாண்புபற்றியும், எதிர்காலம் கழகத்திற்குத் தரும் கடும் பிரச்சினைகள்பற்றியும் மாநாட்டுத் தலைவர் நீண்டதொரு விளக்கம் தந்தார்கள்.

முதல்நாள் மழையால், நிகழ்ச்சி நிரலில் நடைபெற்றிருக்க வேண்டியவை தடைப்பட்டிருந்தன. ஆதலால், பிற்பகல் நிகழ்ச்சிகள் சீக்கிரமாக ஆரம்பமாயின. மதுரை மாவட்டத் தோழர்கள் சௌந்திரராசன், காவிரிப்பிச்சை ஆகியோர் இன்னிசை விருந்துடன் பிற்பகல் மாநாடு துவங்கியது. "இலக்கியத்தில் அரசியல் கருத்துக்கள்." என்ற தலைப்பின் கீழ் அன்பழகன் பேசினார். தமிழ் இலக்கியப் பயிற்சியுடன் நில்லாது, அரசியல் உலகின் பயிற்சியும் பெற்றுள்ளவர் ஆசிரியர் அன்பழகன் ஆவார். தமிழ் இலக்கியத்தில் ஒளிவிடும் அரசியல் கருத்துக்களை அழகுபட அன்பழகன் விரித்துரைத்தார்.

தொழிற் புரட்சியின் அவசியம்பற்றியும் தொழில் வளர்ச்சியின் அடிப்படையில்தான் நாட்டின் வாழ்க்கைத்தரம் உயரும் என்பதையும் தாம் எடுத்துக்கொண்ட "தொழிலில் புரட்சி" என்ற தலைப்பின் கீழ் விளங்க வைத்தார் தோழர் காஞ்சி கல்யாணசுந்தரம்.

உலகில் நடைபெறும் விடுதலைக் கிளர்ச்சிகளை ஆராய்ந்து, திராவிட நாட்டின் விடுதலைக் கிளர்ச்சிக்கு அவைதரும் குறிப்புகளைப்பற்றி, தோழர் மதியழகன் பேசினார்: தமக்கு இயல்

பான கிளர்ச்சிக் கருத்துக்களுடன் புரட்சிப் பொலிவுடன்.

விடுதலைக் கிளர்ச்சிகள் தாமாக மலர்வதில்லை. எவர்க்கும் அடிமைப்படாது தாமாக வாழவேண்டும் — வாழ்வதற்கான உரிமை இருக்கிறது என்று உரிமை எண்ணம் பிறக்க வேண்டும். உரிமை எண்ணமும், அதை நிலை நாட்டுவதற்கான கிளர்ச்சிகளும் விடுதலைக் கிளர்ச்சிகளுக்கு அடிகோலுகின்றன. ஆகவே வலியுறுத்தி, "உரிமைக் கிளர்ச்சிகள்"! இதை வலியுறுத்த: [illegible] என்ற தலைப்பின்கீழ் தோழியர் அருண்மொழி பேசினார்கள். மிகத் தெளிவாக, கோர்வையாக, அவர்கள் பேச்சு இருந்தது. மாநாட்டில் குழுமியிருந்த பெண்கள் எல்லோரும் முதலில் ஆச்சரியத்துடனும், பின் பெருமையுடனும் அந்தப் பேச்சைக் கேட்டார்கள்.

விடுதலைக் கிளர்ச்சிகள், உரிமைக் கிளர்ச்சிகள் இவைகளின் பின் "ஜனநாயகம்" ஆரம்பமாயிற்று, தோழர் கி. மனோகரன் அவர்கள் பேச்சில். ஜனநாயகத் தத்துவத்தை விளக்கி, அதன் அமைப்பும் பண்பும் எவ்வாறு இருக்க வேண்டுமென்பதை அவர் விரித்துரைத்தார். ஜனநாயகத்தின் பெயரால் நேரு பண்டிதர் ஆட்சியில் நடைபெறும் நானாவித அலங்கோலங்களை அவர் சுட்டிக் காட்டினார். ஒரோர் முறை கையை உயர்த்தி நேருவின் சர்வாதிகாரத்தைச் சாடிடுவது, நேருவை எதிர் நிறுத்திக் குற்றஞ்சாட்டுவது போலிருந்தது. மக்களின் ஆரவாரமும் அவ்வப்பொழுது எழுந்தது, நேரு பண்டிதர்மீது அவர் வீசிடும் குற்றச்சாட்டுகளை ஆதரிப்பது போன்று.

"உலகைத் திருத்திய உத்தமர்கள்" என்ற அரிய தலைப்பின்கீழ் அருமை நண்பர் அரங்கண்ணல் பேசினார். கண்காட்சியில் உலகைத் திருத்திய உத்தமர்களின் ஓவியங்கள் இருந்தன. தோழர் அரங்கண்ணல் அவர்களைச் சொல்லோவியங்களாகத் தீட்டினார்.

பண்டைத் தமிழகத்தில் உரிமை பெற்ற மக்களிடை, பெண்கள் பெற்றிருந்த உரிமை பிற்காலத்தில் பேதங்காட்டும் வேதங்கள் வரவால் வீழ்ந்துபட்டதை "தாய்க்குல வரலாறு" என்ற பேச்சில் தோழியர் சத்தியவாணி முத்து எடுத்துக் காட்டினார்கள். தாய்க்குல ஏற்றத்துக்கு அவர்கள் பரிந்து பேசினார்கள், கூடியிருந்த பெண்கள் அதிகமான ஆதரவு காட்டினார்கள்.

ஒருவர் மொழிக்கும் மற்றொருவர் மொழிக்கும் எவ்வளவு வேறுபாடுகள் காணப்படுகின்றன, அதனடியில் சண்டை சச்சரவுகள் எவ்வாறு மூளுகின்றன என்பதை மிகச் சுலபமாக தோழர் கண்ணதாசன் விளக்கிக் காட்டினார்கள். தாய்மொழியின் பெருமைபற்றியும், அதைக் காத்திட எழுந்திடும் மொழிப்போராட்டம்பற்றியும் கண்ணதாசன் குறிப்பிட்டார்.

"தத்துவ வரலாறு" பற்றிப் பேச, தோழர் டி. கே. சீனிவாசன் வந்தார். காலத்தில் மட்டுமல்ல, கருத்தாலும், அமைப்பாலும் மிக நீண்ட, பெரிய பாடமாகும் தத்துவ வரலாறு என்பது. கிரேக்க நாட்டில் அறிவுக் கிளர்ச்சி [illegible] காலத்திலிருந்து, [illegible] சாக்ரடீஸ் [illegible] உலகமெங்கும் புரட்சிக் கனலை வீசியெறிந்திடும் காரல்மார்க்ஸ் காலம்வரை வளர்ந்துள்ள தத்துவங்கள் பலப்பல. மலைத்தொடர் போன்று, ஆங்காங்கு மலையுச்சிகளைக் காட்டி நீண்டு கிடக்கும் வரலாற்றை, டி. கே. சீனிவாசன் அவர்கள் மிகத் தெளிவாகக் காட்டினார். அவர் எடுத்த தலைப்பை மிக வேகத்துடன் ஆரம்பிக்கும்பொழுதே, எடுத்துக் கொண்ட பொருள் மிக நீண்டது என்பதைக் காட்டியது. வேகமாக ஒவ்வொரு தத்துவத்தைப் பற்றி அவர் சொல்லிக் கொண்டுபோனார். என்பக்கத்திலிருந்த பத்திரிக்கை நிருபர் ஒருவர், "பாடங்களெல்லாம் முடிந்ததும் பரிட்சைக்குத் தயார் செய்வதற்காக, திரும்பச் சுருக்கப்பாடத்தைச் சொல்லித் தருவார்களே—ரிவிஷன் வகுப்புகள், அதைப் போலிருக்கிறது இவர் பேச்சு!" என்று வியந்து சொன்னார். தெளிவும், வேகமும் மிக்கதாயிருந்தது அவர் பேச்சு.

அடுத்து தோழர் மு. கருணாநிதியின் "திராவிடத்தின் உலகத்தொடர்பு" என்ற பேச்சு ஆரம்பமானது. தத்துவ வரலாறு புத்தர் காலத்திலிருந்து ஆரம்பித்தது. "திராவிடத்தின் உலகத்தொடர்பு" பற்றிய வரலாறு எகிப்தியர் காலத்திலிருந்து, பாபிலோனிய நாகரிக காலத்திலிருந்து, சாலடியர் சால்புடன் வாழ்ந்த நாட்களுக்கு முன்பிருந்து ஆரம்பித்தது. ஆராய்ச்சிக்கருத்துக்களுடன் தொடர்புடையதாய், "தென்னாட்டைப்பற்றி உலகத்துக்குத் தெரியுமா?" என்று கேலி பேசுவோர்களுக்கு ஆணித்தரமான முறையில் பதில் சொல்லுவதாக கருணாநிதியின் பேச்சு இருந்தது. வரலாற்றுஏடுகளைப் புரட்டிக்காட்டினார், ஆராய்ச்சியாளர்களைத் திரட்டி முன்வைத்தார்.

பாபிலோனியாவில் தோழர்கள் இடம் வகித்ததும், தமிழ் நாட்டிலிருந்து கிளம்பிய உயர்தர நாகரிகம் கடல்வழியாகப்பெயர்ந்து சிந்துவெளி தீரம், பர்சியா, அரேபியா, பாபி

லோனியா இவைகளில் பரவி, எகிப்திய நாட்டுக்குள் சென்று, அந்நாட்டு நாகரிகத்தை வளம்பெறச்செய்ததையும் அவர் விளக்கினார். கிரேக்கநாட்டுச் சிந்தனையாளர் பெஸ்கா, வரலாற்றாசிரியர் எர்தோமகி, ரோம்நாட்டு பிளினி, எகிப்திய நாட்டுப் பழங்கால ஆசிரியர்கள், தற்காலத்திய ஆராய்ச்சியாளர்கள் இவர்களுடைய சாட்சியங்களை கருணாநிதி எடுத்து வீசினார். யவனர்களும், சீனர்களும், எகிப்தியரும் ரோமாபுரியினரும் தமிழகத்துடன் நடத்திய வாணிபத்தின் அளவும், வகையும், அது கண்டு மேலைநாட்டார்கள் வியப்பும் பொறாமையுங்கொண்டு, எழுதியவைகளும் வந்தன. கருணாநிதியின் பேச்சு, வரலாற்றுப்பெயர்களில் பொதிந்து கிடக்கும் பல்வேறு கருத்துக்களையும் கேட்பவர்களின் கவனத்துக்குக் கொண்டுவந்தது. தமிழ்நாட்டை உலகமறியாது என்று கூறிடும் அமைச்சர்களை கருணாநிதி இடித்துரைத்து "தமிழ்அன்னையே! உன்னை உலகமறியாது என்று கூறுகிறார்களே இது உண்மையா இது உண்மையா?" என்று தன் பேச்சை முடித்துக்கொண்டார்.

(அடுத்த இதழில் முடியும்)

தூரமும் வெப்பமும்

"அப்பா! பொறுக்கமுடியவில்லை, சூரியன் எவ்வளவு கொளுத்துகிறது!" என்று கோடை காலத்தில் சொல்லுகிறோம்.

"இன்று வெய்யல் மட்டுதான்." என்று குளிர்காலங்களில் சொல்லுகிறோம்.

கோடையில் சூரிய வெப்பம் அதிகமாயிருக்கிறது. மாரிக்காலத்தில் சூரிய வெப்பம் குறைந்திருக்கிறது. ஆனால் கோடையில்தான் சூரியன் பூமியிடமிருந்து தூரத்தில் இருக்கிறது, மாரிக்காலத்தில் சற்று அருகில் வருகிறது. இருந்தாலும், தூரம் அதிகமாக இருக்கும்பொழுது வெப்பம் அதிகமாகவும், தூரம் குறையும் பொழுது வெப்பம் குறைந்திருக்கிறது. இது வேடிக்கையாக இருக்கிறதல்லவா?

நெருப்பின் பக்கத்தில் இருக்கும்பொழுது வெப்பம் அதிகமாகத் தெரியும்' சற்று தூரம் போகும்பொழுது வெப்பம் குறைவாகத் தெரியும். ஆனால் சூரியனிடமிருந்து அதிக தூரத்தில் பூமி இருக்கும்பொழுதுதான் நமக்குக் கோடைகாலம்—வெய்யற்காலம் ஆரம்பிக்கிறது. ஜூலை மாதத்தில் சூரியனிடமிருந்து பூமி 9 கோடி 45 லட்சம் மைல் தூரத்தில் இருக்கிறது. நமக்கு மாரிக்காலமான டிசம்பர் மாதத்தில் 9 கோடி 15 லட்சம் மைல் தூரத்தில் பூமி இருக்கிறது! பூமியின் வடபகுதியில் வாழ்பவர்களுக்கு, சூரியன் அருகில் வரும்பொழுதுதான் குளிர்காலம் ஆரம்பிக்கிறது! இதற்குக் காரணம் பூமி நேராக இல்லாமல் சற்று சாய்ந்து சுற்றுகிறது. ஜூலை மாதத்தில் சற்று தூரத்தில் இருந்தபோதிலும், பூமி சூரியனை நோக்கிச் சாய்ந்து சுற்றுகிறது. அதனால் சூரியனின கதிர்கள் நேராக வடபகுதியைத் தாக்குகின்றன, வெப்பம் அதிகமாகிறது. மாரிக்காலத்தில் பூமி 30 லட்சம்மைல்கள் குறைவான தூரத்துக்கு வந்தாலும், தென்பகுதி சூரியனை நோக்கியும், சூரியனுக்கு அப்பாலும் இருந்து சுற்றுகின்றது. ஒளிக்கதிர்கள் நேராக இல்லாமல் சாய்ந்து விழுகின்றன. அதனால் வெப்பம் குறைந்து குளிர்ச்சி அதிகமாக யிருக்கிறது.

மேற்சொன்ன காரணங்களால், சூரியன் அருகில் இருக்கும்பொழுது வடபகுதியில் குளிர்காலமும் தென்பகுதியில் கோடை காலமும் இருக்கின்றன; சூரியன் தூரத்தில் இருக்கும்பொழுது வடபகுதியில் கோடையும், தென்பகுதியில் குளிர்காலமும் உண்டாகின்றன.

பூமியின் வடபகுதி, தென்பகுதி யென்பது பூமையக்கோட்டை (ஈக்வேடர் என்று ஆங்கிலத்தில் சொல்லப்படுவதை) வைத்துக் குறிக்கப்படுகின்றன. சூரியன் அனற்பிழம்பு என்றாலும், அருகிலிருக்கும்பொழுது, குளிரையும், தூரப்போகும் பொழுது வெப்பத்தையும் பூமியின் வடபகுதிக்கு அளிக்கிறது.

தமிழ்நாட்டின் இயற்கைவளம்

பன்மொழிப்புலவர் திரு. கா. அப்பாத்துரை, எம். ஏ., எல். டி.

உலகின் பல மொழிகளுக்கும் நாடுகளுக்கும் பெயரும் உருவும் எல்லையும் பண்பும் உருவாவதற்குப் பல்லாயிர ஆண்டுகட்கு முற்பட்டே தமிழ் என்ற திருந்தியமொழியும், தமிழகம் என்ற நாடும், மொழி நாடு சார்ந்த எல்லைப் பிரிவுகளும், நாகரிகமும் பண்பாடும் அமையப் பெற்ற இனம் தமிழினம். ஆனால் முத்திசைக் கடல் சூழ்ந்த அதன் பண்டைப் பரப்பு, கடல்கோளால் தெற்கிலும், அயலினக்கலப்பால் வடக்கிலும் மேற்கிலும் சென்ற ஆயிர ஆண்டுகளுக்கு முன்பே குறுகிற்று. வெள்ளையர் ஆட்சியிலும், அதன் மரபில் வந்துள்ள இந்தியர் ஆட்சியிலும் அது தன் தனி உருவும் தனித் தன்மையும் தனி உரிமையும் இழந்துள்ளது. இந்நிலையிலும் இழந்த உரிமைத் தமிழகத்தை மொழிவழி எல்லையிலேனும் பெற நாம் இன்று அவாவுகிறோம், கனவு காண்கிறோம்.

நாம் அவாவும் தமிழகம் நம் அவாவும் நாடாத இயற்கைவளம் உடையது. ஆனால் அதன் இன்றைய நிலை பண்புடைய அயலவரும் கண்டு பரிவுறும் நிலை ஆகும்.

இன்றைய தமிழ்நாடு இந்தியத் துணைக்கண்டத்தில் தமிழ் பேசுவோர் ஒருங்குறையும் தென்கிழக்குப் பகுதியேயாகும். இதுபண்டைத்தமிழகம்போல முத்திசைக் கடலெல்லை கொண்டதன்று. இரு திசைக்கடல் எல்லையும் இருதிசை நில எல்லையும் கொண்டது. கிழக்கேயும் தெற்கேயும் பழவேற்காட்டு ஏரிமுதல் கன்னியாகுமரிவரை வங்கக்குடாக் கடலும் மன்னார்குடாவும் எல்லைகள். வடக்கே தெலுங்கு கன்னடப் பகுதிகள் பழவேற்காட்டு ஏரிமுதல் நீலகிரிவரை எல்லையாகின்றன. மேற்கே அரபிக்கடல், மேற்கு மலைத்தொடர், மலையாளம் பேசும் பகுதிகள் ஆகியவை ஆங்காங்கே எல்லையாகின்றன.

இன்று சென்னை அரசில் இடம் பெற்ற நிலப்பரப்பிலே, பண்டைப் பாண்டியநாட்டுப் பகுதிகளான திருநெல்வேலி, இராமநாதபுரம், மதுரை மாவட்டங்கள்; பண்டைச் சோழ நாட்டுப் பகுதிகளான (புதுக்கோட்டை உட்பட்ட) திருச்சிராப்பள்ளி, தஞ்சை, தென் ஆர்க்காட்டு மாவட்டங்கள்; பண்டைச் சோழ நாட்டோடிணைந்த தொண்டைநாட்டுப் பகுதிகளான சென்னை, செங்கற்பட்டு, வடஆர்காடு மாவட்டங்களும் அவற்றுடன் இணைந்த சித்தூர் மாவட்டத் தமிழ்ப் பகுதிகளும், பண்டைச் சேரநாட்டோடிணைந்த கொங்கு நாட்டுப் பகுதிகளான சேலம், கோயமுத்தூர், நீலகிரி மாவட்டங்களும் அவற்றுடன் இணைந்து மைசூர் எல்லையிலிருக்கும் கோலார்ப் பகுதியும், மலபார் எல்லையில் கிடக்கும் பாலக்காட்டு வட்டப்பகுதியும், நீலகிரிப் பகுதியும், திரு-கொச்சி அரசின் எல்லையிலுள்ள சித்தூர் வட்டமும், தேவிகுளம் பீர்மேடு வட்டங்களும், செங்கோட்டை வட்டமும், நெய்யாற்றங்கரை வட்டமும், தோவாளை, அகஸ்தீசுரம் இரணியல், கற்குளம், விளவங்கோடு வட்டங்களும் தமிழ் நாடு என்று மீண்டும் தனியுரிமை பெற வேண்டிய இந்திய எல்லைகள் ஆகும்.

தமிழர் குடியேறியும் பண்டிருந்தே தொடர்ந்து வாழ்ந்தும் வந்துள்ள கடல்கடந்த பகுதிகள் இலங்கை, மலாயா, தென் கிழக்குத் தீவுகள், தென் கிழக்காசியா, பிஜி, திரினிதாத், மோரிசு, தென் ஆபிரிக்கா, ஜமய்க்கா, பிரிட்டிஷ் கயானா ஆகியவை ஆகும். தமிழ் நாடு உருவானால், அதன் பண்பாட்டு விரிவான தமிழகம் அல்லது பேருந்தமிழ் நாடு என்று கூறத்தக்கவை இவை.

தமிழ் நாடு நிலவுலக நடுவளரக்குச் சற்று வடக்கில் வடநேர்வரை (North Latitude) 8 பாகையிலிருந்து $13\frac{1}{2}$ பாகைவரையும் கீழ் நிரைவரை (East Longtitude) 78 பாகையிலிருந்து 82 பாகைவரையும் பரவியுள்ளது. சென்னை அரசு எல்லைக்குள் கிடக்கும் பகுதியளவிலேயே இதன் நிலப்பரப்பு ஐம்பதினாயிரத்துக்கு மேற்பட்ட சதுர மைல்களும், 2 கோடி 78 நூறாயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் தொகையும் உடையது. மொழியுரிமையாக அமையும் மாநிலம் ஐம்பத்தையாயிரம் சதுர மைல் பரப்பும் மூன்று கோடி மக்கள் தொகையும் உடையதாயிருக்கும் என்னலாம்.

தமிழர்கள் நிலத்தைக் குறிஞ்சி அல்லது மலைப்பகுதி என்றும், முல்லை அல்லது காட்டுப் பகுதி என்றும், மருதம் அல்லது ஆற்றுப் பகுதி என்றும், நெய்தல் அல்லது கடற்

கரைப்பகுதி என்றும், பாலை அல்லது வளங் குன்றிய பகுதி என்றும் ஐந்திணையாகப்பிரித்திருந்தனர். திருநெல்வேலி மாவட்டத்தின் தென் பகுதியில் ஒரு சிறு பரப்புத்தவிர, தமிழ் உட்பகுதி எதுவும் இன்று பாலை என்று குறிக்கத் தக்கதன்று. மற்ற நால்வகைத்திணைகளும் அவற்றுக்குரிய மலைவளம், காட்டு வளம், ஆற்றுவளம், கடல்வளம் ஆகிய நால் வகை இயற்கை வளங்களும் நிறைந்த முழு நிறை மாநிலம் தமிழ்நாடு.

பண்டை நாகரிக உலகிலும் சரி, இன்றைய உலகிலும் சரி, தமிழகம் இயல்பாகவே உலகின் நடுமையமாக அமைந்துள்ளது. ஆபிரிக்கா, ஐரோப்பா, ஆசியாவின் பிற பகுதிகள், அமெரிக்கா, ஆஸ்திரேலியா ஆகிய கண்டங்கள் கிட்டத்தட்ட அதைச்சுற்றிலும் நிலவுலகில் பதிக்கப்பட்டவை போலக் கிடக்கின்றன. கடலுலகிலும் இந்துமா கடலில் அதுவும் இலங்கையும் கிட்டத்தட்ட மையமாகவே இருக்கின்றது. மனித நடமாட்டமுடைய அட்லாண்டிக் மாகடலும் பஸிபிக் மாகடலும் இதன் இருதிசையிலும் உள்ளவையே. கடலுலகின் வாயில்களான ஜிபரால்ட்டர், சூயஸ், ஏடன், சிங்கப்பூர், பனமா ஆகியவற்றிடையேயுள்ள கோட்டின்மீதே தமிழகம் அமைந்துள்ளது காணலாம். உலகின் கடல் நெறிகளும் வான் நெறிகளும் பெரும்பாலும் தமிழ்நாடு அல்லது இலங்கை கடந்தே செல்கின்றன. நிலப் பாதைகள் இவ்வாறு செல்ல முடியாவிட்டாலும், எல்லாப பாதைகளுக்கும் இடங்களுக்கும் தமிழ்நாடு அணிமையுடையதேயாகும்.

தமிழகத்தின் இம்மைய அமைப்பே அதை உலகில் முதல் நாகரிக நாடாகவும் நாகரிக முன்னோடியாகவும் உலக நாகரிகத் தாயாகவும் ஆக்கியிருந்தது. உலகின் முதல் கடலோடியினமாகவும் உலகின் முதல் பேரரசு கடற் பேரரசு கடல் வாணிகஇனம் ஆகவும் அதுவே தமிழகத்தை ஆக்கியிருந்தது. இவ்வியற்கை வாய்ப்புக்கள் இன்று பயன்படாவிட்டாலும் அணிமை வருங்கால உரிமைத் தமிழகத்தால் இவை நன்கு பயன்படுத்தத் தக்கவையேயாகும்.

உலகின் தட்பவெப்ப மண்டலங்களுள் தமிழகம் வெப்பமண்டலத்தினுள்ளே உலகநடு வரை அருகிலேயே உள்ளது. ஆயினும் மட்டற்ற வெப்பம், மட்டற்ற குளிர், மட்டற்ற மழை என்ற நிலைகளுக்கு ஆளான நாடுகளில் தமிழகம் ஒன்றன்று. மட்டான வெப்பம், மட்டான பருவமழை இவையே அதன் பொது அமைதிகள் ஆகும். கிழக்கும் தெற்கும் கடலும், மேற்கில் மலையும், வடக்கில் மேட்டு நிலமும் வெப்பத்தை மட்டுப் படுத்துவதுடன் மிகு வெப்பு, மிகு குளிர் நிலைகளைத் தடுக்கின்றன. கோடை காலங்களில் அது டில்லியை விட வெப்பக் குறைவாக உள்ளது. மழை வடையிலும் மேற்குத்தொடர் தென்மேற்குப் பருவமழையைக்குறைத்துவிடுகிறது. வைகாசி 15 முதல் ஐப்பசி 15வரை (ஜுன்-அக்டோபர்) வீசும் இப்பருவத்தில் தமிழகத்தின் பெரும் பகுதிக்கு 20 அங்குல முதல் நாற்பது அங்குலம் வரை மழை கிடைக்கிறது. பாண்டியநாட்டில் மலைசாராப்பகுதியில் மட்டும் 20 அங்குலத்துக்குக் குறைந்த மழை பெய்கிறது. அதே சமயம் வடகிழக்குப்பருவத்திலும் ஐப்பசிமுதல் மார்கழி வரை (நவம்பர்-டிசம்பர்) தஞ்சை மாவட்டத்துக்கு 20 அங்குலத்துக்கு மேலும் பிற தெற்குக் கிழக்கு மாவட்டங்களுக்கெல்லாம் 10 அங்குலத்துக்கு மேலும் மழை பெய்கிறது. இங்ஙனம் ஆண்டுக்கு இரு பருவங்களாக ஆறுமாதகாலம் பரவலாகத் தமிழகத்தின் பெரும் பகுதிக்கு மட்டான மழை கிடைக்கிறது.

தமிழகத்துக்குப் பொதுவாகத் தென்கிழக்குப் பருவமழையும் மேற்குமலைத் தொடருமே பல ஆறுகளையும் ஆற்று வளங்களையும் தருகின்றன. சில ஆறுகள் கிழக்கு மலைத்தொடரிலும் எழுகின்றன. முக்கியமான ஆறுகள் பாலாறு, தென் பெண்ணை, வெள்ளாறு, காவிரி, வைகை, தாமிரவருணி ஆகியவை.

மிகப்பெரிய ஆறாகிய காவிரியும் மிகச்சிறிதான தாமிரவருணியுமே ஆண்டுமுழுவதும் நீரோட்டமுடைய உயிர் ஆறுகள். இவை தென்மேற்குப் பருவக்காற்றால் வளம்பெறும் மேற்குத் தொடர்ப்பகுதியில் பிறந்து அடர்ந்த காடுகள் வழியாய் ஓடி, பல கிளையாறுகளுடன் இணைவதே இவற்றின் தனிப்பட்ட உயர் நீர் வளத்திற்குக் காரணம். இவற்றுக் கடுத்தபடி வைகையும் பாலாறும் காடற்ற கடுநிலத்தின்மீது ஓடுவதால் ஊற்றுவளமே உடையன. காவிரியும் வைகையும் தாமிரவருணியுமே சோழபாண்டிய அரசுகளின் நிலைக்களமாகவும் அவற்றின் நாகரிகப் பண்ணைகளாகவும் இயங்கிவந்துள்ளன. திருவாங்கூர் தமிழகத்திலுள்ள பெரியாற்று அணைத்திட்டத்தால் வைகை துணைவளம் பெற்றுள்ளது, பெற்று வருகிறது.

பண்டைத்தமிழகம் உலகிலேயே சிறந்த துறைமுகங்களை உடையதாய் இருந்தது. கடற்கரைப் பட்டினங்களும், உள்நாட்டு நகரங்களும் சிறந்திருந்ததால், அது இன்றைய கிராம

இந்தியாவைப்போல் இராமல், மேல் நாடுகளைப் போல நகர வாழ்க்கைச் சிறப்பும் உயர்தர வாடிக்கைச் சிறப்பும் உடையதாய் இருந்தது. கடல் வாணிகம், உள்நாட்டு வாணிகம், செய் தொழில் ஆகியவற்றிலும் வளமிக்கதாய் உலகில்செல்வவளத்தில்முதன்மைபெற்றிருந்தது. ஆனால் நீராவிக்கப்பல் வந்தபின் அதற்குப் போதிய ஆழ்கடலும் இயற்கைத் துறைமுகமும் தமிழகத்தில் குறைந்துள்ளன. சென்னை வெள்ளையராட்சியில் பெருந்துறைமுகமாகியுள்ளது. சிறு துறைமுகப் பட்டினங்களில் தூத்துக்குடியும் புதுச்சேரியும் சென்னைக்கடுத்தபடி ஏற்றுமதி இறக்குமதிச் சிறப்பு அடைந்துள்ளன. இவையன்றிக் காரைக்கால், நாகப்பட்டினம், தனுஷ்கோடி ஆகிய துறைநகரங்களும்; மரக்காணம், சதுரங்கப்பட்டினம், மாமல்லபுரம், கூடலூர், தரங்கம்பாடி, காயல்பட்டினம், குலசேகரன் பட்டினம், குளச்சல் ஆகிய பட்டுத் துறைகளும் தமிழகத்தில் உள்ளன. இவற்றுட் பலவும் இவற்றையடுத்த இடங்களும் பண்டு உலகின் பெரிய வாணிகக் துறைகளாக நிலவியவையேயாகும்.

கடல் வளமாகிய முத்து, சங்கு, சிப்பி, மீன், பவளம், உப்பு; மலைவளமாகிய சந்தணம், அகில், தேக்கு, ஒண்மணிகள்; காட்டுவளமாகியதேன், அரங்கு; அடிநிலவளமாகிய தங்கம், இரும்பு; ஆற்று நிலவளமாகிய நெற்பயிற், கரும்பு, அவுரி, கோரை புன்செய்ப்பயிர்கள், பருத்தி; இவற்றையொட்டிய உழவுத்தொழில், முத்தெடுத்தல், கடல்வாணிகம், சுரங்கத் தொழில், சர்க்கரைத் தொழில், சாயத் தொழில், பொன்வினை, மணிவினை, வளையல் தொழில், நூற்பு நெசவுத் தொழில்; செங்கல் தொழில், மரத் தொழில் ஆகியவை தமிழன் இயற்கையிலிருந்தும் தன் இயற்கை சார்ந்த வாழ்விலிருந்தும் முதன் முதல் கண்டு எடுத்து மனித உலகுக்கு வழங்கிய செல்வங்கள் என்று உலக வரலாறு நமக்கு எடுத்தியம்புகிறது. உலகின் பல மொழிகளிலே இன்னும் இவற்றுக்குரிய சொற்கள் தமிழ்ச் சொற்களாகவே அமைந்துள்ளன.

முத்தும் சங்கும் இன்றும் திருநெல்வேலிக் கடல் தீரத்திலும் இராமநாதபுரக்கடல் தீரத்திலும் முக்கியத் தொழிலாகவே உள்ளன. அமெரிக்க வளைகுடாவிலும், ஆஸ்திரேலிய வடகரையிலும் இப்போது முத்துப்பண்ணைகள் ஏற்பட்டுவிட்டாலும், உலகின் முத்து வளத்தின் பெரும்பகுதி இன்னும் தமிழகத் தென் கரைக்குரியதாகவே உள்ளது. மற்றவகையில் இன்று கேலிக்குரியதாகிவிட்ட கூவத்தாறு சிப்பித் தொழிலுக்குரிய சாலையாகவே இன்றும் இயங்குகின்றது. கோலாரில் எடுக்கப்படும் தங்கம் உலகத் தங்கவளத்தில் நூற்றுக்கு இரண்டு விழுக்காடேயானாலும், இந்திய மாநிலத்தின் தங்க வளத்தில் நூற்றுக்கு 90 விழுக்காட்டுக்கு மேற்பட்டதாகும். இது போலவே மீன் வளத்தில் உலகில் இந்தியா பிற்பட்டுள்ளதானாலும், தமிழகக் கரையில் அதன் வளம் மிகப் பெரிது. அரசியலாரும் அதில் கருத்தைச் செலுத்தி வளம் பெருக்க முயன்றாலும், நாட்டுரிமை அரசு ஏற்படாத காரணத்தால், கானடா, சப்பான், ரஷ்யா ஆகிய நாடுகளைப்போல அவ்வளம் பெருக்க முடியவில்லை. தென் கடலின் மீன் வகைகள் மற்றக் கடல்களுக்கு ஈடல்லவாயினும், ஏ-ஊட்டமிக்க சுறாவுக்கு அதுவே தனிச்சிறப்பான தாயகமாகும். தமிழகக் கடல் மறவராகிய மீனவர் ஆற்றல் இத்துறையில் போதிய அளவு பயன்படுத்தப் பெறவில்லை.

கோலாரில் மட்டுமின்றிப் பிற தமிழகப்பகுதிகளிலும் தங்கச் சுரங்கங்கள் பண்டை நாட்களில் இருந்தாக அறிகிறோம். இரும்பும் நிலக்கரியும் பிற உலோகங்களும் கனிப் பொருள்களும் இதுபோலப் பல இடங்களில் வள ஆதார நிலையில் இருப்பதாக அறிகிறோம். இவற்றுள் தென் ஆர்க்காட்டு மாவட்டத்திலுள்ள நெய்வேலிப் பழுப்பு நிலக்கரி இப்போதுதான் அரசியல் முயற்சிக்குரியதாகியுள்ளது. சேலத்திலுள்ள இரும்பும் இதுபோல இனிப் பயன்படுத்தப் படலாம் என்று அரசியல் வட்டாரங்களில் நம்பப்படுகிறது. ஆனால் இவை இன்னும் இந்திய நடு அரசின் உரிமையாட்சியில் இருப்பதாலும், சென்னை அரசு தமிழக உரிமையரசாய் இல்லாததாலும் இவ் வளங்கள் போதிய அளவு நாட்டை வளப்படுத்தும் முறையில் பயன்படுத்தப்படாமல், பிறபகுதிகளின் நலங் கருதியே ஊக்கப்பட வேண்டிய நிலையில் உள்ளன.

தஞ்சையில் நில எண்ணெய்கூட இருப்பதாகப் பலர் கருதுகின்றனர். இதுவருங்கால நில அகழ்வாய்வாளர் முயற்சிக்குரியது.

தாமிரம் சேலத்திலும், அப்பிரகம் சேலம், கோவையிலும், மாக்னைசட் நாகர்கோவிலையடுத்த மணவாளக் குறிச்சியிலும், ரப்பர், தேயிலை, காப்பி ஆகியவை மேற்குமலைத் தொடரின் இரு சரிவுகளிலும் செல்வவளம் பெருக்க உதவுகின்றன.

பண்டைத் தமிழரசர்கள் காவிரிக்குக் கரை கட்டித் தொண்டை நாட்டை வளப்படுத்தியவர் என்று புகழ் பெறுகிறார்கள். தமிழரசரும்

புலவரும் நீர்ப்பாசனத்தையே மன்னன் கை வளம் தரும் மழையாகப்போற்றினர். தமிழகத்தின் ஆறுகள் இன்று நீர்-மின்சார மூலம் புதுவளம் திகழ்பவையாய்உள்ளன. பெரியாற்றுத்திட்டம், பாவநாசத்திட்டம், மேட்டூர்த்திட்டம், மணி முத்தாற்றுத் திட்டம் ஆகிய திட்டங்கள் தமிழகத்துக்கு உழவுவளமும் நகர நல வாய்ப்பு வளமும் தருவதுடன் தொழில் வளங்களுக்கும் ஆதாரமாகி வருகின்றன. நல்ல தமிழத் தேசிய அரசியல் அமைந்தால் இவ் வளங்கள் பன்மடங்கு பெருகும் என்பது உறுதி.

தமிழகத்தின் வேளாண்மை மழை வளம், ஆற்று வளம், கால்வாய்ப் பாசன வளம், வான் பார்த்த ஏரிவளம், இறைவைக்கிணறு வளம் ஆகியவற்றை எதிர்பார்த்து நடைபெறுபவை. இவற்றுள் இடைக்கால அரசியல் கோளாறுகளின்போதும் வெள்ளைய ராட்சியின் போதும் காடுகள் அழிக்கப்பட்டன. வானம் பார்த்த ஏரிகள் நிலமாக்கப்பட்டு நீர்வளமும் நிலவளமும் மழை வளமும் குறைந்தன. அத்துடன் புன்செய்கள் நன்செய்களாகப் பட்டதனுல், நாட்டில் உழவர்க்குப் போதிய நல்ல விலை கிடைக்காமலும் தொழிலுக்கான பயிர்கள் அழிவுற்றும் போயின. வருங்கால அரசியல் நாட்டுத் தேவை, பொருளியல் வாழ்வு ஆகியவற்றுக்கேற்ற தேசியத்திட்டம் அமைத்தால், வெள்ளையர் ஆட்சிக்கு முன்இருந்த தமிழக வளத்தை நாம் மீட்டும் பெறுதல் கூடும்.

இயற்கை வளம் வாழ்க்கை வளமாக மக்கள் ஆள்வளமும் திறவளமும் நன்கு பயன் படுத்தப்பட வேண்டும். நல்ல அரசியல் இயற்கை வளம் பெருக்கத் திட்டமிடுவதோடு, அதற்கேற்ற மக்கட் பண்புவளமும் பெருக்க வேண்டும். தொழிலும் உழைப்பும் அறிவும் பயன் படாமல், அயல் நாட்டுக்கு அடிமையாக வாழும் பண்பும் இன்று கற்றவரிடமும் கல்லாதவரிடமும் ஒருங்குப்பரவி வருகிறது. நாட்டுரிமை அரசியல் இயற்கை வளம் பண்படுத்துவதுடன் இம்மக்கள் பண்பு வளமும் பண்படுத்த வேண்டும்.

[மதுரைத் தமிழ்ச் சங்கம் பொன்விழா மலர்-1956]

*

முடியாதது

மனிதன் நினைத்தால் முடியாதது எதுவுமில்லை என்று பெரும்பான்மையோர் கூறிக்கொண்டே முடியாத பலவற்றைப்பற்றி வருந்திக்கொண்டுமிருக்கின்றனர். அவர்கள் "தெய்வத்தாலாகாதெனினும் முயற்சி மெய்வருத்தக் கூலிதரும்" என்ற குறளையும் மேற்கோள் காட்டத் தயங்குவதில்லை. எனினும் முடியாமையும் அவர்களை விட்டு நீங்கியபாடில்லை. ஈண்டு தெய்வத்தையும் மிஞ்சிய முயற்சியுடையார் ஏன் நினைத்ததை முடிக்க இயலுவதில்லை?

சமுதாயத்திலே மனிதனை மனிதன் உணர்ந்து உள்ளொன்று புறமொன்றின்றிச் செயலாற்றும் நிலை வருமளவும் எதனுலும் நினைத்ததை நினைத்தவாறு செய்துகொள்ள முடியாது. "காதலர் காதல் வாழ்வு வாழ எண்ணுகின்றனர். அலுவலகப் பணியாளர் தன்வரை மேம்பாட்டுடன் இருக்கவேண்டுமென எண்ணுகின்றனர். புலவன் புதுமையை நிலைநாட்டிவிடவேண்டுமென்று எண்ணுகிருன். ஆசிரியர் தாம் கருதுவதை வெளியிட்டு அவை மக்களிடைப் பதியவேண்டுமெனக் கருதுகிருர். அன்ருட வாழ்வின் வெளிப்புறச் சூழல்கள் இன்னின்னபடி இருக்க வேண்டுமென்று பலர் பலவாறு கருதுகின்றனர். பயணத் தொடர்புடையவர்கள் சாதன அமைப்புக்களைப்பற்றித் தத்தமக்கேற்ப எண்ணுகின்றனர். இவையெல்லாம் முடியாதது ஏனெனில், எண்ணும் எண்ணங்கள் பொதுவாக இல்லாமையே காரணம். இவைஎல்லாம் முடிய, மனிதன் தனக்கன்றிப் பிறர்க்காக வாழ எண்ண வேண்டும். அப்போது முடியாதது என ஒன்று இருக்க முடியாது.

ஓடிப்போன காதலர்

[இரா. நெடுஞ்செழியன்]

உப்பங்கழிகளும் புன்னைமரச்சோலைகளும் நிறைந்த கடற்கரையை அடுத்த சிற்றூர்தான் அம்மங்கைநல்லாளின் இருப்பிடம். அவள் குடிச்சிறப்பும், செல்வவளமும்மிகுந்த குடும்பத்தில் தோன்றியவள். செவிலித்தாய் கண்ணை போல் காத்துவர, தோழிமார்கள் எப்பொழுதும் அவளுடனிருந்து அவளுக்கு மகிழ்ச்சி ஊட்டிவர அவள் நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக அழகுற வளர்ந்து வருகிறாள்.

தலைவி, தன்தோழிமார்களோடு சேர்ந்து காலைப்பொழுதில் தாயம் போன்ற வீட்டு விளையாட்டுக்களை விளையாடுவது, நண்பகலில் நீராட ஓடைக்குச் செல்வது, மாலைப்பொழுதில் மலர்பறிக்க பூஞ்சோலை செல்வது, கடற்கரை மணலிலே பந்துவிளையாடியும் ஓடியாடிப்பிடித்தும் விளையாடி மகிழ்வது, இயற்கை வளங்காணுவது, நிலாப்பொழுதில் நிலாவிளையாட்டுக்கள் விளையாடுவது ஆகியவற்றிலேதான் பொழுதைப் போக்கிக்கொண்டு வருகிறாள். தோழிமார்கள் தலைவியை வெளியே அழைத்துச் செல்லும்போது அவளை விலையுயர்ந்த ஆடைகளாலும், வேலைப்பாடுகள் நிறைந்த அணிகலன்களாலும் ஒப்பனைசெய்து அழைத்துக் கொண்டுபோவது வழக்கம். தலைவி கவலை ஏதுமின்றி மிகச்செல்லமாக வளர்ந்து வருகிறாள்.

ஒரு நாள் அவள் சோலையில் தன் தோழிமார்களோடு ஓடியாடிப் பிடித்து விளையாடிக் கொண்டிருக்கும்போது, அவ்வழியே வந்த அறிவும், ஆற்றலும், அழகும், பண்பும் ஒருங்கே திரண்டு ஓருருவாய் வந்ததுபோலக் கட்டிளங்காளைப் பருவத்தினன் ஒருவன் வருகிறான். அவன் சோலைமயிலென ஆடித்திரியும் தலைவியைக் காண்கிறான். கண்ட அளவிலே அவள் அழகிலும், கவர்ச்சியிலும் அப்படியே அசைவற்று நின்றுவிடுகிறான். தலைவியும் தோழிமார்களும் தன்னைக் கண்டுவிடுவார்களோ, கண்டு அவ்விடம்விட்டு அப்புறப் படுத்திவிடுவார்களோ என்று கருதி அவன் புதர் ஒன்றின் மறைவில்ஒளிந்து நின்று தலைவியின் அழகையும், ஆட்டத்தையும் கண்ணால் பருகிக்கொண்டிருக்கிறான். மாலைப்பொழுது மறையும்போது, அவர்கள் வீடு நோக்கித் திரும்பி, நெடுந்தொலைவு செல்லும் வரையில் இமைகொட்டாது அவர்களை அவன் பார்த்திருந்துவிட்டுப் பின் அவள்பற்றிய நினைவோடு தன் இல்லம் ஏகுகிறான்.

நாள்தோறும் வருவது, மறைந்திருந்து தலைவியைக்கண்டு மகிழ்வது, பின் வீடுதிரும்புவதுமான பழக்கத்தைத் தலைவன் மேற்கொள்கிறான். ஒருநாள் தலைவி தோழிமார்களோடு சேர்ந்து விளையாடிக்கொண்டிருந்த பந்து தலைவன் ஒளிந்திருந்த புதருக்கு அப்பால்போய் விழுகிறது. அதனை எடுக்கத் தலைவியே ஓடி வருகிறாள். அதற்குள் தலைவன் அந்தப் பந்தை எடுத்துத் தன்கையில் வைத்துக் கொண்டு, தலைவியின் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறான். தலைவி புதரைத் தாண்டி வந்து பார்க்கும்போது, பந்தைக் கையில் ஏந்தியவண்ணம், தோற்றப் பொலிவோடு கூடிய கட்டிளங்காளை யொருவன் எதிரே நின்று கொண்டிருப்பதைக்கண்டு திடுக்கிட்டுப் போகிறாள்; பின் அவனது கவர்ச்சிகரமான தோற்றங்கண்டு திகைத்துப்போகிறாள்; என்ன சொல்லுவது, என்ன செய்வது என்று தெரியாமல் விழித்துக் கொண்டிருக்கிறாள்.

சிறிதுநேரம் இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டு அசைவற்று நின்ற பிறகு, "என்ன வேண்டும்?" என்று தலைவன் அவளைக்கேட்கிறான்.

நாணமும் வெட்கமும் கழுத்தைப்பிடித்து அழுத்த, தழதழத்த குரலில் "நாங்கள் விட்டெறிந்த பந்து இந்தப்பக்கம் வந்ததா?" என்று, அவன் கையிலிருப்பதை அறிந்து கொள்ளாதவள்போல் கேட்கிறாள்.

அவன் உடனே "இதுவா? பார்?" என்று பந்தை அவளிடம் காட்டினான்.

அவள் "ஆமாம்! இதுதான்" என்கிறாள்.

"அப்படியானால் இதோ எடுத்துக்கொள்!" என்று அவளிடம் பந்தைக் கொடுக்கிறான். அவள் கையேந்தி வாங்க முற்படுகிறாள். அவள் கையில் பந்தை வைக்கும்போது, தன் கையும் அவள்கையில் படும்படியாக நெருங்கி நின்று வைக்கிறான். கையோடு கை பட்ட அளவில் இருவருக்கும் உடல்சிலிர்த்துப் போய்விடுகிறது. அவள் திகில் கொண்ட நெஞ்சினளாய் அவ்விடம் விட்டு அகன்று, தோழிகளிருக்குமிடம் போய்ச்சேருகிறாள்.

வெய்யில் எரித்தாலும், காற்று அடித்தாலும், மழைபெய்தாலும் சரி நாள்விடாமல் மாலைப் பொழுதில் சோலைப்பக்கம் வருவதை அவளும் கொள்ளத் தலைப்படுகிறாள். இப்பொழுதெல்லாம் வேண்டுமென்றே பந்தைப் புதர்ப்பக்கம் தூக்கிஎறிவது, அதனை எடுக்கத் தானே ஓடுவது, தலைவன் எடுத்துக்கொடுக்க வாங்கிக்கொண்டு கடைக்கண் பார்வையைச் செலுத்திவிட்டு வருது என்ற பழக்கத்தைத் தலைவி மேற்கொள்ளுகிறாள்.

ஒருநாள் தோழிமார்களையெல்லாம் நிறுத்திவிட்டு அவள் மட்டும் தன்னந்தனியே சோலைப் பக்கம் வருகிறாள். தலைவன் தனியே வரும் அவளைக் கனிவுடன் வரவேற்றுக் காதல் மொழி பரிமாறிநிற்கிறான். அவளும் பரிமாறுகிறாள். இருவரும் கூடிக்குலாவிக் களவொழுக்கத்தை இன்பமாய்க் கழிக்கின்றனர். இந்தக் களவொழுக்கம் சிலநாட்கள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

தலைவனும் தலைவியும் களவொழுக்கத்தில் ஈடுபட்டிருப்பது ஊரிலுள்ள பொல்லா முதுமைப் பெண்டிர்க்கு எப்படியோ தெரிந்துவிடுகிறது, அவர்கள் அலர்தூற்ற ஆரம்பிக்கின்றனர். பொல்லா மகளிர் அலர்தூற்றத் தொடங்கியிருப்பதைக் கேள்வியுற்ற தோழிமார் சிலர் நிலைமையைத் தலைவியிடம் கூறுகின்றனர். தலைவி தன் தாய் தந்தையராலும், உற்றார் உறவினராலும் தனக்கு என்ன கேடுகள் வருமோ என்று அஞ்சி நடுங்குகிறாள்.

மாலைப்பொழுதில், சோலையில் தலைவனைத் தனியே காணும்போது தமது களவொழுக்கம் ஊரார்க்கு எப்படியோ தெரிந்துவிட்டது என்று சொல்லி அச்சத்தால் அழத்தொடங்குகிறாள். தலைவன், இன்றிரவே இருவரும் வெளியூருக்குப் புறப்பட்டுப் போய்விடலாம் என்று சொல்லி அவளைத் தேற்றுகிறான்.

சொல்லிவைத்துக் கொண்டதற்கேற்ப இருவரும் மறுநாள் பொழுது விடிவதற்கு முன்பே யாருக்கும் தெரியாமல் சோலைக்கு வந்து ஒருவரையொருவர் கண்டுகொண்டு வெளியூருக்குப் பயணமாகிறார்கள்.

உப்பங்கழிகளிலிருந்து புலால்நாற்றம் வீச அதனை மறைக்கும் அளவில் புன்னை மரங்களினின்றும் மணல்மேல் வீழ்ந்துகிடக்கும் மலர்கள் தேன் மணத்தைப் பரப்ப, கடற்கரையின் தொந்தி மணலில் இருவரும் மெல்லநடந்து செல்கின்றனர். வழியில் கிடைக்கும் காய் கனி கிழங்குகளையே உணவாக உட்கொள்கிறார்கள். கடற்கரையோரத்திலேயே நீண்ட தொலைவு நடந்து, பின் பருக்கைக் கற்கள் மிகவாக நிரம்பிய காட்டுக்குள் புகுகிறார்கள். காட்டுக்குள் புகும்போது வெய்யில் மிகவாக எரிக்கும் நண்பகல்வேளை வந்துசேர்கிறது. வெய்யிலோ கொளுத்திக் கொண்டிருக்கிறது. வானமோ வெள்ளைவெளேரென்று காட்சியளிக்கிறது. எங்குபார்த்தாலும் புத்துக்களும் புதர்களும் நிரம்பிக் கிடக்கின்றன. மரஞ் செடி கொடிகளெல்லாம் பட்டுப்போய்க் கிடக்கின்றன. பெரிய பெரிய ஆலமரங்கள் மட்டும் அங் கொன்றும் இங்கொன்றுமாகச்சிறிதளவு நிழல் தந்து கொண்டிருக்கின்றன. நீண்ட தொலைவு நடந்தே பழக்கப்படாத, அதுவும் கடும்வெய்யி லில் நடந்து பார்க்காத, அதிலும் பருக்கைக் கற்களின் மீது நடந்தறியாத தலைவி மிகவும் வருந்துகிறாள். சிறிது தொலைவு மெல்ல மெல்ல அடியெடுத்துவைப்பாள்; பிறகு துடி துடித்து, உடல்சோர்ந்து அப்படியே உட் கார்ந்து விடுவாள். தலைவன் அவளை அணைத்து, வாரித் தூக்கி நிறுத்தித் தாங்கிப் பிடித்துக் கொண்டே அழைத்துச் சென்று ஒரு ஆலமரத்து நிழலில் தங்கவைக்கிறான். தலைவி சோர்ந்து படுத்துவிடுகிறாள்.

"இன்னும் எவ்வளவு தொலைவு போக வேண்டும்?" என்று அவள் மெல்லிய குரலில் வினவுகிறாள்.

"வந்த அளவைப்போல் இன்னும் ஒரு மடங்கு தொலைவு போகவேண்டும்!" என் கிறான்.

"அவ்வளவு தொலைவை நான் எப்படிக்கடக் கப் போகிறேன்? அதற்குள் நான் இறந்து விடுவேன் என்று கருதுகிறேன்!"

"நீ வருந்துவது எனக்கு எவ்வளவு வருத்த மாக இருக்கிறது தெரியுமா? நீ இப்படி யெல் லாம் பேசக்கூடாது!"

"மனித நடமாட்டமேயில்லாத இந்தக் காட் டைக்காணும்போது எனக்கு ஒரே அச்சமாக இருக்கிறது!"

"நான் உன் அருகில் இருக்கும்போது நீ எதற்காக அஞ்சவேண்டும்? வீணாக உன் உள்ளத்தை வருத்திக்கொள்ளாதே!"

"இப்படிப்பட்ட ஆலமரம் போகும் வழியில் இருக்கின்றனவா?"

"அடுத்தடுத்து ஏராளமாக இருக்கின்றன. அவற்றின் நிழலிலே நாம் தங்கித்தங்கிச் செல்லலாம். நீ ஒன்றுக்கும் அஞ்சாதே?"

"பொழுது போவதற்குள் வேற்றூர் போய்ச் சேர்ந்து விடமுடியுமா?"

"கட்டாயம் பொழுதுபோவதற்குள் போய்ச் சேர்ந்துவிடலாம். உன்னுடைய இளமையும், செல்வச்செழிப்பில் செல்லமாக வளர்ந்த தன்மையும் என்னால் கடுந்தண்டனைக்கு ஆளாக்கப் படுகின்றன. என்மீது கொண்டுள்ள அன்பால் நான் இழைக்கும் கொடுமைகளை மறக்க முயலமாட்டாயா?"

"நான் ஒன்றுக்கும் வருந்தவில்லை. வாருங்கள் போவோம்!" என்று கூறிக்கொண்டே தலைவி எழுந்து நடக்கத்தொடங்கினாள். தலைவன் மகிழ்ச்சியோடு அவளை அணைத்துக் கொண்டு அழைத்துச் செல்கிறான்.

இது நற்றிணை **76** ஆம் செய்யுளின் கருத்தை விரிவாக்கி எழுதப்பட்ட சொல்லோவியமாகும். இச்செய்யுள் பாலைத்திணையைச்சார்ந்த தலைவியோடுகூடி வெளியூருக்குச் செல்லும் தலைவன் இடையில், பாலைநிலத்தில் செல்லும்போது வருந்தும் தலைவிக்கு ஆறுதல் சொல்லுவது என்னும் துறையைச் சேர்ந்ததாகும். இச் செய்யுளை இயற்றியவர் அம்மூவனார் என்ற புலவராவார். இவரது இயற்பெயர் மூவன் என்றும், அம் என்பது இவரது அடைமொழியாக இருக்கக்கூடும் என்றும் கூறுவர். இவர் மேலைக் கடற்கரையைச் சேர்ந்த தொண்டி, மாந்தை முதலிய சேரநாட்டு நகரங்களைச் சிறப்பித்துப் பாடியிருத்தலால், இவர் மேலைக்கடற்கரைஊர் ஒன்றைச் சேர்ந்தவர்என்று எண்ணுதற்கு இடமிருக்கிறது. இப்பொழுதும் அம்மு, திம்மு, திப்பு போன்றபெயர்கள் அப்பகுதியில் மக்களுக்கிடப்பட்டு வழங்கி வருவதால், அம்மூவன என்ற பெயரே இவரது இயற்பெயர் என்று கருதவும் இயலும். பாண்டியநாட்டுக் கொற்கையும், நடுநாட்டுத் திருக்கோவிலூரும், பெண்ணையாறும், சோழநாட்டுக் கோயில் வெண்ணியும் இவரால் பாடப்பட்டுள்ளன. இவரது பாடல்கள் நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, அகநானூறு ஆகியவற்றில் காணக்கிடக்கின்றன.

வருமழை கரந்த வால்நிற விசும்பின்

நுண்துளி மாறிய உலவை அம்காட்டு

ஆல நீழல் அசைவு நீக்கி

அஞ்சுவழி அஞ்சாது அசைவழி அசைஇ

வருந்தா தேகுமதி வாலிழைக் குறுமகள்

இம்மென் பேரலர் நும்மூர்ப் புன்னை

விமலர் உதிர்ந்த தேனாறு புலவின்

கானல் ஆர்மணல் மரீஇக்

கல்லுறச் சிவந்தநின் மெல்லடி உயற்கே.

[பொழிப்புரை: தூய அணிகலன்களையணிந்த இளமடந்தாய்! இந்த மெல்லிய பெரிய பழிச் சொல்லைத் தூற்றுதலையுடைய நினது ஊரின்கண் உள்ள புன்னையின் காம்பில்லாத மலர் மிகுதியாக உதிர்ந்ததனாலே தேன் மணம் வீசுகின்ற புலவினையுடைய உப்பங்கழிக்கரைச் சோலையின் மிக்க மண

லிலே நடந்து, இப்பொழுது கற்கள் பதிதலாலே சிவந்த உன்னுடைய மெல்லிய அடிகள் வருந்தாம லிருத்தற்பொருட்டு, வருகின்ற மழை பெய்யாதொழிந்த வெள்ளிய நிறத்தையுடைய விசும்பிலிருந்தும் விழுகின்ற நுண்ணிய துளிகளும் இல்லையாகும்படி காற்றுச் சுழன்று வீசும் அழகிய காட்டு நெறி யகத்து ஆலமரத்தின் நிழலிலே தங்கி இளைப்பாறி அஞ்சுமிடங் கண்டாலும் ஆங்கு அஞ்சாது, மற்றும் எவ்வெவ்விடத்தே தங்கவேண்டினும் அவ்வவ்விடத்தே தங்கிச் சிறிதும் வருத்தமுறாமல் ஏகு வாயாக.

வால் - வெண்மை; உலவை - சுழற்காற்று; அசைவுநீக்கி - இளைப்பாறி; அசைஇ - தங்கி; குறுமகள் - இளமடந்தை; மரீஇ - நடந்து.]

தலைவனும் தலைவியும் களவொழுக்கக் காலத்திலே கூடிமகிழ்வதும், ஊரில் அலர் எழும்போது, அதற்கு அஞ்சி இருவரும் வேற்றாருக்கு யாருக்கும் தெரியாவண்ணம் ஓடிப் போவதும் பண்டைக்காலத் தமிழ் மக்களால் ஒப்புக்கொள்ளப்பட்ட பழக்கங்களாகும் என்பது இச்செய்யுளால் இனிது பெறப்படும்.

இடையில் பாலைவெளியில் நடந்து செல்லும் போது நடக்கஇயலாமல் தலைவி வருந்தும் தனமையும், தலைவியின் வருத்தத்தைப் போக்க முயலும் தலைவன் அவளுக்கு ஆறுதல் கூறும் தன்மையும் அழகுற இச்செய்யுளில் விளக்கப் பட்டிருக்கின்றன.

தலைவன் தான் உடன் இருப்பதால் அவள் எதற்கும் அஞ்சவேண்டியதில்லை என்னும் கருத்தினை வெளியிடுகிறான். தம்முடைய ஊரை விட்டு நெடுந்தொலைவு வந்துவிட்டதால், இனி உற்றார்உறவினர் வருவார்கள் என்று அச்சங் கொள்ள வேண்டியதில்லை என்னும் கருத்துதோன்ற, இனித்தங்கக்கூடிய இடங்களில் தங்கிச் செல்லலாம் என்று தலைவன் தலைவிக்குக் கூறுகிறான்.

“மன்றம்”

மலர் - 4. 1955 - 56

24 இதழ்கள் கொண்ட உயர்ந்த காலிகோ பைண்ட் செய்யப்பட்ட மலர்கள்

(இத்துடன் 1956 பொங்கல் சிறப்பிதழும் இணைக்கப்பட்டிருக்கிறது)

விலை ரூ. 8-0-0

(தபாற்செலவு ரூ. 2—0—0)

விற்பனைக் கழிவு இல்லை. முன்பணம் அனுப்புதல் வேண்டும்.
வி. பி. கிடையாது.

(மலேயா தோழர்கள் ஒரு புத்தகத்திற்கு ரூ. 12 வீதம் அனுப்பவேண்டும்)

விபரங்கட்கு:

“மன்றம்”

26, நைனியப்பன் தெரு,
மண்ணடி :: சென்னை-1.

அண்டசராசரம்

(46)

சரசுவதி தந்த சாபத்தால், புலத்தியர் விபீடணனுகப் பிறந்தார். ஆனுல் வேருெர் புராணத்தில் விபீடணன் புலத்தியர் பேரன் எனக் கூறப்பட்டிருக்கிறது.

புலத்தியருக்குப் புலகன் என்று ஒரு தம்பி இருந்தான், புலத்தியர் பிரமாவின் காதில் பிறந்தவர், புலகன் பிரமாவின் நாபியில் பிறந்தவர். பிரம புத்திரரான புலகரும் மற்ற பிரம புத்திரர்களைப்போலவே தமையனின் மகளை—தனக்கு மகள் முறையிலிருப்பவளை, மனைவியாக ஆக்கிக்கொண்டார். அவள் பெயர் கதி! கதியின் தந்தையான கர்த்தம பிரசாபதி பிரமாவின் மானச புத்திரர்களில் ஒருவர். புலகர் பிரமபுத்திரர்களில் மற்ெருருவர்! குடும்ப முறையில் புலகரின் சகோதரரின் பெண்ணுகக் கதி இருந்தபோதிலும், புலகரின் மனைவியாக ஆகவேண்டிய நிலை உண்டானது. கடவுள் சாபமோ, நரகங்களில் வாசமோ பிரமாவையோ பிரமாவின் புத்திரர்களையோ தீண்டியதில்லை. புலத்தியருக்கும் கதிக்கும் கின்னர கிம்புருட வம்சத்தினர் பிறந்தனர். பிரமாவின் புத்திரரென்பதும், சகோதரனின் மகளைச் சதியாகக் கொண்டாரென்பதும் தவிறப் பெருமைப்படத்தக்க செயல்கள் எதையும் புலகர் செய்யவில்லை.

பிரமபுத்திரர்களில் பிருகு என்பவரும் ஒருவர். பிரமலோகத்தைச்சேர்ந்த இவர், இளம் [illegible] வயதில் காடடைந்து, தவம்பல புரிந்து முனிவரானர். பிருகு முனிவர் என்று பெயரெடுத்ததும், மணம் புரிந்துகொண்டார். இரண்டு மனைவிகள்; கியாதி, புலோமசை. "குலதர்மப்படி" ஒரு மனைவி. அதாவது கியாதி, பிருகு முனிவருடைய சகோதரரான கர்த்தமருடைய மகள். மற்ற பிரமபுத்திரர்கள் மகள் முறையிலிருப்பவளை மனைவியாகக்கொள்வதை இவரும் நிறைவேற்றி வைத்தார்.

இருவரும், பிருகுவும் கியாதியும் காட்டில் பர்ணசாலையில் இருந்தனர். பிருகுமுனிவர் தவயோகத்தில் ஈடுபட்டிருப்பார், கியாதி அவருக்குப் பணிவிடைகள் புரிந்தபடி இருப்பாள். அப்பொழுது தேவர்க்கும் அசுரர்க்கும் பெருத்த சண்டை நடந்துகொண்டிருந்தது. அசுரர் பலம் பொருந்தியவர்களாதலால், தேவர்கள் மிரண்டோடினர். வழக்கம்போல் அவர்கள் வைகுண்டம்போய், வேண்டித் துதிக்க, பள்ளிகொண்டிருந்த பெருமாள் எழுந்து, தேவர்க்குத்துணையாகப் போரிட வந்தார். விட்டுணுவின் சக்கரத்துக்கு முன் நிற்கமுடியாமல் அசுரர்கள் பின்வாங்கி ஓடினர்களாம். அப்பொழுது சில அசுரர்கள் காட்டிற்கு ஓடி, பிருகு முனிவர்கள் ஆசிரமத்துக்குள் வந்தார்கள், அப்பொழுது கியாதி தனியாக இருந்தாள்.

"அபயம! அபயம்!" என்று ஓடிவந்தவர்கள் கியாதியின் காலடியில் விழுந்தார்கள். அபயமென்று வருபவர்களுக்கு ஆதரவு தருவதேமுறை. அந்தவகையில், கியாதி தன்காலடியில் விழுந்தவர்களுக்கு அபயந்தந்து ஆசிரமத்துக்குள் மறைந்து இருக்கும்படி செய்தாள்.

சிறிதுநேரத்துக்கெல்லாம் விட்டுணுவந்தார். மும்மூர்த்திகளில் ஒருவர் வந்திருக்கிறரே

யென்று கியாதி அவரை வரவேற்று, பூசை செய்து உபசரித்தாள். விருந்து வேடிக்கை பெறவா அவர் வந்தார், அசுரர்களை விரட்டிக் கொண்டு அவர் வந்திருக்கிறார். பூசை உபசரிப்புகளை ஏற்றுக்கொள்ள நேரமின்றி "எங்கே அந்த அசுரர்கள் !" என்று கியாதியை அவர்கேட்டார்.

"எந்த அசுரர்கள்?"

"அவர்கள் இந்தப்பக்கம் ஓடிவந்தார்கள். முக்காலும் இங்கே எங்கேயாவதுதான் மறைந்திருக்கவேண்டும்." விட்டுணு தேடினார், கண்டு பிடிக்கமுடியவில்லை. முக்காலமும், மூவுலகும் தெரிந்த மும்மூர்த்திகளில் ஒருவர், இருந்தாலும் மறைந்திருந்த அசுரர்களைக் கண்டுபிடிக்க முடியவில்லை. அசுரர்கள் மறைந்திருப்பது கியாதிக்குத்தெரிந்திருக்கவேண்டும். விட்டுணு மீண்டும் அவளைக் கேட்டார்.

"பிருகுபத்தினியே! எங்கே அவர்கள்? அவர்கள் ஒளிந்திருப்பது உனக்குத்தெரியுமா, தெரியாதா?"

கியாதி "தெரியும்!" என்று சொன்னாள். "அப்படியானால் சீக்கிரம் மறைந்திருக்குமிடத்தைச் சொல்! நான் அவர்களைக் கொன்று குவித்துவிடுகிறேன்."

"இருக்குமிடம் தெரியும். ஆனால் சொல்ல முடியாது"

"மும்மூர்த்தியான நான் கேட்கிறேன்."

"யாராக இருந்தாலும் சொல்லமுடியாது"

"அவர்கள் அசுரர்கள்."

"அப்படியிருந்தாலும், அபயங்கொடுத்து விட்டேன் காட்டிக்கொடுப்பது தர்மமாகாது',

"அப்படியானால் ஒளித்து வைத்திருப்பது நீதான் !"

"ஆமாம் !"

"உனக்குக் கெடுதி வரப்போகிறது, நான் சொல்வதைக்கேள். அசுரர்களை என்னிடம் காட்டிக்கொடுத்துவிடு."

"என்ன நேர்ந்தாலும் நான் கொடுத்த அபய வார்த்தையைக் காப்பற்ற வேண்டும்."

திருமால் வாதாடினார் கியாதி எதற்கும் பணியாமல் இருந்தாள். திருமாலுக்குக் கோபம்வந்தது. உடனே தமது சக்கரத்தை எடுத்து வீசினார், கியாதியின் தலை அறுந்து விழுந்தது.

கியாதி செய்தது சரியென்று தோன்றும். அபயம் என்று வந்தவர்களுக்கு ஆதரவு தருவது முறையென்று கொள்ளப்படும். மும்மூர்த்திகளில் ஒருவரென்றாலும், கொடுத்த வாக்கைக் காப்பற்ற முயன்றவளைக் கொன்றது— அதிலும்பெண்ஒருத்தியைக்கொன்றது பெருந்தவறு என்று நேர்மையுணர்ந்தவர்கள் சொல்வார்கள். ஆனால் புராண இதிகாசங்கள் கியாதியின் தலையை வெட்டியதால், விட்டுணுவுக்குப் புகழ் அதிகமாயிற்று என்று சொல்கின்றன. கம்பரும்,தலைவெட்டியசெயலைப் புகழ்ந்து பாடுகின்றார். தாடகையைப் பார்க்கும்பொழுது பெண்ணுடன் சண்டையிடலாமா என்ற ஐயம், இராமபிரானுக்கு உண்டாகிறது. விசுவாமித்திரர் அவனைத் தேற்றும்வகையில், பெண்ணைக்கொலைசெய்வதினாலே பாவம்வராது என்பதற்கு மேற்கோளாகக் கியாதி கொல்லப்பட்ட கதையைச்சொல்லுகிறார், இராமாயணக் கதையின்படி தாடகை, கொடுமைநிறைந்தவளாகச்சித்தரிக்கப்படுகிறாள். ஆனால் அடைக்கலம் புகுந்தவர்களைக் காப்பாற்றியதைத்தவிர, வேறெந்தக் குற்றமும் கியாதி மீது காணப்படவில்லை. இருந்தாலும் கியாதியைக் கொன்றது கம்பரால் பாராட்டிப் பாடப்பட்டுள்ளது.

> "பிருகு வென்னும் பெருந்தவன் தன்மனை
> வருக யற்கட் கியாதிவல் லசுரர்க்கு
> உருகு காத லுறவுற வாதலே
> கருதி யாவி கவர்ந்தனன் நேமியான்,
>
> (பாலகாண்டம்-தாடகை வதைப்படலம்)

"பிருகு என்கிற பெரிய தவமுள்ள முனிவனுக்கு மனைவியாகப் பொருந்தியவளும், கயல் மீன் போல் பிறழ்கிற கண்களையுடையவளுமான கியாதி என்பவள், வலியுடைய அசுரர்களுக்கு மனமுருகுதற்குக் காரணமான அன்பு பொருந்த துணையாகஇருப்பதைக்கண்ட சக்கரபாணியான திருமால் உயிரைக் கவர்ந்தான்.

அடைக்கலம் புகுந்தவர்களிடம் அன்பு பாராட்டி அவள் தன் வாக்கைக் காத்தாள். அரிபரந்தாமன் அவள் தலையை வெட்டினார். அதனால் திருமாலுக்கு மாசு உண்டாகவில்லை. மாறாகப் பெரும்புகழ் வளர்ந்ததாம். கம்பரும் அதை ஆதரித்து எழுதியுள்ளார். மேற்கூறிய இரண்டு பாடல்களுக்கப்புறம், "ஆதலரல் அரிக்கு...ஓது கீர்த்தி யுண்டாயதல்லாதிடைஏதமென்பன வெய்தியவோசொலாய்." என்று, அரிக்கு அதிகக்கீர்த்தி உண்டானதல்லாமல், பழிஏதும் நேரவில்லை என்று கவிச்சக்ரவர்த்தி கம்பர் கூறுகிறார். இவ்வாறு பெண்ணைக் கொல்வது பாபமில்லை யென்று விசுவா

மித்திரன் எடுத்துக்கூற, உபதேசம்பெற்ற இராமன் தாடகை மீது அம்பெய்து கொல்கிறான்.

புராணிகர்களும் இதிகாசக்காரர்களும், கியாதியைக் கொன்ற அரிக்குப் புகழ்மாலைகள் சூட்டினாலும், இவளுடைய கணவரான பிருகுமுனிவர் திருமாலைச் சும்மாவிடவில்லை. வெளிச்சென்றிருந்த பிருகுமுனிவர், பர்ணசாலைக்குத் திரும்பியதும் துண்டிக்கப்பட்டுக்கிடக்கும் மனைவியைப் பார்த்தார், துடிதுடித்தார். முற்றுந்துறந்த முனிவரென்றாலும், அருமைப்பத்தினி கொல்லப்பட்டுக் கிடக்கும் கோரக்காட்சியைப் பார்த்ததும் மனங் கொதித்தது, தனது ஞானதிருட்டியால் அவர்பார்த்தபோதுகொலை செய்தபாதகன், வைகுண்டத்தில் கொலு வீற்றிருப்பது தெரிந்தது. "தேவராயினும் மூவராயினும் என் மனைவியைக் கொன்றவரை விடேன்" என்று தன்தவத்தை முன் அவர் சாபந்தந்தார். அவருடைய சாபத்தால், பத்துப்பிறவிகள் எடுக்கவும், மனைவியை இழந்து வாடவும் விட்டுணு தண்டிக்கப்பட்டார்.

பிருகுவின் பிள்ளைகளில் ஒருவனான சுக்கிரன் தன்தவத்தால், மீண்டும் கியாதிக்கு உயிர் கொடுத்து, தன் தந்தையுடனிருக்க வேண்டினான். கியாதி பழையபடி பர்ணசாலையில் பணிசெய்துவந்தாள். பிருகு தவஞ் செய்தார். இருவருக்கும் குழந்தைகள் பிறந்தன.

பிருகு இரண்டாவது மனைவியான புலோமகை கர்ப்பவதியாக இருக்கும்பொழுது புலோமை என்பவன் அவளைத் தூக்கிச் சென்றான். அப்பொழுது அந்த அநியாயத்தைத் தடுக்காமல் பார்த்துக்கொண்டு அக்னி இருந்ததையும், அதற்குப் பிருகு தந்த சாபத்தையும் முன்பு "அக்னி தேவன்" என்ற தலைப்பின் கீழ் சொல்லப்பட்டுள்ளது. பிருகு-புலோமை பற்றிய கதை மிக நீளமாகப் பாரதம்- ஆதிபர்வத்தில் கூறப்பட்டிருக்கிறது, புலோமை பற்றிய கதையும், பிருகுமுனிவர் வம்சாவளி விவரங்களும் "பௌலோமப் பருவம்" என்ற பருவத்தில் வருகின்றன.

மும்மூர்த்திகளில் மிகமேலானவர் யார் என்று பிருகு முனிவர் கண்டுபிடிக்க ஒருமுறை புறப்பட்டு முதலில் கைலையங்கிரி சென்றார். அங்கு ஆதிசிவனும் பார்வதிதேவியும் மிக ஏகாந்தத்தில் இருந்தார்கள். பிருகு முனிவர் பார்க்கவருவதைக் கண்டு எதிர்கொள்ளாமல் இருந்தபடியால், பிருகு முனிவர் கோபித்தார். தனிமையாக - தன் சதியுடன் இனிமையாக இருக்கும் நேரத்தில் வந்து தொல்லை தருகிறானேயென்று சிவனுக்குப் பிருகுவின் மீது கோபம் உண்டானது. இவ்வாறு கோபங்கொள்பவர் முழுமுதற்கடவுளாக இருக்கமுடியாது. அதிலும் இன்பத்தில் மூழ்கிக்கிடக்கிறார்என்று பிருகுமுனிவர்கோபித்து, தம்மைமதிக்காததால், மனைவியுடன் இன்பந் துய்ப்பதற்கு முக்கியமாக யிருந்த அங்கம் அறுந்து விழக்கடவதென்று சாபங்கொடுத்தார். அது லிங்கவடிவமாக ஆயிற்றென்றும், சிவனின் அம்சமாகப் போற்றப்படுவதாகவும் புராணக்கதை கூறும்.

சிவனைச் சபித்துவிட்டுக் கிளம்பியபிறகு முனிவர், பிரமலோகம் வந்தார். அங்கு பிரமதேவர் நடத்திக்கொண்டிருந்த கேளிக்கைகள் காணக்கூசின. பிருகு அவரைக் கோபித்துக் கொண்டார். பிரமாவும் பதிலுக்குக் கோபித்தார். கோபமோகங்களுக்கு அடிமைப்பட்ட இவர்மேலான மூர்த்தியாக இருக்கமுடியாதென்று நிச்சயித்து, "உனக்குக் கோயில்கள் இல்லாமற் போகக்கடவது!" என்று பிருகு சாபந்தந்தார். பிருகு பிரமாவின் புத்திரர்களில் ஒருவர்! இருந்தாலும் மகன்பார்த்து மனங்கொதித்துச் சாபந்தரத்தக்க நிலையில் பிரமா இருந்தார்.

பிரமா, சிவன் இருவரும் கோபதாபங்களுக்கு அடிமைப்பட்டவர்கள் என்பது வெளிப்பட்டதும், பிருகு வைகுண்டம்வந்தார். அன்றைக்கு என்னவோ திருமால் நல்லநிலைமையில் இருந்தார். பிருகுவின் கோபத்தைப் பார்த்ததும், "ஏதோ விபரீதம்" என்று மனத்துள் நிச்சயித்து, அவரை எதிர்கொண்டு வரவேற்கச் சென்றார். இவரைச் சோதிக்க வேண்டுமென்று, பிருகு முனிவர் வரவேற்கும் திருமாலை உதைத்துத்தள்ளினார். திருமால் அதற்குக் கோபிக்காமல், உதைத்தகாலைப் பிடித்து உபசரித்தார். பிருகு முனிவர் கோபம் நீக்கி, மும்மூர்த்திகளில் திருமால்தான் சத்துவ மூர்த்தி என்று அறிவித்தார்.

சுக்கிரன். தாதா முதலியவர்கள் பிருகுவின் பிள்ளைகள். சுக்கிரன் தவவலிமைகளில் மேம்பட்டு அசுரர்கூட்டத்துக்குக் குருவானான். தாதாவின் வம்சத்தில் மிருகண்டு, மார்க்கண்டேயன் முதலியவர்கள் பிறந்தார்கள், விதாதா வம்சத்தில் பிராணன், வேதசிரன், முதலியவர்கள் வந்தார்கள். இவர்களையல்லாமல் புலோமகையிடம் பிறந்த பிள்ளை சியவனர் என்ற பெயர் பெற்றார். சியவனம் என்றால் நழுவி விழுவது என்று வடமொழியில் பொருள். புலோமை என்பவன் தூக்கிச் சென்றபொழுது கர்ப்பத்திலிருந்து நழுவி

விழுந்தமையால், அந்தக் குழந்தைக்குப் பிரம தேவர் வந்து சியவனர் என்ற பெயரைத்தந் தார். பிருகு வம்சத்தினர் வருணன் சந்ததி யார் என்றும் சொல்லப்படுவார்கள்.

புலோமை, கியாதி இவர்களையல்லாமல், பிருகுவுக்கு வேறொரு மனைவியும் இருந்தாள். மனைவியர்களைப்பிரிந்து, ஒருசமயம் பிருகு யாத்திரை வந்தார். அப்பொழுது ஒரு நாட்டு அரசன் வரவேற்று உபசரித்தான். அந்த அரசனுக்கு அழகிய பெண்கள் இருவர் இருந் தனர். மூத்தபெண்ணைக்கண்டு மோகங் கொண்ட பிருகு, காசிராசனிடம் அவனுடைய பெண்ணைத் தானமாகக்கேட்டார். முனிபுங்க வர் தனது பெண்ணைக்கேட்கிறுரே என்று அரசன் மகிழ்ந்து, கன்னிகாதானம் தந்தான். இரண்டாவது பெண்ணை மற்றொரு அரச னுக்கு மணம் முடித்தான். கணவர்களை யடைந்து நீண்டகாலமாகியும் பிள்ளைப்பேறு இன்றி, இரண்டு அரசகுமாரிகளும் இருந்த னர். பிருகுமனைவி, காசிராசன்மனைவி இரு வரும் பிள்ளைப்பேறில்லா வருத்தத்துடன் ஒன்று கூடி யோசித்தனர். கடைசியாக மூத் தவளின் கணவனை பிருகுமுனிவரிடம் வந்து, இருவரும் முறையிட்டு, புத்திரப்பேறு கேட் டனர். புத்திரப்பேறு உண்டாவதற்கு அந்த முனிவர் புதியதொரு வழியைச் சொன்னுர். தனது பத்தினியைப்பார்த்து "நீ பாலச மரத்தை வலம் வந்து தழுவிக்கொண்டால், பிள்ளைபிறக்கும்!" என்றுர். காசிராசன் மனைவி யைப்பார்த்து "நீ அரச மரத்தைத் தழுவிக் கொண்டால், மகன் பிறப்பான்!" என்று பிருகு முனிவர் சொன்னுர். முனிவர் சொன் னபடி, அந்த மங்கையர் இருவரும் மரங்களைத் தழுவிக்கொண்டனர். ஆனல், தவறுதலாக பிருகு பத்தினி அரசமரத்தையும், காசிராசன் மனைவி பலாச மரத்தையும் தழுவிக்கொண்ட னர். முனிவர் சொன்னது, அரச குமாரனைப் பெற அரசமரம், முனிகுமாரனைப் பெற பலாச மரம். அது மாறித்தழுவியதால், காசிராசன் மனைவிக்கு முனிவருடைய குணங்களுடைய மகனும் பிருகு பத்தினிக்கு அரசகுணமுடைய மகனும் பிறந்தார்கள். அரசமரத்தைத் தழு வியதால், காசிராசன் மனைவிக்குப் பிறந்த வனே பின் விசுவாமித்திரராகப் பெயர் பெற் ருன்.

பிருகு பிரமாவின் மனதில் பிறந்தவரென் றும், பிரமாவின் தொடையில் பிறந்தவரென் றும் இரண்டுவிதமாக அவருடைய பிறப்பு கூறப்படுகிறது.

பிருகுவுக்கு மரீசி என்ற தம்பியிருந்தார். மரீசியும் தவங்கள் செய்து முனிவரானுர், பின் பிரமபுத்திரன் என்ற பெயரை நிலைநாட்ட, தம் அண்ணன் மகள் ஒருத்தியை-அவள் பெயர் கலை-மனைவியாக ஏற்றுக் கொண்டான். மரீசிக்கு ஆறு புத்திரர்கள் இருந்தார்கள். அவர்கள் பிரமலோகத்தில் இருந்தபொழுது அவர்களுடைய பாட்டனுரான பிரமதேவன் சரசுவதியுடனே மணக்கோலத்தில் வந்தார். "மகளைத் தந்தை மணந்துகொள்ளுகிறுரே!" என்று மரீசி புத்திரர்கள் ஆறுபேர்களும் சிரித்தார்களாம். உள்ளதைச் சொல்லியதால், கோபங்கொண்ட பிரமா மரீசி புத்ரர்கள் ஆறு வரையும் பூமியில் பிறக்கவும், பாதாளத்தில் அழுந்தவும் சாபமிட்டாராம். அவர்கள் பிர கலாதனுக்குத் தம்பியராகப் பிறந்து, அதற் கடுத்த சென்மத்தில் தேவகியிடம் கண்ண னுக்கு மூத்தவர்களாகப் பிறந்தனராம். பிர மலோகத்தில் முறைதவறி நடக்கும் திரு மணங்களைக் கண்டித்ததால் - கண்டிக்கக் கூடவில்லை, வேடிக்கையாகச் சிரித்ததால் மரீசி புத்திரர்களுக்குத் தண்டனை கிடைத் தது! ஆனல் மரீசிக்கு மற்றொரு மகன் இருந் தான்! அவன் பெயர் காசிபன், அவன் தனக்குத் தாய்முறையிலிருந்த பதின்மூன்று பேர்களை மனைவிகளாக கொண்டான். எப்படி யெனில்பிரமபுத்திரரானகர்த்தமபிரசாபதியின மகள் வயிற்று மகன் காசிபன். பிரமபுத்திரர்க ளுள் தக்கன்என்பவருக்கு அறுபதுபெண்கள் இருந்தனர். அவர்கள் மரீசிக்குத் தாய் முறையில் சிறிய தாயார்களாகவும், தந்தை முறையில் தங்கைகளாகவும் ஆகவேண்டும். ஆனல் புராணங்கூறுகிறது, அந்த உறவு முறைகளைப் பாராமல், காசிபன் பதின்மூன்று பெண்களையும் மனைவிகளாக்கிக் கொண்டா னென்று அவர்களைப்பார்த்து யாதும் சாப மிடவுமில்லை, தண்டனை தரவுமில்லை! காசிபர் பற்றிய கதைகள் சப்த இருடிகளைப் பற்றிக் கூறுமிடத்து உள்ளன.

தக்கன் பிரமனுடைய கட்டைவிரலிலிருந்து பிறந்தவன். இவனுக்கு மனைவியாகவந்தவள் தரணி. தரணியாரென்று பார்த்தால், அவள் பிரமனுடைய மகள்! பிரமபுத்திரனும், பிரமபுத் திரியும் - அண்ணனும் தங்கையும் - கணவன் மனைவியானுர்கள்! பிரமலோக வழக்கம், புரா ணக் கதை. யாரும் ஏதும் சொல்லமுடியாது. தக்கனும் தரணியும், முதலில் அண்ணன் தங் கையாக வளர்ந்தபோதிலும், கணவன் மனைவி யானபின் காதல்வளர்ந்தது, காமவிளையாட்டு களில் மட்டற்ற ஆர்வங்காட்டினுர்கள், பிள்ளை கள் பிறந்தன, சுமார் ஆயிரம்வரை! அந்த அளவு இல்லறதர்மம் நடந்தது. ஆனல் இந்த ஆயிரம் பிள்ளைகளும் வளர்ந்துவரும்

பருவத்தில், நாரதர் அவர்களிடம் போய் துறவறத்தின் மேன்மையைப் போதிக்க, அந்த நூறுபேர்களும் காவியுடையுடன் காட்டுக்குப் போய்விட்டார்கள். பிள்ளைகள் துறவிகளான தைக்கண்டு வருத்தப்பட்ட தக்கன் மறுபடியும் தன்மனைவியிடம் 60 பெண்களைப் பெற்ருன். அந்தப்பெண்களில் 13 பேர்களைத் தன் அண்ணனை காசிபனுக்கும், தருமப்பிரசாபதிக்கு 10 பெண்களையும், சந்திரனுக்கு 27 பெண்களையும், தாட்சபர் எனபவருக்கு 4 பெண்களையும், ஆங்கிரசு, மற்றும் இருவருக்கு ஆறு பெண்களையும் கன்னிகாதானம் கொடுத்தான்.

இவ்வளவு பெண்களையும், பிள்ளைகளையும் பெற்றுவளர்த்ததுடன் திருப்தி அடையாமல், தக்கன் சிவபெருமானை நோக்கித் தவஞ் செய்தான். சிவன் தோன்றியதும் "பார்வதி என்மகளாகப் பிறக்கவேண்டும்" என்று வரங் கேட்டான். அதன்படி பார்வதி தக்கனின் மகளாகப்பிறந்தாள், தட்சாயணி என்ற பெயரில் வளர்ந்தாள். அவளைச்சிவனுக்கு மணஞ் செய்து, சிவனைத்தன்மருமகனக அடைந்தான். ஒருநாள் தன் மகளைக்காணத் தக்கன் கைலைக்குச் சென்றான். சிவனையும் சக்தியையும் அப்பொழுது பார்க்கமுடியாதென்று பூதகணங்கள் அவனைத் தடுத்துநிறுத்தினர்கள்.

அதனல் கோபங்கொண்ட தக்கன், சிவபெருமானை மதிக்காமல் மற்றதேவர்களை வைத்துக் கொண்ட ஒருயாகம் செய்தான். யாகங்காண வந்த தட்சாயணியையும் அவன் மதித்து வரவேற்கவில்லை. அதனல் வருத்தமுற்ற உமாதேவி, அந்தஇடத்தைச் சுடுகாடாகச் சபித்து, சிவனிடம் போய் முறையிட சிவன் வீரபத்திரர் என்ற கோர உருவத்தைச் சிருட்டித்து அனுப்பினர். வீரபத்திரர் யாகத்தை அழித்ததுடன், தக்கனின் தலையை வெட்டித் தள்ளினர். பின் பிரமன் சிவனை வேண்டிக் கொள்ள, அவர் அருளால் ஆட்டுத்தலையைக் கொண்டுவந்து ஒட்டி தக்கனை உயிர்பெறச் செய்தார். ஆட்டுத்தலையுடன் பிரமபுத்திரன் இருந்தான். பின் பூலோகத்தில் மனிதனகப் பிறந்து, மீண்டும் பிரமலோகம் வந்தான்.

பிரமபுத்திரர்கள் யாரும் ஒழுங்காக இருந்தார் என்பதற்குப் புராணங்கள் இடந்தரவில்லை.

கலைவாணர் பெற்ற பட்டம்

★

கலைவாணர் திரு. என். எஸ். கிருஷ்ணன் அவர்களின் தந்தை இயற்கை யெய்தியகாலை, துக்கம் விசாரிக்க வந்தவர்களில் கவிமணி தேசீய விநாயகம் பிள்ளையும் ஒருவராவார். துக்கம் விசாரித்துவிட்டு புறப்படும்போது அவர் கலைவாணரிடம், "அப்பா போய்விட்டார், சந்தோஷம்" என்று கூறிச் சிரித்தார். அங்கு கூடியிருந்தவர்கள் திகைத்து நின்றனர். இப்படியா துக்கம் விசாரிப்பது என்று யோசிக்கலாயினர். திகைப்புடன் இருந்த கலைவாணரை கவிமணி அணுகி, "என்னப்ப, கிருஷ்ண! விழிக்கிருய்? நான் சொன்னது உண்மை. அப்பா இறந்தமைக்கு வருத்தம்தான். ஆனல் இளவரசர் பட்டத்திற்கு வந்ததுபற்றிச் சந்தோஷம் என்றுதான் சொன்னேன். இப்பொழுது சரிதானே!" என்று விளக்கம் கொடுத்தார்.

சிவப்பு நாணயம்

(அருணன்)

அன்று ஆயுதபூசை. அப்படிச்சொல்லப்படும் நாள். எவனோஒருவன, எதற்கோ ஏற்படுத்திவைத்த அந்த விழாநாள் இன்றும் காரணமின்றியேநடைபெற்றுவருகிறது. இரும்பிற்கு மினுக்கிட்டுப் பொட்டிட்டுப் பூசனைசெய்வார். அது பேசவாபோகிறது! இயந்திரத்திற்குவழிபாடு. ஆனால் இயந்திரத்தைவிட கொடுமையாக உழைத்தும் உடல் நலிந்தும் மெலிபவனுக்கு?...பதில் கிடைக்கப்பெறாமலே பலமுறைகேட்கப்படும் கேள்வி இது. எனினும் அந்தநாளுக்கு விடுமுறையும் இனாமும் கிடைக்கிறதே என்ற காரணத்தால், உழைப்போரும் ஊக்கமுடன் கலந்துகொள்ளுகின்றனர் அவ்விழாவில். அதுமட்டுமன்று, "விழாவேண்டாமென்கிறானே! இன்றுகிடைக்கும் இந்த ஒரு ரூபாய் இவன் தருவானா? "பணம்—பண்புக்கேடான செயலுக்குப் பணியவைக்கிறது. அந்தப்பட்டியலிலே ஒருவன், கையிலே இனாம் பணத்தைப் பெற்றுக்கொண்டு திரும்பினான். அவல், கடலை, பழம், வெற்றிலைபாக்கு, சந்தணம் இவைகளைக் கையிலே சுமக்கும் தன்மையனாய், தன் அலுவலகத்தின்படிக் கட்டுகளைக் கடந்தான். சற்றுமுறுவலித்தன அவன் உதடுகள். அந்தப் பணத்திற்காக ஏற்படுத்திவைத்திருக்கும் செலவுகள்கூட அவனுக்கு மகிழ்வளித்தது. ஒருமுறை சிரித்தான். அடுத்துப் பணம் பேசியது. பணம் பெரும்பாலும் பணம் படைத்தோருக்காகமட்டுமே அவர்கள் சார்பில் பேசும் தன்மையுடையது. இந்தப் பணம் பேசிய பேச்சு வேறுவிதம். அதனால் தான் இந்தப்பராரியிடம் பேசியது. அந்தப் பேச்சைக் கேட்பதற்குரியவர்களும் பஞ்சைகள்தான்.

"அடபாவி! சிரிக்கிறாயேடா! சற்றே சிந்தித்துப்பார்." அவன்கைபதறியது. திகைத்தான். சுற்றுமுற்றும் பார்த்தான். யாரும் பின்னால் நின்று பேசவில்லை. பணமும் பேச்சை நிறுத்தவில்லை. அந்தப் பேச்சின் பொருளைக் கவனித்தான். அதன்மீது படிந்திருந்த சிவப்பு வண்ணம் எத்தனையோ ஏழைகளின் ரத்தம்; சிந்தித்தவாறு நின்றான்.

ஒருதனிமனிதன். அருவருக்கத்தக்க உருவமுடையவன். எட்ட இருந்து பார்த்தால் இருள் வடிவுபெற்று நடந்துவருவது போலிருக்கும். நெருங்கிப்பார்த்தால் ரோகியும் பக்கத்தில் செல்ல அஞ்சும்படியாக இருப்பான். அவனிருக்கும் மாளிகையின் கீழே பல ஒடிந்த இதயங்கள் புதைக்கப்பட்டிருக்கின்றன. அவன் படுத்திருக்கும் பஞ்சணைமெத்தையைத் தாங்கும் கட்டில் எலும்புகளால் செய்யப்பட்டது. அதுமரத்தாலானது தானென்றாலும் அந்த மரங்கள் மனிதனையேஉரமாகக்கொண்டுவளர்ந்தவைகள். அதிலேதான் அவன் உறங்குகிறான். அந்த அறையில் வைக்கப்பட்டிருக்கும் சாடிகளிலெல்லாம் குருதிநிறப்பப்பட்டிருக்கும். அதிலேநிதம்ஒவ்வொருகுவளைகுடிப்பான். உடலிலே ரெத்தம் குறைந்து விட்டதற்காகச் செய்துகொள்ளும் மருத்துவமுறையல்ல அது. அப்படிக்குடிப்பதிலே ஒருதனி ஆனந்தம் அவனுக்கு. குருதிநாற்றம் அறைக்கு வருவோருக்குத் தெரியக்கூடாதென்பதற்காக நறுமணப் புகைமூட்டப்பட்டிருக்கும். அதற்குக் காரணப் பொருள்களாக எதற்கும் எப்போதும் பேசியறியாத கடவுள்படங்கள். உற்றுநோக்குவோருக்கு அந்தப்படங்கள்கூட உண்மை விளக்கங் காட்டும். ஏனெனில் அங்கிருந்த படங்களெல்லாம் திருடு-சூது-வஞ்சனை இவைகளையே உடல்உருவாகக் கொண்ட கண்ணன்படமும், கொலை, ஏமாற்று, பைத்தியம் இவைகளை வரலாற்றுக் கிடமாக்கிய சிவன் படமும்தான். இவைகள் அரியும் சிவமும் ஒன்றென்ற மதவேறுபாடின்மையைக் காட்டுவதற்காக என்று கூறப்பட்டுவந்தது. உண்மையில் அது மதவேறுபாடின்மையை எடுத்துக்காட்டும மதவாதிகளுக்கு, மடிந்தும் உலவித் திரியும் உடைந்தவாழ்வினருக்கு அவனின் கொடுமை விளக்கத்தைச் சுட்டிக்காட்டவே அங்கேயிருந்தன. இவற்றின் நடுவே மனிதஉடல் தாங்கிய, இதயமற்ற அந்த இருள் வடிவம் படுத்திருந்தது.

பேச்சில் தேனொழுகும்-அவற்றின் உட்பொருள்கள் கொடுநஞ்சு. நெற்றியிலே திரு

று; கழுத்திலே ருத்திராக்கம். வாயிலே திருவஞ்செழுத்து இவையனைத்தும், செய்யும் கொடுஞ் செயல்களுக்குத் திரை. இவற்றை எண்ணினன் இறை பெற்றவன்; ஓடினன் அந்த ஒய்யார வாழ்வினனின் இருப்பிடத்தை நாடி.

"அடேபாதகா! பாவி! ஏழைகளின் பிணத்திலே நடப்பவனே! இனி நீ இவ்விதமே அதிக நாள் வாழமுடியாது. உனக்குரிய கடைசிக்காலம் உன்னை நாடிவந்து கொண்டேயிருக்கிறது"

அந்தமனிதன் சிரித்தான். "வாப்பா" என்று வரவேற்றான்.

"சிரிக்காதே! உன்சிரிப்பின் பொருளும் அதற்குப் பலியானவர்களின் தொகையும் எனக்குத்தெரியும். புலியின் சீற்றத்தைப் புள்ளிமான் சிரிப்பென நம்புவதில்லை. உனக்கு எச்சரிக்கை தர — உன் எண்ணத்தையும் செயலையும் மாற்றிக் கொள்ளும்படி உனக்கு அறிவுறுத்த-செய்த கொடுமைகளுக்குரிய பரிகாரம் இதுதானென உணர்த்தவந்திருக்கிறேன். ஓய்வாக இருந்து எண்ணிப்பார். ஓய்வேது உனக்கு? நாளெல்லாம் அடுத்தவரை அழித்து உன் வாழ்வு செழிக்க வழி என்னவென்று கனவிலும் கருதிக்கொண்டிருப்பவனல்லவா நீ! இனியாகிலும் அந்த முறையைமாற்றிக்கொள். உன்னை நம்பியிருப்பவர்களை-நாடி வருபவர்களை நாசம் செய்யாதே! எத்தனை நல்லவர்களை அழித்திருக்கிறாய். அவர்களில்லாது போனால் நீவாழ்ந்திருக்கமுடியுமா - வளர்ந்திருக்க முடியுமா? எங்கோ இருந்தவன் நீ! யாராலும் கருதப்படாதவன்நீ! எதற்கும் தகுதியற்றவன் நீ! அப்பப்பட்ட உன்னைத்தனதென்றுஏற்றுத் தடையின்றிவளரவைத்த தனையன் மக்களை நீ கொடுமைசெய்கிறாய். ஆதரிப்பாரற்று உன்னை அடைக்கலமென்றிருக்கும் அந்த அனாதைகளை அவதிக்குள்ளாக்குகிறாய். நன்றாகச் சிந்தித்துப்பார். ஒருசில ஆண்டுகளுக்கு முன்னோக்கி உன்வாழ்க்கைப்பாதையை எண்ணிப்பார். இன்று அனுபவிக்கிறாயே சுகபோக வாழ்வு, இதுஉன் உழைப்பால்-முயற்சியால்-திறமையால் பெற்றதென்று கூறமுடியுமா உன்னால்? ஆனால் உன் உயர்வுக்கு உரியவர்களெங்கே! அவர்களை உருக்குலைத்துவிட்டாயே உன்மத்தா! உலகவரலாறு தெரிந்திருக்குமே உனக்கு? கொடுமை அதிகநாள் நீடித்ததில்லை-அக்கிரமம் வீழாமல் ஓங்கியதில்லை-வஞ்சகம் வென்றதில்லை; இம்மூன்றின் பிறப்பிடமாக இருக்கிறாய் நீ. ஆதலால்தான் உன்மீது இரக்கப்பட்டுக் கூறுகிறேன். இனியாவது திருந்திவிடு என்று."

இவற்றையெல்லாம் கேட்டு அந்தமனிதன் சிரித்தான். சிரிப்பின் ஒலிஉயர்ந்தது. "சிரிக்காதே-சிரிக்காதே-சிரிக்காதே!" என்று எத்தனை எடுப்பான குரலில் கூவினாலும் அதையெல்லாம் தாண்டி அதற்குமேலும் ஒலித்தது சிரிப்பொலி.

கையிலே சிவப்பு நாணயத்தை ஏந்தி நின்றவன் தன்னுணர்வு பெற்றான். அந்தப் பணத்தைப் பார்த்ததும் அவன் சிந்தனை பறந்தோடிச் சென்று நிகழ்த்திய பேச்சுத்தான் அது. அவ்வாறெல்லாம் கூறவேண்டுமென அவனுக்குத் தோன்றிற்று. பணத்தை அவன் முகத்திலே வீசி எறியவேண்டுமெனக் கருதினான். ஆனால் அடுத்து அவன் வகுத்து வைத்திருக்கும் செலவுகளுக்கு அந்தப் பணம் உதவாமல் போய்விடுமே என்ற ஆசையால் பணத்தைக் கையிலே இறுக மூடிக்கொண்டு நகர்ந்தான். இதுபோன்றுதேவைகளுக்கு ஆட்படும்போது தான் மனிதன பணத்திற்கு அடிமையாய்விடுகிறான் என்பதை அப்போது அவனால் உணரமுடியவில்லை, கூடவில்லை.

வழக்கமாக நடந்துதான் செல்வான். கையிலே காசிருப்பதால் சிறிதளவு தூரமும் மிகையாகத் தென்பட்டது அவன் கருத்துக்கு. பஸ்ஸில் ஏறினான். கண்டெக்டர் அவன் கொடுத்த ஒரு ரூபாய்க்கு வேறு கொடு என்று கேட்டான்.

"இல்லையப்பா! கலர் ஒருமாதிரி என்று எண்ணாதே! இன்று ஆயுதபூசையல்லவா? இறைம் கொடுத்தார்கள். குங்குமம் ஒட்டியிருக்கிறது அவ்வளவுதான்" என்று சமாதானம் கூறினான். "வேறு கொடு" என்றால் கதை சொல்லுகிறாயே" என்று சீறினான் கண்டெக்டர். "வேறு இல்லையே" "அப்படியானால் கீழே இறங்கிவிடு" வழக்கம்போல் நடந்தான். கொடுத்து வைத்ததுதானே கிடைக்கும்" என்ற பழமொழியை வழிநடைச் சிந்தாகப் பாடிக்கொண்டு போனான்.

காப்பிக்கடை-மளிகை-சினிமாத் தியேட்டர் எங்கும் அந்தப் பணம் செல்லுபடியாகவில்லை. மறுநாள் காலையில் தனது அலுவலக முதல்வரிடமே கொண்டுவந்து "இது நீங்கள் இறைம் கொடுத்தது, இது செல்லமாட்டேனென்கிறது" என்று கூறிக்கொடுத்தான். அவர "உம்...யார் சொன்னது, கொடுத்துவைக்க வேண்டுமே! குங்குமம் பட்ட காசு கிடைக்க" என்று கூறிச் சிரித்தவண்ணம் ஒரு ரூபா நோட்டை எடுத்துக் கொடுத்துவிட்டு அந்தப் பணத்தைப் பெட்டியில் வைத்துள்ள வெள்ளிக் குவளையில் போட்டார். வெள்ளியின் ஒளியில் சிவப்பு நாணயம் அதனுள்ளிருந்த நாணயங்களையெல்லாம் சிவப்பாகக் காட்டியது.

வினவும் விளக்கமும்

வினு: நமது அறிவை நாம் காட்டமுடியுமா? காட்ட முடியாததால், அறிவு என்ற ஒன்றே இல்லை என்று கூறுதல் அறிவுடைமையாகுமா? செயலைக் கொண்டு அறிவு உண்டு என்றும், இல்லை என்றும் அளவிடுவதைப்போல அனுமான அளவால் கடவுள் உண்டு என்று சொல்லுவதில் என்ன தவறு?

[இது அருள்நெறிக்கூட்டத்தாரின் 17வது வினு]

விளக்கம்: "நமதுஅறிவை நாம் காட்டமுடியுமா?" என்று வினவப்படுகின்றது. நமது அறிவை, இன்னஉருவோடு கூடிய இன்னது என்று கையால் சுட்டிக்காட்டிக், கண்ணுல் பார்க்க வைக்கமுடியாதே ஒழிய, அதனை இன்னது என்று உணரவைக்க உறுதியாக எவராலும் முடியும்.

'அறிவு' என்ற சொல் 'அறிதல்' என்ற சொல்லை அடிப்படையாகக்கொண்டு எழுந்த சொல்லாகும். அறிதலாவது: அண்டத்தில் உள்ளபொருள்களையும்,அவற்றிடையேநிகழும் நிகழ்ச்சிகளையும் ஐம்பொறிகளால் வாங்கி உள்ளத்தே பதியவைத்தலாகும். அப்படி ஐம்பொறிகளால் வாங்கி உள்ளத்தே பதியவைத்தவைகளை, உள்ளது உள்ளவாறு வைத்து முறைபபடுத்திச் சிந்திப்பதும், ஒன்ருேடு மற்ருென்றைக் கற்பனையால் பொருத்திவைத்துக் கற்பனையாகச் சிந்திப்பதும் ஆருவது அறிவின்பாற் பட்டவைகளாகும். இந்த ஆருவது அறிவைச் சிந்தனைஅறிவு அல்லது பகுத்தறிவு என்று கூறுவர் கற்றறிந்தார். ஐம்புலனுலும், சிந்தனையினுலும பெறப்படும் 'அறிவு' கருத்துணர்த்தும் சொற்கள் வடிவிலும், காட்சிப்பொருள்கள் வடிவிலும், நிகழ்ச்சிகள் வடிவிலும் வெளிப்படுகின்றது. 'அறிவை'த் தன்னந் தனியான தோற்றத்தோடுகூடிய, கையால் நேரடியாகச் சுட்டிக் காட்டிக் கண்ணுல் பார்க்கத்தக்க ஒரு பொருளாகக் காட்ட இயலாதே ஒழிய, மனிதனது [illegible] தும் சொற்கள்-காட்சிப் பொருள்கள்-நிகழ்ச்சிகள் ஆகியவற்றிலே 'அறிவு' கலந்திருக்கும் தன்மையை உறுதியாக உணர்த்தமுடியும்.

'அறிவை'க் கண்ணுல் காணமுடியாவிட்டாலும், கருத்தால் எவராலும் உணரமுடியும் என்றுதான நாம் கூறுகிருேம்.

"காட்டமுடியாததால் அறிவு என்ற ஒன்றே இல்லை என்று கூறுதல் அறிவுடைமையாகுமா!" என்று மேலும் வினவப்படுகின்றது. 'கடவுளை'க் கண்ணுல் காணமுடியவில்லை என்ற காரணம் ஒன்றை மட்டுமே நாம் வைத்துக்கொண்டு, வைதீக மதவாதிகளின் 'கடவுளை மறுத்துரைப்பதாகத், தாமே தம்மனம் போனபோக்கில் எண்ணிக்கொண்டுவிட்ட அருள்நெறித் திருக்கூட்டத்தார், மேற்கண்டபடி வினவை எழுப்பிக்கொண்டு நம்மை மடக்க முற்படுகின்றனர். மதவாதிகள் குறிப்பிடும் 'கடவுள் தன்மைகளி'ல் பலப்பலவற்றையும் நாம் மறுத்துரைக்கிருேம் என்ருல், அவற்றைக் கண்ணுல் காணமுடியவில்லை என்ற ஒரே காரணத்தைக்காட்டி மட்டும் மறுத்துவிடவில்லை; அவை ஐம்புலனறிவுக்கும் பொருந்திவரவில்லை, ஆருவது அறிவாகிய அனுமானித்துக் காணக்கூடிய சிந்தனையறிவுக்கும் பொருந்தி வரவில்லை என்பதற்கான காரணங்கள் பலப்பலவும் காட்டித்தான் அக்கடவுள் தன்மைகளை மறுத்துரைக்கிருேம். மதவாதிகளின் 'கடவுள்' ஆறுஅறிவாலும் ஆராயப்படும் ஆராய்ச்சிக்குப் பொருந்திவராததால் தான் நாம் அந்தக் 'கடவுளை'ப் புறக்கணிக்கிருேம். இந்த நமது விளக்கத்தைச் சரிவரப் புரிந்துகொள்ளாமல் நம்மை மடக்க முற்படும் அருள் நெறித்திருக்கூட்டத்தார், விளக்கத்தின்முன்வந்து நிற்கும்போது, குப்புறக் கவிழ்ந்து பல்லுடைபட்டு மண்ணைக்கவ்வும் இரங்கத்தக்க நிலையை எய்துகின்றனர்.

கண்ணுல் காணும்படி காட்டமுடியாததால் 'அறிவு' என்ற ஒன்று இல்லை என்று கூறுதல் எப்படி அறிவுடைமையாகாதோ, அப்படியே கண்ணுல் காணும்படி காட்டமுடியாததால் 'கடவுள்' என்ற ஒன்று இல்லை என்று [illegible] அறிவுடைமையாகாது என்னும் கருத்துத் தோன்றும்படி அருள்நெறித் திருக் [illegible] கூட்டத்தார் இந்த வினவை எழுப்பிப்பார்க்கின்றனர். 'அறிவை'க் கண்ணுல் காணமுடியா

விட்டாலும் அனுமான அறிவால் உணர்ந்து கொள்ளமுடிகிறது; ஆனால் மதவாதிகளின் 'கடவுளை, அனுமான அறிவாலும் உணர்ந்து கொள்ளமுடியவில்லையே! எனவே தெளிவாக உணர்ந்து கொள்ளக்கூடிய 'அறிவை,' உண்மையாகவே உணர்ந்து கொள்ளமுடியாத மதவாதிகளின் 'கடவுளு'க்கு உவமையாக்கிக் காட்டியிருப்பது பொருந்திவரக்கூடிய ஒன்று அல்ல. பொருத்தமில்லாத உவமையைக் கூறி இடர்படுவதைக்காட்டிலும், நம்மை எதிர்க்க முன்வராமல் வாளாக்கிடத்தல், அருள்நெறித் திருக்கூட்டத்தார்க்கு எவ்வளவோ நன்மை பயப்பதாகும்.

"செயலைக் கொண்டு அறிவு உண்டு என்றும், இல்லை என்றும் அளவிடுவதைப்போல அனுமான அளவால் கடவுள் உண்டு என்று சொல்வதில் என்ன தவறு?" என்று வினவுகின்றனர்.

அண்டத்தின் பொருள்களுக்கும், நிகழ்ச்சிகளுக்கும் அடிமுதற்காரணமாய், நமது மனம் - மொழி-மெய் ஆகியவற்றைக்கடந்து, நம்மால் இன்னதென்று அறிந்து கொள்ள முடியாதபடியும் உணர்ந்து கொள்ள முடியாதபடியும் இருக்கக்கூடிய அடிப்படைஆற்றலுக்குப் பெயர்தான்'**கடவுள்**' என்றால், அந்தக் 'கடவுளை' மறுத்துரைக்கவோ, அந்தக் 'கடவுள்' உண்டு என்று சொல்லுவது தவறு என்றோ கூற நாம் ஒருபோதும் முற்பட்டதில்லை. அனுமான அளவால் ஊகிக்கப்படும் அடிப்படை ஆற்றலாகிய 'கடவுளை' நாம் இல்லை என்று கூற முற்பட்டதில்லை. நாம் எந்தக் 'கடவுளை' இல்லை என்கிறோம் என்றால், ஆரமுது-அக்கார அடிசில்-அவல்-பொறி-சுண்டல்-தோசை - வடை-புளியோதரை - துத்தியோணம்-பால் - பழம் - தேன்-கொழுக்கட்டை-ஒயின்-ரொட்டி- சக்கரை போன்ற பல்வேறுவகை உண்டிகளைவிரும்பி நிற்கும் கடவுளையும், தேர்-திருவிழா-கோயில் குளம் - வாகனம் - வாணவேடிக்கை - பெண்டாட்டி - வைப்பாட்டி - தேவடியாள் - தூபம்-தீபம்-வெண்சாமரம்-ஆடை-அணிகலன் - அபிஷேகம்-ஆராதனை-வந்தனை - வாழ்த்து - வழிபாடு-காணிக்கை - தோட்டம் - துறவு - வயல்-வாய்க்கால்-மானயம் போன்ற பலவற்றையும் வேண்டிநிற்கும் கடவுளையும், மக்களிடத்தில் வந்தனை-வழிபாடு - காணிக்கை ஆகியவற்றை எதிர்பார்க்கிற-தன் விருப்பப்படியே வரந்தருகிற-தன்னை வணங்கியவர்களை மட்டுமே பாதுகாக்கிற-தன்னிடம் கேட்டவர்களுக்கு மட்டுமே எல்லாவசதிகளையும் செய்து கொடுக்கிற கடவுளையும்- இவைபோன்ற இன்னபிற தன்மைகளைக் கொண்ட கடவுளையும் [illegible] இத்தகைய 'கடவுளை' ஏற்றுக்கொள்ள நாம் மறுக்கிறோம் என்றால், மதவாதிகளின் இத்தகைய 'கடவுள்' ஆறறிவு ஆராய்ச்சிக்கு எவ்வகையிலும் பொருந்திவர இல்லை என்பதேயாகும். இத்தகைய 'கடவுள்' உள்ளபடியே இருப்பதாக ஆராய்ச்சி அறிவுக்கோ, தெளிவுணர்வுக்கோ படுவதில்லை. வைதிகர்களின் மூடநம்பிக்கையிலிருந்து தோன்றிய கற்பனையே இந்தக் 'கடவுள்' என்று அனுமானித்தறிய வேண்டி நேரிடுகிறது.

அண்டத்தின் அடிப்படை ஆற்றலுக்குக் '**கடவுள்**' என்று பெயர். என்றால் அந்த அளவிலே 'கடவுளை' அறிந்து கொண்டால் போதும், அதைப்பற்றி வேறு எந்த வகையிலும் கவலைப்படவேண்டிய இன்றியமையாமை இல்லை என்றுதான் பகுத்தறிவுவாதிகள் செப்புகின்றனர்.

அண்டத்தின் அடிப்படை ஆற்றலாகிய 'கடவுள்' உண்டு என்று சொல்லுவதில் எவ்வித தவறுமில்லை; அதற்கு உள்ளம் உண்டு, ஆறறிவு உண்டு, தான் விரும்பிய வண்ணம் செயலாற்றும் திறன்உண்டு என்று சொல்லும்போதுதான், அப்படிச் சொல்லுவது தவறு என்கிறோம்.

* * *

வினா: **"நாடகக்காரர்களா நாட்டை ஆளப்போகின்றனர்? அந்த ஆசாமிகள் எல்லோரும் நாடகக்காரர்கள். அவர்கள் ராஜா, மந்திரி வேஷம் போட ஆசைப்படலாம். மனங்குளிரும் வரை அந்த வேஷத்தை அனுபவிக்கலாம். ஆனால் நாடாளும் மாபெரும் பொறுப்பை நாடகக்காரரிடம் மக்கள் ஒப்படைக்கப் போவதில்லை" என்று திரு காமராசர் அவர்கள் பேசியுள்ளாரே அதுபற்றிய கருத்து என்ன?**

விளக்கம்: திராவிட முன்னேற்றக்கழகத்தின் மீது வசையர்பு தொடுக்கும்முறையில், தோழர் காமராசர் அவர்கள், தம் உளறுவாயினின்றும் குளறுபடியாக உதிர்த்த சொற்களே வினாவில் சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றன.

திராவிட முன்னேற்றக் கழகத்தாரை இழித்தும் பழித்தும் பேசவேண்டும் என்று எண்ணிய தோழர் காமராசர் அவர்கள், நிலை தடுமாறி நாடகக்காரர்களையே இழித்தும் பழித்தும் பேசும் அளவுக்குச் சென்றுள்ளார். நடிக்கும் திறமையை ஒருவன் பெறுவானேயானால் அவன் அந்த நொடியிலேயே நாடாளும் திறமையை அறவே விட்டுவிடுகிறான் என்று [illegible] நாடாளும் கலைக்கும் எங்கும் எப்போதும் [illegible]

என்பதுபோலவும், நடிப்புக்கலையில் சிறந்தோனுக்கு நடாளும் தகுதி எங்கும் எப்பொழுதும் கொடுக்கப்பட்டதேயில்லை என்பது போலவும நடிப்புத் திறமை அறவே அற்ற ஒருவன்தான் நாடாளும் தகுதியைப் பெறமுடியும் என்பது போலவும், நாடாளும் பொறுப்புக்கு நடிப்புத் திறனற்ற ஒருவனைத்தான் மக்கள் பார்த்துத் தேர்ந்தெடுப்பார்கள் என்பது போலவும் எண்ணிக்கொண்டு தமிழகத்தின் முதலமைச்சர் தோழர் காமராசர் உளறிக் கொட்டியிருக்கிறார். இந்தவகையில் மிக்க இரங்கத்தக்கதாயுள்ள இன்றையதமிழகத்தைத்தவிர, உலகில் வேறு எந்தப்பகுதியிலும்வாழும் முதலமைச்சர்கள் இப்படியெல்லாம் உளறிக்கொட்டுவார்கள் என்று அந்தந்த நாட்டுமக்கள் கிஞ்சிற்றும் எதிர்பார்ப்பதேயில்லை. அப்படி எதிர்பார்க்கக் கூடிய முதலமைச்சர் தமிழகத்தில்தான் வாழுகிறார்.

திராவிட முன்னேற்றக் கழகத்திலுள்ள அத்துணைப்பேரும் நாடகக்காரர்கள் என்னும் கருத்துப்பட தோழர் காமராசர் பேசியுள்ளார். அவரது அரசியல் அறிவு எவ்வளவு குறுகிக்காணப்படுகிறது என்பதற்கு இந்தக் கூற்றே சிறந்தஎடுத்துக்காட்டாகும். இலட்சக்கணக்கான உறுப்பினர்களையும், ஆதரவாளர்களையும் கொண்டுள்ள தி. மு. கழகம் நடிப்புக் கலையிலே மிகச்சிறந்த, விரல்விட்டு எண்ணக் கூடிய ஒருசிலரையும் கொண்டிருக்கிறது என்பதுதான உண்மை. நடிப்புத்திறமையை ஒருவன பெற்றிருப்பது ஏதோ இழிதன்மையானபண்பு என்று எண்ணிக்கொண்டுதோழர் காமராசர் கூறியுள்ளார். நாமோ நடிப்புத் திறமையை ஒருவன் பெற்றிருப்பது பெறுதற்கரியதொருபேறு என்றே கருதுகிறோம். நடிப்புக்கலையிலே மிகச் சிறந்த சிலரைத் தி. மு. கழகம் பெற்றிருப்பது வெட்கப்படவேண்டியதொரு நிலைமை என்று நாம் கொள்ளவில்லை, மாறாகப் பெருமைக்கும் புகழுக்கும் உரிய ஒன்றாகவே கருதுகிறோம். நமக்குள்ள கவலையெல்லாம், கழகத்தில்மிகமிகச் சிலர்தானே நடிப்புக்கலையில் தேர்ந்தவர்களாக விளங்குகிறார்கள், கழகத்திலுள்ள அத்துணைப்பேரும் ஏனோ நடிப்புக்கலையில் தேர்ச்சிபெறாது போய்விட்டனர் என்பதேயாகும்.

தி. மு. கழகத்தைச் சேர்ந்தவர்களாகிய நாம் நாடகம் நடிக்கும் திறமையைத்தவிர, அரசியலை அறிதல்-அரசியலைப் பற்றிப் பேசுதல், எழுதுதல் - விவாதித்தல் - அரசியல்நாகரிகம் புரிதல் - நாட்டின் தேவைக்கான அரசியல் பொருளாதார சமுதாயக் கருத்துக்களைப்பற்றிச் சிந்தித்தல் அவற்றிற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்-அரசியல் கட்சியை நடத்திச் செல்லுதல்-நிருவாகப் பொறுப்பை ஏற்றல் போன்ற பல்வேறுதிறமைகளை அறவே பெற்றிருக்கவில்லைஎன்னும் கருத்துப் படத் தோழர் காமராசர் மொழிந்துள்ளார். தி. மு. கழகத்தார் ஆளும் அரசியல் கட்சியினர் பெற்றிருக்கவேண்டிய அவ்வளவு திறமைகளையும் அப்பழுக்கற்ற தன்மையில் கொண்டிருப்பதோடு, மற்ற அரசியல் கட்சியினரிடத்தில் அவ்வளவு அருமையாகக் காண முடியாத நடிப்புத் திறமையை சீரிய உயர்ந்த முறையில் மிக்வான ஒரு பண்பாகக் கொண்டிருக்கின்றனர். நாடகம் ஆடும் தன்மை எவ்வளவு முயன்றாலும் தோழர் காமராசர் போன்ற அரசியல் கட்சியினரால் கையாளமுடியாததாய், அறிஞர் அண்ணா போன்ற அரசியல் கட்சியார்களால் மட்டுமே திறம்படக் கையாளத்தக்க சீரிய பண்பாக இருந்து வருவதாகும். எட்டாத பழத்துக்குக் கொட்டாவிவிட்ட நரி ஒன்று "சீச்சி! இந்தப்பழம் புளிக்கும்" என்றதாம் என்று கதைஒன்று சொல்லுவார்களே, அந்தத்தன்மைக்கு ஒரு எடுத்துக்காட்டு வேண்டுமானால், தோழர் காமராசரையே மேற்குறிப்பிட்ட வகையில் கொள்ளலாம்.

"நாடகக்காரர்கள் நாடு ஆளுவதா?" என்று கேட்கிறார் தோழர் காமராசர். இன்றுள்ள நிலையில், நாடாள எந்தத்தகுதியும் திறமையும் அற்றவரும் வந்துவிட முடியும்; ஆனால் நாடகம் ஆட எல்லோரும் வந்துவிடமுடியாதே! நடிக்கும் திறமைபடைத்தவர் மட்டுந்தான் நாடகம் ஆடமுடியும். நாடாள யாரும் வந்துவிடமுடியும் என்பதற்குச் சீரிய எடுத்துக்காட்டாக விளங்குபவரும் அவர்தான்; நாடகம்ஆட எவரும் வந்துவிடமுடியாது என்பதற்குச் சீரிய எடுத்துக்காட்டாக விளங்குபவரும் அவர்தான. நாடாள ஒருவன் இருபத்தோரு வயது வளர்ந்துவிட்டால் போதுமானது; அவன் முட்டாளாக இருந்தாலும் முரடனாக இருந்தாலும், அயோக்கியனாக இருந்தாலும் அசிங்கமானவனாக இருந்தாலும், நாகரிகமற்றவனாக இருந்தாலும், பண்பாடற்றவனாக இருந்தாலும்ஆட்சிமணையில்ஏறிவிடமுடியும். ஆனால் தேவையான அளவுக்கு அழகும், நடிப்புத்திறமையும் பெற்றவன்தான் நாடகமேடை ஏற முடியும். மற்றவர்கள் ஏற முடியாதே! நாடாளுவதற்குத் தேவை என்று இன்றுள்ள நிலையில் கருதப்படுகின்ற திறமையைவிட, நாடகம் ஆடுவதற்குத் தேவை என்று கருதப்படுகின்ற திறமை மிக அருமையானதாகும் என்பதை ஏனோ தோழர் காமராசர் புரிந்து கொள்ள

வில்லை! அவரால் நாடாளமுடிகிறது; ஆனால் நாடகம் ஆடமுடியாதே! அதற்குத் தேவையான அழகும் திறமையும் வேண்டுமே! வண்ணப்பொடி பூசினால் அது முகத்தில் ஒட்ட வேண்டுமே! தோழர் காமராசர் முகத்தில் அதுதானுங்கூட ஒட்டாதுபோலிருக்கிறதே!

“கழகத்தார் ராஜா மந்திரிவேஷம் போட ஆசைப்படலாம்” என்று அவர் அறிவுரை கூறுகிறார்! நாடகத்தில் வரும் ராசா, மந்திரி ஆகியவர்கள் கூட அந்தநேரத்தில் வீரமாகவும், தீரமாகவும், திறமையாகவும், நீதியாகவும், நேர்மையாகவும், நாணயமாகவும், நாகரிகமாகவும், பண்போடும், தன்மானத்தோடும் நடந்துகொள்ள முடிகிறது. ஆனால் நாடாள வந்துள்ள தோழர் காமராசரால் அதுதானும்கூட இயலவில்லையே!

நாடகம் ஆடத்தெரியாத தோழர் காமராசரைப்போன்றவர்களைவிட, நாடகம் ஆடத்தெரிந்த அறிஞர் அண்ணாவைப் போன்றவர்கள் மற்றெல்லா திறமைகளிலும் கூட சிறந்துதான் விளங்குகிறார்கள் என்பதை நாடு நன்கு அறியும்.

நாடகம் ஆடத்தெரியாத ஒரு அளவான அரசியல் வாதியைவிட, நாடகம் ஆடத்தெரிந்த அதேஅளவான அரசியல்வாதி திறமை மிக்கவனாகத்தான் இருக்கவேண்டும். தோழர் காமராசரே நாடகம் ஆடும் திறமையைப்பெற்றவர் என்றால், இன்றைக்கு அவர் காணப்படுவதைவிட சற்றுதிறமையுடையவர் என்றுதான் கொள்ளப்படும். எனவே நாடகம் ஆடும் திறமையை அரசியல்வாதி பூண்டிருப்பது சிறப்புக்குரிய பண்பே ஒழிய, பழிப்புக்குரியதல்ல என்பதை நல்லறிவுபடைத்தோர் ஒப்புக்கொள்ளவேசெய்வர்.

* * *

வினா: **“வரி இல்லாமலே ஆட்சி நடத்துவோம் என்று தி. மு. கழகம் கூறுகிறது. தனி இராஜ்யம் கிடைத்தால் அவர்கள் வரிகள் அனைத்தையும் ரத்துசெய்துவிடுவார்களா?” என்று திருச்சியில் பேசிய திரு. காமராசர் குறிப்பிட்டுள்ளாரே அது பற்றிய கருத்து என்ன?**

விளக்கம்: பதவிபோதை தோழர் காமராசருக்கு எந்த அளவுக்கு மயக்கத்தைத் தந்திருக்கிறது என்பதற்கு அவரது கூற்றே ஏற்ற சான்றாகும்.

இல்லதுபுனைந்துகூறிப் பொய்யுரைப்பதிலே அவர் இதுபோது தம்மை வல்லவராக்கிக் கொண்டு வருகிறார். தி. மு. கழகத்தின் மீது இல்லாததையும் பொல்லாததையும் ஓயாமல் எடுத்துக்கூறிக்கொண்டேயிருந்தால், அவையே உண்மையெனப் பொதுமக்களால் நம்பப்பட்டுக் கழகத்தின்மீது பொதுமக்களுக்குவெறுப்பு ஏற்படக் காரணமாக இருக்கக்கூடும் என்று கருதிக் கொண்டு ஏதேதோ பொருத்தமில்லாக் கூற்றுக்களைப்புகன்று கொண்டுவருகிறார்.

“வரி இல்லாமலே ஆட்சிநடத்துவோம்” என்று தி. மு. கழகம் கூறியதாகத் தோழர் காமராசர் கூறுகிறார். தோழர் காமராசரின் பச்சைப்புளுகுக்கு இது சீரிய எடுத்துக்காட்டாகும். “வரி இல்லாமலே ஆட்சிநடத்துவோம்” என்று தி. மு. கழகத்தார் எப்பொழுது கூறினார்கள்? ஏன் கூறப்போகிறார்கள்? அந்த அளவுக்கு அரசியல்முறைதெரியாத, பதவிப்பித்து தலைக்கேறியவர்கள் அல்லரே தி. மு. கழகத்தார்? கழகத்தார் கூறாத ஒரு கூற்றைக் கூறினதாகத் தாமேகற்பனை செய்துகொண்டு, அந்தக் கற்பனையின் மீது நின்றுகொண்டு தம் மனம்போனபோக்கில் பேசிக்களிப்படைகிறார் தோழர் காமராசர். இது எவ்வளவு அரசியல் நாகரிகமற்றசெயல் என்பதை நடுநிலையாளர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

வருமானம் இல்லாமல், அதுவும் வரிகள் மூலம் கிடைக்கும் வருமானம் இல்லாமல், சனநாயகக் குடியரசு ஆட்சி நடைபெறுவது இயலாது என்பதைத் தி. மு. கழகத்தார் ஐயந்திரிபற நன்கு உணர்ந்தேயிருக்கிறார்கள். தோழர் காமராசர் கூற்றுப்படி தி. மு. கழகம் ஆட்சி செய்யப்போவதாக வைத்துக்கொண்டால், கட்டாயம் வரிகளின் மூலம் கிடைக்கும் வருமானத்தை வைத்துக்கொண்டுதான் ஆட்சிசெலுத்தும். தி. மு. கழக ஆட்சியில் விதிக்கப்படுகின்ற வரிகள் ஏழை-எளிய-பாட்டாளிமக்களுக்குச் சுமைகளாக விளங்காமல், பெரும்பாலும் பணம்படைத்தோரிடமிருந்து பெறுவனவாகவேயிருக்கும். நாட்டில் நாளடைவில் பணக்காரர்களும் இல்லை, ஏழைஎளியவர்களும் இல்லை எல்லோரும் ஒரே நிலையினராகத்தான், வறுமையற்ற வளமான வாழ்வில் வாழ்கிறார்கள் என்றநிலை ஏற்படவே தி. மு. கழகம் பாடுபடும். ஆனால் இன்றைய காங்கிரசு ஆட்சியோ பணக்காரர்களை மேலும் பணக்காரர்களாக்கவும், ஏழைகளை மேலும் ஏழைகளாக்கவுந்தான் பயன்பட்டுவருகிறது.

தனிநாடு பெற்றுவிட்டால் எல்லாவரிகளையும் நீக்கிவிடுவார்களா? என்று கேட்கிறார்

தோழர் காமராசர். திராவிடநாடு திரா விடர்க்கு ஆகிவிட்டால் எல்லா வரிகளும் போய்விடும் என்று எந்தத் தி. மு. கழகத் தோழரும் கூறியதில்லை, யாரும் கூருததைத் தாமே கற்பனை செய்துகொண்டு அல்லற்படு கிருர் தோழர் காமராசர். திராவிடம் தனி [illegible] நாடாகி ஆகிவிட்டால்; வடநாடு செல்லும் வரிப் பணங்கள் இங்கேயே பயன்படுத்தப்படும், இங்கு உற்பத்தியும் வருமானமும் பெருக்கப் பட்டு வாழ்க்கைத்தரம் உயர்த்தப்படும், திரா விடம் வடநாட்டுக்குப் பொருளாதாரத்துறை யில் அடிமைப்பட்டுக்கிடக்கும் நிலை மாறும், இவ்வளவும் நடைபெறும்.

உள்ளபடியே இந்தியாவிற்குச் சுயராஜ் வந்தால், வரிகள் எல்லாம்போகும், தேனு பாலாறும் நாட்டில் கலந்தே ஓடும் என்றெ லாம் வாய்ச்சொல் வீசியவர்களும், இன் புத்தம்புதிய பல வரிகளைப் போட்டுக்கொ டிருப்பவர்களும் தோழர் காமராசரை [illegible] போன்ற காங்கிரஸ்காரர்களைத்தாம், தோ காமராசர் நம்மைப்பார்த்துக் கேட்பதை விட தம்மைப் பார்த்தே கேட்டுக்கொள்வா யானல் அது எவ்வளவோ நலம்பயப்பதா இருக்கும்.

யானைத் தூக்கம்

மற்ற பிராணிகளைப்போல யானை தூங்குமா என்ற கேள்வி பெரும்பாலோ ருக்கு எழத்தான் செய்யும். அடர்ந்த காடுகளில் யானைக்கூட்டத்தைப் பார்க்கும் பொழுது அவைகள் நடுப்பகலில் அசையாமல் நின்று கொண்டிருப்பது தெரியும். ஓய்வு எடுத்துக் கொள்கின்றனவா? ஆம்! ஆழ்ந்த உறக்கத்தில் இருப்பதால் தான் அவ்வாறு ஆடாமல், அசையாமல் நின்றுகொண்டிருக்கின்றன.

மனிதனுல் பிடிக்கப்பட்டு பழக்கப்படாமல் அடர்ந்த காடுகளில் தன்னிச்சை யாகத் திரியும் யானைகள் பகலில் நின்றுகொண்டே தூங்குகின்றன. பழக்கப்பட்ட யானைகள், தோட்டங்களில் வேலைசெய்யும் யானைகள், சர்க்கஸ், மிருகக்காட்சிசாலை இவற்றில் இருக்கும் யானைகள் மனிதர்களுடன் பழகிய காரணத்தால் பகலில் உழைத்து இரவில் உறங்கும் பழக்கத்தை மேற்கொள்கின்றன.

காட்டு யானையின் பொழுது கதிரவன் மறைந்ததும் விடிகிறது. இவைகள் பெரிய யானையிலிருந்து குட்டிவரை ஒன்ருகக் கூட்டம் கூட்டமாக ஒன்றிற்கொன்று பாதுகாப்புடன் இருக்கின்றன. இரவு முழுதும் இரை தேடி அலைகின்றன. தங் களின் வலுவாலும் பளுவாலும் இவைகள பிற மிருகங்களைப்பற்றிக் கவலையின்றி சுற்றித்திரிகின்றன. பயங்கரப் புலிகள்கூட யானைகள் வரும் சத்தம் கேட்டு ஒளிந்துகொள்கின்றன.

யானையின் உடம்பு அதிகப் பளுவுடையதாய் இருந்தபோதிலும் குதிரை யைப்போல வேகமாகப்போக அவற்ருல் முடியும். மலைகளில் வேகமாக ஏறும். யானைக்கு நன்ருக நீச்சல் தெரியும். தொடர்ந்தாற்போல் ஆறு மணிநேரம் களைப்பின்றி யானையால் நீந்தமுடியும். மேலை நாடுகளைக்காட்டிலும் கீழை நாடு களில் யானையின் உபயோகம் மிகப்பல. பெரும் மரங்களை இழுக்கவும், சாலைகள் அமைக்கவும், மிகப் பளுவான சாமான்களைத் தூக்கவும் யானைகள் பயன் படுத்தப்படுகின்றன. இவையெல்லாம் செய்யும் யானைக்கு மனிதன் அளிப்பது ஏறத்தாழ இருநூறு பவுண்டு இலைதழைகளும், ஒருசில பவுண்டு அரிசியும் ஆகும்! சுமார் அறுபது ஆண்டுகள்வரை யானை மேற்சொன்ன வேலைகளைக் களைப்படை யாமல், தேகத்தின் எந்தப்பகுதியும் பழுதுபடாமல் செய்கிறது!

வறுமையிலும் தாழாமை

அஞ்சாநெஞ்சன் பட்டுக்கோட்டை அழகிரிசாமி அவர்கள் தம் வாழ்நாளின் பெரும்பகுதியை வறுமையில்தான் ஓட்டிவந்தார். வறுமையிலும் தாழாமை என்ற சீரிய பண்பிற்கு அவர் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்கினார்.

'மானம்' என்பதற்குத் 'தன்னிலையில் தாழாமையும் தாழ்ந்தவழி உயிர் வாழாமையும்' என்று குறளுரையாசிரியர் பொருள் கூறியுள்ளார். அப்படிப்பட்ட மானத்தை மனித சமூகம் வாழ்க்கைப் பண்பாகக்கொள்ளவேண்டும் என்பதை நாட்டில் பரப்புவதற்காகவே 'தன்மான இயக்கம்' தோன்றிற்று. அதன் சிறந்த படைத்தலைவர்களிலே ஒருவராக இருந்து தன்மானப்பண்பை மிகமிக அழுத்தமாகக் காப்பாற்றி வந்தவர் பட்டுக்கோட்டை அழகிரிசாமி ஆவார்.

கொள்கைதான் அவருக்குப் பெரிதே ஒழிய, பணக்காரன்—படாடோபக்காரன்—பதவியிலிருப்போன் என்பதற்காக அத்தகையோர்க்குப் பணிந்து, நெளிந்து, வளைந்து கொடுக்கும் பண்பு அவரிடத்தில் இருந்ததில்லை. அவர் எப்பொழுதும் நிமிர்ந்துதான் நிற்பார்; நிமிர்ந்துதான் நடப்பார்; நிமிர்ந்துதான் பேசுவார். எதிரிலிருப்பவர்கள் மாபெரும் பதவியிலிருக்கும் பணக்காரத் தலைவர்கள் என்பதற்காக அவர்களுக்குக் கூழைக் கும்பிடு போட்டுப் பல்லிளித்துக்காட்டி நிற்கும் தன்மை அவரிடம் அறவே இருந்ததில்லை. "தோழர் பொப்பிலி! நீர் எங்கிருந்து வருகிறீர்?" "தோழர் சாமியப்பா! நீங்கள் என்ன நினைத்துக்கொண்டிருக்கிறீர்கள்?" "தோழர் பன்னீர்ச் செல்வம்! நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?" "தோழர் பெரியார் இராமசாமி என்ன சொல்லுகிறார்?" என்று எடுப்பான முறையில்தான் விளித்துப் பேசுவார் அவர். தோழர் அழகிரிசாமி அவர்களுக்குப் பணம் தேவைப்படும்போது, நீதிக்கட்சிப் பணக்காரர்கள் யாரையேனும் காணநேரிட்டால், அவர்களிடம் பணத்தைக் கெஞ்சிக் கேட்கமாட்டார்; அதட்டி உருட்டியே கேட்பார். "தோழர் சாமியப்பா? நூறு ரூபாய் இருந்தால் எடுங்கள்!"

"தோழர் முத்தையா! என்பெயருக்கு இருநூறு ரூபாய் அனுப்புங்கள்!" என்றுதான் அதட்டிக் கேட்டு வாங்குவார். அப்படிவாங்கும் பணத்தைத் தனக்கும், தன்னைச்சேர்ந்த நண்பர்களுக்கும் ஆக சிலநாட்களில் செலவழித்துத் தீர்த்துவிடுவார். அவர் இயக்கத்தைச் சேர்ந்த பணம் படைத்தோரைத் தொல்லைக்கு ஆளாக்குவாரேயல்லாமல், ஏழை எளிய நண்பர்களையோ, இயக்கத்தொண்டர்களுக்கோ தொல்லை கொடுக்கமாட்டார். தொண்டர்களுக்கு அவர் எப்பொழுதும் ஆதரவாகவே நிற்பார்.

கையில் காசில்லாமல் அவர் வறுமையில் உழன்ற நிலைகளும் பலப்பல உண்டு. அப்படிப்பட்ட காலங்களில் யாரையேனும் அண்டி வாழவேண்டும் என்று எண்ணமாட்டார். பட்டுக்கோட்டையிலுள்ள மாரியம்மன் கோயில் மண்டபம்தான் அவருக்கு அப்படிப்பட்ட நேரங்களில் தங்குமிடமாகும். மாரியம்மன் கோயில் பூசாரியாக ஒருவர் இருந்தார். அவர்தான் அழகிரிசாமிக்கு உற்ற நண்பர். அந்தப் பூசாரியும், பிற நண்பர்களும்தான் அழகிரிசாமிக்கு அவ்வப்போது உணவு வழங்குவார்கள். தோழர் அழகிரிசாமி அவர்கள் தம் வீட்டைப்பற்றிக் கவலைப்படாமல் மாரியம்மன் கோயில் மண்டபமே கதி என்று இருந்துவிடுவார்.

தோழர் அழகிரிசாமி தம்மைப்பற்றிக் கவலைப்படாமல், தம் நிலையை உயர்த்திக்கொள்ள முயலாமல், நாட்டைத் திருத்தி, நாட்டின் நிலையை உயர்த்திப் பிறகு தம் நிலையை உயர்த்திக்கொள்ள எண்ணுகிறாரே என்பதை, அந்த மாரியம்மன் கோயில் பூசாரி அடிக்கடி கேலி செய்துகொண்டேயிருப்பார். "கடல்நீர் வற்றினால் கருவாடு தின்னலாம் என்று குடல் வற்றிச் செத்ததாம் கொக்கு!" என்பது அப்பூசாரியின் கேலிக்கூற்றுக்களிலே ஒன்று. தோழர் அழகிரிசாமி அவற்றிற்கெல்லாம் சிரிப்பைத்தான் விடையாக அளிப்பார்.

வறுமையிலும் தாழாத பண்பு அவரிடம் சிறந்து விளங்கியதை அவருடன் நெருங்கிய நண்பர்கள் நன்கு உணர்வார்கள்.

—இரா. நெடுஞ்செழியன்.

Regd. M 6296 MANRAM

மலாயா தமிழர்களுக்கு ஓர் நற்செய்தி!

எம்மொழியிலும் சிறந்த மும்மொழியின் ஏடுகளை செம்மையதாய் விற்பனைக்கு வைத்திருக்கும்—அவ்வை அருமைபெரு நூல் நிலையம் ஒன்றே இக் கம்பாரில் பெருமையுடன் வாங்க! வருக !!

அன்பர்களே! வணக்கம். எங்களிடம்,

* அறிவு பெற அறிஞர்களின் இலக்கிய இதழ்கள்!
* கருத்தூற கவிஞர்களின் காவிய ஏடுகள்!
* அன்றாட நிகழ்ச்சிகளை உடனுக்குடன் தாங்கிவரும், ஆங்கில, மலாய், தமிழ், தினசரி ஏடுகள்!
* குடும்பங்களுக்குப் பிடித்த முதல்தரமான கதைப் புத்தகங்கள்!
* குழந்தைகளின் உள்ளங்களை குளிரவைக்கும், திங்கள்-வார இதழ்கள்; நகைச்சுவை ததும்பும் சிறுகதைப் புத்தகங்கள்!
* பாலர் வகுப்பிலிருந்து, மேல் வகுப்புவரை பயன்படுத்தும் பள்ளிக்கூடப் புத்தகங்கள்!
* சினிமா சம்பந்தமான சிறுகதைகளைத்தாங்கி வெளிவரும் திங்கள் வார இதழ்கள், வசனம், பாட்டுப் புத்தகங்கள்!

முதலியனவும், இன்னும் இதில் குறிப்பிடாத பிரபல வரலாற்று ஏடுகளும் கதைப் புத்தகங்களும் மொத்தமாகவும் சில்லரையாகவும், குறைந்த விலைக்குக் கிடைக்கும்.

குறிப்பு:—தையல் வேலைகளும் செய்துகொடுக்கப்படும்.

N. B. விவரங்களுக்கு:— **அவ்வை புத்தக நிலையம்,**
142, ஜாலன் இட்ரீஸ், கம்பார், (மலாயா)

உரிமையாளர்:—கோ. வரதராசன். டெலிபோன் நெ. 22

AVVAI BOOK STALL
142, JALAN IDRIS, KAMPAR, PERAK, MALAYA.

தமிழ் நாட்டில் தலை சிறந்த

வெண்சங்கு சீயக்காய்தூள்

எங்கும் கிடைக்கும்

எங்களிடம் தயாராகும் மணத்தில் சிறந்த

செல்வம்—ராணி ஊதுபத்திகளை

வாங்கி உபயோகியுங்கள்

தயாரிப்பாளர்:- **வெண்சங்கு சீயக்காய்தூள் தொழிற்சாலை**
3037-38, டபீர் குளம் ரோடு, தஞ்சாவூர்.

"மன்றம்" அச்சகத்தில் (26, நைனியப்பன் தெரு, மண்ணடி, சென்னை-1)
ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்களால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.